# உதயன்

சுடர் 30 கதிர் 289 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 25, வெள்ளிக்கிழமை 11.09.2015


## 105 பயணிகளின் உயிரைக் காத்த இலங்கை விமானி

சென்னை, செப். 11

விமானத்தின் சக்கரத்தில் ஏற்பட்ட பழுது காரணமாக ஏற்படவிருந்த விபத்தில் இருந்து 105 பயணிகளின் உயிரையும் தனது சாமர்த்தியத்தால் காப்பாற்றினார் இலங்கை விமானி ஒருவர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சென்னை விமான நிலையத்தில் இடம்பெற்றுள்ளது. இது குறித்து இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பக்கம் 24.....

## பிரதி அமைச்சர்கள் இருவர் நியமனம்

கொழும்பு, செப்.11

முன்னாள் பிரதமர் தி.மு.ஜயரத்னவின் மகனான நாடாளுமன்ற உறுப்பினர் அநுராத ஹேரத் மகாவலி மற்றும் சுற்றாடல் பிரதியமைச்சராகவும், நாடாளுமன்ற உறுப்பினர் துஷ்மான மித்ரபால புத்தசாசனம் மற்றும் நீதி பிரதி அமைச்சராகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். (த-வ)

## சகல பஸ்களும் நல்லூர் செல்லும்

யாழ்ப்பாணம், செப். 11

நல்லைக் கந்தனின் தேர்த் திருவிழ்ாவான இன்று பக்தர்களின் வசதி கருதி சகல பஸ் சேவைகளும் காலை முதல் நல்லூர் ஆலயத்துக்குச் சென்றே அங்கிருந்து யாழ். மத்திய பஸ் நிலையத்தை அடையும் எனத் தனி

பக்கம் 24.....

## போத்தல் தண்ணீரில் கிறீஸ், காரத்தன்மை

யாழ்ப்பாணம், செப். 11

யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட சில நிறுவனங்களின் குடிதண்ணீரில் கிறீஸ் மற்றும் காரத் தன்மை உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

எழுந்தமானமாக மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் எட்டு நிறுவனங்களின் குடிதண்ணீர் போத்தல்கள், குடிதண்ணீர் மாதிரி கொண்டிருக்க வேண்டிய நியம அளவை மேற்படி நிறுவனங்கள் மீறியுள்ளமை முதல் கட்டமாக கண்டறியப்பட்டுள்ளது. அவற்றுக்கு எதிராக விரைவில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (விரிவு 3 ஆம் பக்கம்)

# இலங்கையை துரத்தும் சனல் 4

### ஜெனிவாவில் இலங்கைக்குப் புதிய தலையிடி மற்றொரு ஆவணப்படம் வெளியிட்டார் மக்ரே



லண்டன், செப்ரெம்பர் 11

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை இம்மாதம் ஜெனிவாவில் ஆரம்பமாகும் மனித உரிமைகள் சபையின் அமர்வில் வெளியிடப்படவுள்ள நிலையில் - இலங்கை அரசுக்கு அதிர்ச்சியளிக்கும் வகையிலும், ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்தும் பொருட்டும் மற்றொரு ஆவணப் படத்தை நேற்று வெளியிட்டுள்ளது லண்டனைத் தலைமையகமாகக் கொண்ட சனல் 4 தொலைக்காட்சி நிறுவனம்.

பக்கம் 24.....

## ஆரியரத்ன, ராதிகா, அஸீஸ் அரசமைப்புப் பேரவைக்கு



கொழும்பு, செப்.11

அரசமைப்புப் பேரவைக்கான சிவில் பிரதிநிதிகளுக்காக கலாநிதி ஏ.டீ. ஆரியரத்ன, கலாநிதி ராதிகா குமாரசுவாமி மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர் ஷிப்லி அஸீஸ் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு பரிந்துரைக்கப்பட்டுள்ள சிவில் பிரதிநிதிகளின் பெயர்கள் அங்கீகாரத்துக்கென எதிர்வரும் 22ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் அரசமைப்புப் பேரவைக்கு

பக்கம் 24.....

## வடக்கின் தேவைகளை ஆராய சந்திரிகா தலைமையில் குழு

### யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களுக்கு எதிர்வரும் 21 ஆம் திகதி நேரில் பயணம்

யாழ்ப்பாணம், செப். 11

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் தேவைகள் - அபிவிருத்தி வேலைகள் தொடர்பில் ஆராய்வதற்காக, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தலைமையிலான குழுவினர் எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப் பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள், தமிழ் மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பு வதற்குரிய நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த கோரிக்கைக்கு அமைய, முன்னாள் ஜனாதிபதி சந்தி

பக்கம் 24.....

## ஜனநாயகத்தின் அற்புதம் இலங்கையில் கண்டேன்

### சொல்கிறார் ரிச்சர்ட் ஆர்மிரேஜ்



கொழும்பு, செப். 11

இலங்கைக்கு ஜனநாயகம் எவ்வளவு பொருத்தமுடையதாக இருக்கிறது என்பதைக் காண முடிந்துள்ளதாக, அமெரிக்காவின் முன்னாள் பிரதி இராஜாங்கச் செயலர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் தெரிவித்துள்ளார். கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், இலங்கை - அமெரிக்கா இடையிலான எதிர்கால உறவுகள்

பக்கம் 24.....

## நல்லைக் கந்தனின் தேர்ப்பவனி இன்று

யாழ்ப்பாணம், செப்.11

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தனின் வருடாந்த தேர்த் திருவிழா இன்று காலை இடம்பெறுகின்றது .

காலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று 7.00மணிக்குக் கந்தன் தேர் ஏறி

பக்கம் 24.....

## நல்லூர்த் திருவிழாவில் 650 பொலிஸார் கடமை

யாழ்ப்பாணம், செப். 11

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுமார் 350 பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் வெளி மாவட்டங்களிலிருந்து மேலதிகமாக 300 பொலிஸ் உத்தியோகத்தர்கள் விசேட கடமைக்காக அழைக்கப்பட்டுச் சுமார் 650 பொலிஸார் வரை நல்லூரில் கடமையில்

பக்கம் 24.....

## இலங்கைக்குப் போர்க்கப்பல் வழங்குவது முடிவாகவில்லை

### மத்திய அரசு நீதிமன்றுக்கு அறிவிப்பு

சென்னை, செப். 11

இலங்கைக்குப் போர்க் கப்பல் வழங்குவது குறித்து முடிவாகவில்லை என உயர் நீதிமன்றக் கிளையில் மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில், மதுரை மாவட்டம் மேலூர் எட்டிமங்கலத்தைச் சேர்ந்த சட்டத்தரணி ஸ்ராலின் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அதில், இந்திய அரசு இலங்கைக்கு 2 போர்க் கப்பல்களை விற்பனை செய்ய முடிவு செய்திருந்தது. இதை அப்போதைய மத்திய அமைச்சர் நாராயணசாமியும் உறுதி செய்திருந்தார். இந்தக் கப்பலை வாங்கிய பின் இலங்கைக் கடற்படையினர் இந்திய மீனவர்களுக்கு எதிராகவே பயன்படுத்துவர். ஏற்கனவே, இலங்கை அரசுக்கு எதிராகத் தமிழகத்தில் எதிர்ப்பு அலை உள்ளது. தமிழக சட்டசபையிலும் இலங்

பக்கம் 24.....

## கிரிதல படை முகாமுள் சி.ஐ.டி. செல்லத் தடை

கொழும்பு, செப். 11

கடத்தப்பட்டவர்களைத் தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டதாகச் சொல்லப்படும் கிரிதல இராணுவ முகாமுக்குள் புகுந்து தேடுதல் நடத்துவதற்குக் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு, இராணுவம் அனுமதி மறுத்துள்ளது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டுக் காணாமற்போகச் செய்யப்பட்டது தொடர்பாக விசாரித்து வரும், குற்றப் புலனாய்வுப் பிரிவினர், கிரிதல இராணுவ முகாமுக்குள் தேடுதலை நடத்த ஹோமகம நீதிவான் நீதிமன்றத்தில் அனுமதி கோரியிருந்தனர்.

ஆனால், நீதிமன்றத்தில் இராணுவத் தரப்பில் முன்னிலையாகியிருந்த சட்டவாளர் அதற்கு எதிர்ப்பைத் தெரிவித்தார்.

பக்கம் 24.....






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணையை வலியுறுத்தி நடைபவனி

கொழும்பு, செப்.11

இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில்இன அழிப்பிற்கு சர்வ தேச விசாரணையே வேண்டும் என வலியுறுத்தியும், ஜெனிவா வில் தமிழருக்கு நீதி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியும் நேற்று கிளிநொச்சியில் நடை பவனி ஆரம்பமானது.

இறுதிப் போரின்போது இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புக்கு சர்வதேச விசாரணை பொறி முறையே வேண்டும் என்ற கோரிக்கையுடன் கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகத்தில் இருந்து ஆரம் பித்துள்ள குறித்த நடை பவனியா னது யாழ்ப்பாணம் நல்லூர் கிட்டு பூங்காவைச் சென்றடையவுள்ளது.



இந்த நடை பவனியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் கள், தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறி தரன், வடக்கு மாகாணசபை உறுப் பினர்களான அனந்தி சசிதரன், சிவாஜி லிங்கம், பிரதேசசபை தவிசாளர் கள், உப தவிசாளர்கள் எனப் பலரும் இணைந்துள்ளனர். (ற-21, ரி3)

# தண்டப்பணம் விதிக்குமாறு பொலிஸாருக்கு பணிக்கவில்லை

## காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 11

போக்குவரத்துப் பொலிஸாரை நாம் தண்டப் பணம் விதிக்குமாறு பணிக்கவில்லை. வீதி ஒழுங்குக்கு முரணாகச் செயற்படுவர்களுக்கு, விழிப்புணர்வூட்டுமாறே பணித் துள்ளோம். கைவிரல்கள் எல்லாம் ஒன்றாக இருப்பதில்லையே. அது போன்றே, சில போக்குவரத்துப் பொலிஸார் எமது பணிப்புரைக்கு மாறாகச் செயற்பட்டு, தண்டப் பணம் விதிக்கின்றனர். – இவ்வாறு காங் கேசன்துறைப் பொலிஸ் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முனசிங்க தெரிவித்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சிவில் பாது காப்புக் குழுக் கூட்டத்தில் எழுப்பப் பட்ட கேள்விக்கு பதிலளிக்கையி லேயே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

போக்குவரத்துப் பொலிஸார் வீதி களில் மறித்து தண்டப் பணம் அற விடுகின்றனர். இதன் போது எமக் குத் தரப்படும் துண்டில் (தடக்கொல) சிங்கள மொழியில் எழுதித் தருகின் றனர். ஏன் ஆங்கில மொழியில் அவர்கள் எழுதித் தரக் கூடாது?– என்று, கூட்டத்தில் கலந்து கொண்ட ஒருவரால் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த பொலிஸ் அதி காரி, நாம் வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரை தண்டப் பணம் விதிக்குமாறு பணிக்கவில்லை. 30 வருட காலமாக இந்த நடைமுறை கள் எதுவும் இல்லாமல் இருந்த பிரதேசம். எனவே, வீதிப் போக்கு வரத்து விதிமுறைகளை மீறினால், அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் அவர்களுக்கு விளங் கப்படுத்தி விழிப்புணர்வூட்டுமாறே பணித்துள்ளோம்.

கையிலுள்ள விரல்கள் எல்லாம் எவ்வாறு ஒன்றாக இருப்பதில் லையே, அது போன்று எல்லாப் பொலிஸாரும் ஒரே மாதிரிச் செயற் படுவதில்லை. சில பொலிஸார் இவ்வாறு தண்டப் பணம் விதிக்கின் றனர்.

இதன் போது, போக்குவரத்துப் பொலிஸார் கையூட்டுப் பெறுவது தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட் டது. அதற்காகவே, வீதிப் போக்கு வரத்துப் பொலிஸார் சாரதிகளை மறிக்கின்றனர் என்றும் தெரிவிக் கப்பட்டது. இது தொடர்பில் பதில ளித்த பொலிஸ் அதிகாரி, இதனை அனுமதிக்க முடியாது. அவ்வாறு எந்தப் பொலிஸாராவது செயற்பட் டால் உடனடியாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்குத் தெரியப் படுத்துங்கள்– என்றார்.

(ற-5,ரி5)

# வல்லிபுர ஆழ்வாருக்கு நாளை கொடியேற்றம்

யாழ்ப்பாணம், செப். 11

வரலாற்றுச் சிறப்புமிக்க வல் லிபுர ஆழ்வார் கோயில் திரு விழா நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகிறது. மு.ப 10.45 மணிக்கு கொடியேற்றம் நடைபெறவுள் ளது. தொடர்ந்து 16 தினங்கள் திருவிழா இடம்பெறும்.

எதிர்வரும் 20 ஆம் திகதி வெண்ணைத் திருவிழாவும், 21 ஆம் திகதி பிற்பகல் துகில் உரிதல் திருவிழாவும், 22 ஆம் திகதி பாம்புத் திருவிழாவும், 23 ஆம் திகதி கம்சன் போர்த் திருவிழாவும், 24 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 25 ஆம் திகதி சப்பரத் திருவிழா வும் இடம்பெறவுள்ளது.




26 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழா வும், மறுநாள் பிற்பகல் 3 மணிக் குக் கடற்கரைத் தீர்த்தத் திரு விழாவும், 28 ஆம் திகதி பட் டுத் தீர்த்தமும் இடம்பெறும்.

திருவிழாக்களின் போது முற் பகல் பூசை காலை 6.45 மணிக் கும், பிற்பகல் பூசை 3.45 மணிக்கும் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, திருவிழாக் காலங் களில் அன்னதானம் வழங்கப் படவுள்ளது. அதற்கு அன்பளிப் புச் செய்ய விரும்புபவர்கள் தம்முடன் தொடர்புகொள்ளு மாறு ஆலயத்தின் பெரியாழ் வார் ஆச்சிரம மடாதிபதியும் அன்னதான சபையினரும் கேட்டுள்ளனர்.

ஆலயம் பல சமூக நற்பணி களை முன்னெடுத்து வருகிறது. ஆலய திருவிழாவில் 17 நாள்க ளும் அன்னதானம் சிறப்புற வழங்க பண, பொருள் உதவி களை வழங்குமாறும் அல்லது தேசிய சேமிப்பு வங்கியின் பருத் தித்துறைக் கிளையின் கணக்கு இலக்கம் 320195642 எனும் இலக்கத்துக்கு பணம் வைப் பிலிடலாம் என்று ஆலயத்தி னர் மேலும் தெரிவித்துள்ள னர். (ற-4,108)

# சர்வதேச விசாரணையை வலியுறுத்தி மன்னாரில் கையெழுத்து வேட்டை



மன்னார், செப்.11

இலங்கையில் இடம் பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச பொறிமுறையின் கீழ் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி நேற்று வியா ழக்கிழமை மன்னாரில் கையெ ழுத்து வேட்டை நடத்தப்பட்டது.

மன்னார்பிரதான வீதியில் மாவட் டச் செயலகத்துக்கு முன்பாக இந்த நிகழ்வு இடம் பெற்றது. மன்னார் பிரஜைகள் குழு மற்றும் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறி முறையும் தமிழர் செயற்பாட்டுக்குழுவும் இணைந்து குறித்த இதனை ஆரம் பித்து வைத்தனர்.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானு வேல் செபமாலை அடிகளாரின் தலைமையில் இடம்பெற்ற கை யொப்பம் பெறும் நிகழ்வில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டு தங்கள் கையொப் பங்களை இட்டனர்.

(ற-56)

# உணவு கையாளும் நிலையங்கள் சுகாதாரத்தை பேண அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப்.11

யாழ். நகரிலும் மற்றும் நல்லூர் ஆலயச் சுற்றாடலிலும் உள்ள உணவகங்களின் சுகாதார நடை முறைகளைக் கண்காணிக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள் ளன.

உணவகங்களின் உணவு பரிமாற் றங்களில் ஈடுபடும் பணியாளர்கள் கட்டாயம் தலைக்குத் தொப்பி அணிய வேண்டும். அதனைவிட கைகளுக்கு கையுறை அணிவதும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

உணவு தயாரிக்கும் இடங்கள் மிகவும் சுகாதாரமாகப் பேணப்பட வேண்டும். உணவு கையாளும் உபகரணங்கள் நன்றாகக் கழுவ வேண்டும்.

அதைவிட உணவு தயாரிப்பதற்கு பொரித்து எடுப்பதற்கு பயன்படுத் தப்படும் எண்ணெய் (மரக்கறி எண் ணெய்) திரும்ப திரும்பப் பாவிப் பது நிறுத்த வேண்டும்.

இவ்வாறான நடைமுறைகளை உணவகங்கள் கட்டாயம் பின்பற்று வது அவசியம் என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

(ற-17)

# விரிவுரையாளர்கள் தலையீட்டால் விசாரணை மேற்கொள்ளவில்லை

## யாழ்.பல்கலைக் கழக மோதல் சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விளக்கம்

யாழ்ப்பாணம், செப். 11

யாழ்.பல்கலைக்கழக மாணவர் களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தலையிட வேண்டாம் என பல் கலைக் கழக விரிவுரையாளர்கள் கோரியதால் தாம் விசாரணைகள் மேற்கொள்ளவில்லை என கோப் பாய் பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி சஞ்ஜீவ ஜெயக்கொடி தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் வியா ழக்கிழமை காலை சிவில் பாது காப்புக் குழு கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் தொடர் பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வில்லையா? என கேள்வி எழுப் பினார். அதற்கு பதில் அளிக்கும் போதே மேற்கண்டவாறு கோப் பாய் பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்.பல்கலைக் கழக மாணவர் களுக்கு இடையில் நேற்றும் மோதல் இடம்பெற்றுள்ளது. அது தொடர் பில் இதுவரை பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு பதிவு செய்யப் படவில்லை.

நேற்று (நேற்றுமுன்தினம்) நடந்த மோதலின் தொடர்ச்சியாக இன் றும் (நேற்று) மாணவர்கள் தங்க ளுக்கு மோதிக்கொண்டு உள்ளார் கள். முதலில் பல்கலைக் கழக வளா கத்தினுள் மோதிக்கொண்டவர்கள் பின்னர் வீதியில் வந்தும் மோதிக் கொண்டார்கள். மாணவர்களுக்கு இடையிலான மோதல் காரண மாக வீதியில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டதுடன் பொது மக்கள் மற்றும் அப்பகுதியில் உள்ள வியாபார நிலையங்களுக்கும் இடை யூறு ஏற்பட்டது.

அது தொடர்பில் பொலிஸ் நிலை யத்திற்கு தகவல் கிடைத்ததை அடுத்து உடனே நாம் அப்பகுதிக்கு விரைந்தோம். வீதியில் மோதலில் ஈடுபட்டு இருந்த மாணவர்கள் எம்மைக் கண்டதும் பல்கலைக்கழக வளாகத்தினுள் ஓடிவிட்டனர்.

குறித்த மோதல் சம்பவம் தொடர் பில் நாம் அப்பகுதியில் விசா ரணைகளை மேற்கொண்டு இருந்த வேளை அவ்விடத்திற்கு வந்த பல்கலைகழக விரிவுரையாளர் கள் நால்வர் உங்களை யார் கூப் பிட்டது? ஏன் வந்தீர்கள் ? என கேட் டனர். அதனால் நாம் அவ்விடத்தில் மேலதிக விசாரணைகளை மேற் கொள்ளாது திரும்பி விட்டோம். – என்றார்.

அதேவேளை, மாணவர்களின் மோதல் சம்பவத்தால் பாரதூர மான சம்பவங்கள் அப்பகுதியில் நடைபெற்று இருந்தால் அதனை தடுக்க பொலிஸார் தவறி விட்டனர் என பொலிஸார் மீதே குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்டு இருக் கும் எனவும் அவர் அங்கு சுட்டிக் காட்டியுள்ளார்.

(ற-5)

# தெய்வீக இசைப்பேருரை

யாழ்ப்பாணம், செப்.11

நல்லூர் சைவ மகா சபையின் ஏற் பாட்டில் நடைபெறும் கந்தபுராண தெய்வீகத் தொடரிசை பேருரை யில் இருபத்து நான்காம் நாளான இன்று 'சூரசங்காரம்' இடம்பெற வுள்ளது. நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் பி.ப 6.45 மணிக்கு இடம்பெறும் நிகழ்வில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா பக்க வாத்தியசகிதம் இசைப்பேருரை ஆற்றவுள்ளார். (ற-10)

# தெய்வீக இசையரங்கு

நல்லூர் உற்சவகாலத்தை முன் னிட்டு இளங்கலைஞர் மன்றத்தி னர் தெல்லிப்பழை துர்க்காதேவி அனுசரணையுடன் நடத்தும் தெய் வீக இசையரங்கு இன்றும் பி.ப 6.45 மணிமுதல் 8.00 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பாட்டு ஏ.கே.கரு ணாகரன், வயலின், கே.குகபரன், மிருதங்கம் எம்.சிதம்பரநாதன், கெஞ்சிரா ந.சிவசுந்தரசர்மா, முகர் சிங் நசதீஸ்குமார் ஆகியோர் வழங்க வுள்ளனர். நிகழ்வில் அனைவரை யும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட் டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் விற்கப்படும் போத்தல் தண்ணீரில் கிறீஸ், காரத்தன்மை

## 8 நிறுவனங்களுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 11

யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட சில நிறுவனங்களின் குடிதண்ணீரில் கிறீஸ் மற்றும் காரத் தன்மை உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவ்வாறு கண்டறியப்பட்ட குடிதண்ணீர்ப் போத்தல்கள் உடனடியாகவே சந்தையிலிருந்து மீளப் பெறப்பட்டுள்ளன. அத்துடன், குறித்த குடிதண்ணீர்ப் போத்தல்களை உற்பத்தி செய்த எட்டு நிறுவனங்களுக்கு எதிராக விரைவில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இவ்வாறு, யாழ்.மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரி த.வசந்தசேகரன் தெரிவித்தார். யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற, நுகர்வோர் பாதுகாப்புக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதம், குடிதண்ணீர்ப் போத்தல்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன் போது, ஒன்பது நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்பட்ட, குடிதண்ணீர்ப் போத்தல்கள் எழுந்தமானமாக சோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அவை அனைத்தும் ஒரே தொகுதிக்குரியவை.

அவ்வாறு எடுக்கப்பட்ட குடிதண்ணீர்ப் போத்தல்களின் நீர் மாதிரிகள், அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அதனடிப்படையில் இதுவரை எட்டு நிறுவனங்களின் குடிதண்ணீர்ப் போத்தல்களின் மாதிரிகளின் சோதனை முடிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அவற்றில் இரண்டு நிறுவனங்களது குடிதண்ணீர்ப் போத்தல்களில் காரமும், மூன்று நிறுவனங்களது குடிதண்ணீர்ப் போத்தல்களில் கீறிஸ் மற்றும் ஒயிலும், மூன்று நிறுவனங்களது குடிதண்ணீர்ப் போத்தல்களில் காரம், கீறிஸ் மற்றும் ஒயிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் மாதிரி கொண்டிருக்கவேண்டிய நியம அளவை மேற்படி நிறுவனங்கள் மீறியுள்ளமை முதல் கட்டமாகக் கண்டறியப்பட்டுள்ளது. அதையடுத்து, குறித்த நிறுவனங்களின் அந்தத் தொகுதிக்குரிய போத்தல்கள் யாவும் விற்பனைச் சந்தையிலிருந்து மீளப் பெறப்பட்டுள்ளன.

இது தொடர்பில் குறித்த நிறுவனங்கள் தாம் மேற்கொண்ட ஆய்வுகளின் அறிக்கையையும் எமக்குச் சமர்பித்துள்ளனர். இவற்றையும் ஆராய்ந்து வருகின்றோம். எமது தலைமை அலுவலகத்தின் பணிப்புக்கு அமைய விரைவில் குறித்த நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் மேற்கொள்ளப்படுவதுடன், எந்த நிறுவனங்களின் போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் மாதிரி பாதிப்பானவை என்பதும் பகிரங்கப்படுத்தப்படும்.– என்றார்.

இதேவேளை, சுன்னாகம் நிலத்தடி நீர் மாசுப் பிரச்சினையைத் தொடர்ந்து பொதுமக்கள் அதிகளவில் போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீரையே கொள்வனவு செய்து வந்தனர். அதனால் யாழ்ப்பாணத்தில், 30 இற்கு மேற்பட்ட குடிதண்ணீர்ப் போத்தல் விற்பனை செய்யும் நிறு வனங்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளன. (ற–5,ரி5,101,106)

# சட்டத்துக்கு முரணாக இயங்கும் மதுபான விற்பனை நிலையங்கள்

## நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 11

யாழ்.மாவட்டத்தில் சட்டத்துக்கு முரணான வகையில் மதுபான விற்பனை நிலையங்கள் செயற்பட்டு வருவது கண்டறியப்பட்டுள்ளது. இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு மதுவரித் திணைக்களத்துக்கு தெரியப்படுத்தியபோதும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அதையடுத்து இந்த விடயத்தில் வடக்கு ஆளுநர் நேரடியாகத் தலையிட்டு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றார் என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில், சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

'கடந்த தடவை இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில், யாழ்.மாவட்டத்தில் சட்ட விரோதமாக 60 மதுபான நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன. இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. தற்போது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?' என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதில் வழங்கிய அரச அதிபர்,

அடையாளம் காணப்பட்ட மதுபானச் சாலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆலயங்கள் – பாடசாலைகள் மற்றும் அரச அலுவலகங்களிருந்து மதுபான சாலைகள் அமைந்திருக்க வேண்டிய தூரம் தொடர்பில் சோதனை நடத்தப்பட்டது. அதற்கமைய 9 மதுபானச் சாலைகள் சட்டத்துக்கு முரணாக அமைக்கப்பட்டமை கண்டறியப்பட்டது.

குறித்த மதுபானச் சாலைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு மதுவரித் திணைக்களத்திற்கு தெரியப்படுத்திய போதும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த விடயம் தற்போது வடக்கு ஆளுநரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது. அவர் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.– என்றார்.

இந்த விடயம் தொடர்பில், மதுவரித் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அத்தியட்சகருடன் தொடர்புகொள்ள முயற்சித்த போதும் அவர் பதிலளிக்கவில்லை.

(ற–5,ரி5)

# டெங்குக் கட்டுப்பாட்டு செயற்பாடு யாழ்.மாவட்டத்தில் அடுத்த வாரம்



தென்மராட்சி, செப்.11

சுகாதாரத் திணைக்கள டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவினரால் நாட்டில் நேற்று முதல் ஏற்பாடு செய்யப்பட்ட டெங்கு கட்டுப்பாட்டு வாரச் செயற்பாடுகள் யாழ்.மாவட்டத்தில் அடுத்த வாரம் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் எதிர்வரும் 17, 18, 21, 22 ஆகிய தினங்களில் டெங்கு கட்டுப்பாட்டு வாரச் செயற்பாடுகள் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி மீசாலை வடக்குப் பிரிவிலும், 18 ஆம் திகதி மட்டுவில் பிரிவிலும், 22ஆம் திகதி சாவகச்சேரி நகரப் பிரிவிலும், 23 ஆம் திகதி மீசாலைப் பிரிவிலும் டெங்கு கட்டுப்பாட்டு வாரச் செயற்பாடுகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தினங்களில் சுகாதாரப் பகுதியினருடன் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார், படையினர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பல தரப்பினர் இணைந்து வீடுகள் தரிசிப்புக்குச் செல்லவுள்ளனர்.

பரிசோதனைகளின் போது டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான நிலையில் காணப்படும் குடியிருப்புகள், தொழிற்சாலைகள், புதிய கட்டடங்கள் அமைக்கும் இடங்கள் போன்றவற்றின் மீது பொலிஸார் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற–9)

## காவடிகளின் வீதி ஒழுங்குகள் மாற்றம்

யாழ்ப்பாணம், செப்.11

நல்லூர் ஆலயத்தின் வருடாந்த தேர் திருவிழாவை முன்னிட்டு பக்தர்களால் எடுக்கப்படும் காவடி, தூக்குக் காவடி போன்றவை தேர் இருப்பிடத்தை அடைந்த பிற்பாடே ஆலயத்தை அண்மிக்கலாம் என ஆலய நிர்வாகத்தினரும் மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசனும் தெரிவித்துள்ளனர்.

காலை 8 மணிக்கு தேர் இருப்பிடத்தை அடைந்த பின்னர் காவடிகள், தூக்குக் காவடிகள் ஆலயத்தை அண்மிக்கலாம் எனவும், நேர்த்திகள் அனைத்தும் சங்கிலியன் வீதி, கோவில் வீதியூடாக வந்து குபேர வாசலில் நிறைவேற்றப்படவேண்டும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ற–10)



பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதியில் மூன்று மாதங்களுக்கு முன்னர் அசாதாரண காலநிலையால் மூழ்கிய படகொன்று நேற்று இராணுவத்தினரின் உதவியுடன் மீட்கப்பட்டது. இந்தப் படகு திருகோணமலையைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமானது என்றும், வியாபார நோக்கத்துக்காகப் பொருள்களை ஏற்றிவந்தபோதே அசாதாரண காலநிலையால் படகு மூழ்கியது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–422)

## வன்னியில் இருந்து வாழைக் குலைகள்

நல்லூர் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு வன்னியில் இருந்து பெரும் எண்ணிக்கையான வாழைக்குலைகள் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளன.

யாழ்.குடாநாட்டில் வாழைப்பழத்துக்குப் பெரும் பற்றாக்குறையும் தட்டுப்பாடும் நிலவி வருகின்றது. அவற்றின் விலையுமோ மலை போல் அதிகரித்துள்ளது. முன்னர் கிலோ 125 ரூபாவாக விற்கப்பட்ட கதலிப்பழம் நேற்று கிலோ 140 ரூபாவாக அதிகரித்தது.

அதேசமயம் போதிய வாழைக்குலைகள் இல்லாமையால் நல்லூர் ஆலய சுற்றாடலில் உள்ள தண்ணீர் பந்தல்களில் வாழைக்குலைகளை கட்டுவதற்கு சிரமப்பட்டனர்.

இதனை அடுத்து வன்னியில் இருந்து பெரும் எண்ணிக்கையான வாழைக் குலைகளை வியாபாரிகள் எடுத்து வந்தனர். அத்துடன் வாழை இலைகளுக்கும் சந்தைகளில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. (ற–17)

# காரைநகர் ஆதார வைத்தியசாலையில் 3 மணி நேரம் காக்க வைத்த வைத்தியர்

## குற்றஞ்சாட்டுகின்றனர் பொதுமக்கள்; விசாரிப்பதாக அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.11

மயக்கமடைந்த இளைஞர் ஒருவரைச் சிகிச்சைக்காக காரைநகர் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது அங்கு சுமார் 3 மணித்தியாலமாக வைத்தியர் பார்வையிடவில்லை என்றும் குறித்த இளைஞரை யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு அம்புலன்ஸ் சாரதியும் இருக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இது குறித்து விசாரித்து அறிக்கையிடுமாறு பணிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணியளவில் விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த வேளையில் பந்தைப் பிடிக்க ஓடிச்சென்றபோது ஒருவர் மீது ஒருவர் மோதியதில் ஒருவர் மயக்கமடைந்துள்ளார். அவருடைய கையும் முறிவடைந்துள்ளது. காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த சுப்பிரமணியம் செந்தூரன் (வயது–21) என்பவரே காயமடைந்தவராவார்.

அதையடுத்து அவர் உடனடியாகக் காரைநகரில் உள்ள வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். அப்போது அங்கு வைத்தியர் கடமையில் இருக்கவில்லை. வைத்தியருடைய விடுதிக்குச் சென்ற போதிலும் விடுதியிலும் வைத்தியர் இல்லை என்று கூறப்படுகின்றது.

நீண்ட நேரத்தின் பின்னர் இரவு 8.30 மணியளவில் அங்கு வந்த வைத்தியர் பாதிக்கப்பட்ட நோயாளரை மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ்ஸில் அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரனிடம் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:–

குறித்த குற்றச்சாட்டுத் தொடர்பில் தாம் அறிந்துள்ளோம். அது தொடர்பில் விசாரித்து அறிக்கையிடுமாறு சுகாதாரத் திணைக்களத்துக்குப் பணிக்கப்பட்டுள்ளது.– என்றார். (ற–4,86)

## புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறு அடுத்த மாதம்

யாழ்ப்பாணம், செப் 11

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது பரீட்சை வினாத்தாள் திருத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாடளாவிய ரீதியில் 23 மத்திய நிலையங்களில் எதிர்வரும் 14 ஆம் திகதிவரை வினாத்தாள்கள் திருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

வினாத்தாள் திருத்தும் நடவடிக்கைகளுக்காக 8 பாடசாலைகள் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதாகவும் 15 பாடசாலைகள் பகுதி அளவில் பயன்படுத்தப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 லட்சத்து 40 ஆயிரத்து 926 பரீட்சார்த்திகள் இம்முறை ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். (ற–4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஞ்சுப்பரந்தன் அ.த.க. முன் பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்

## தேவையான ஆசிரியர்களை நியமிக்கக் கோரி



யாழ்ப்பாணம், பெப் 11

கிளிநொச்சி, குஞ்சுப்பரந்தன் அ.த.க.பாடசாலையைத் தரம் குறைக்க வேண்டாம் என்றும் உரிய ஆசிரியர்களை நியமிப்பதன் மூலமாக அங்கு பயிலும் மாணவர்களை வேறு பாடசாலைக்கு மாற்றும் நடவடிக்கையை நிறுத்துமாறும் வலியுறுத்தி அங்கு கற்கும் மாணவர்களின் பெற்றோர் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பாடசாலை தரம் 9 வரையான வகுப்புக்களைக் கொண்டுள்ளது. அங்கு ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதனால் தரம் 9 வரையான வகுப்புக்களை தரம் 5 வரையான வகுப்புக்களாக்கியும் ஏனைய வகுப்புக்களை நிறுத்தி அந்த வகுப்பு மாணவர்களை அருகிலுள்ள பாடசாலைக்கு மாற்றவும் முற்படுகின்றனர் என்று போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் குற்றம் சுமத்தினர்.

இது தொடர்பில் கண்டாவளை கோட்டக்கல்வி அதிகாரி வீ.ராஜகுலசிங்கம் தெரிவிக்கையில்:–

கண்டாவளை, புன்னைநீராவி, கல்லாறு ஆகிய பல பாடசாலைகளிலும் ஆங்கில ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. அத்தகைய ஆசிரியர்களை நியமித்தால் தான் பிரச்சினை தீரும்.

கடந்தமுறை வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையிலான கூட்டம் பெற்றோருக்கு நடத்தப்பட்டது. அதில் குறித்த பிரச்சினை தொடர்பில் எடுத்துக்கூறி மாணவர்களை அருகிலுள்ள பாடசாலைக்கு மாற்றுவதாகத் தெரிவிக்கப்பட்டது. அதற்கு ஒரு பகுதி பெற்றோர் சம்மதம் தெரிவித்திருந்தனர். மற்றொரு பகுதியினர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த நிலையிலேயே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். – என்று கூறினார்.

அதேவேளை, தரம் 5 வரையான வகுப்புக்கள் வரையிருந்த குறித்த பாடசாலை கடும் பிரயத்தனங்களுக்கு மத்தியிலேயே தரம் 9 வரையான வகுப்புக்கள் கொண்டதாகத் தரமுயர்த்தப்பட்டது என்று தெரிவித்த அவர்கள், அதிகாரிகள் பாடசாலையைத் தரம் குறைப்பது, பாடசாலையின் மாணவர்களை அயல் பாடசாலைக்கு அனுப்புவது உள்ளிட்ட செயற்பாடுகளை நிறுத்தி தேவையான ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்துக் கோட்டக்கல்வி அதிகாரி மேலும் தெரிவித்ததாவது:–

எந்தக் காரணம் கொண்டும் பாடசாலையின் தரத்தைக் குறைக்கப் போவதில்லை. மாணவர்களை அயல் பாடசாலைக்கு மாற்றுவதாக இருந்தால் உடனடியாக மாற்ற முடியாது. தேவையான ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.– என்றார். (ற–4,ரி3)

# கூட்டுறவு அமைப்புக்களில் 2,500 புதிய உறுப்பினர்கள்

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 11

யாழ். குடாநாட்டில் உள்ள கூட்டுறவு அமைப்புக்களில் புதிதாக 2 ஆயிரத்து 500 வரையிலான அங்கத்தவர்கள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளனர் என்று கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கணேஸ் தெரிவித்தார்.

அண்மையில் வடமாகாண கூட்டுறவு அமைச்சால் முன்னெடுக்கப்பட்ட நூறு நாள் வேலைத்திட்டத்தின் ஊடாகவே சங்கங்களில் புதிதாக அங்கத்தவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். இந்த புதிய அங்கத்தவர்கள்களில் கூடுதலானோர் இளம் வயதினரைக் கொண்டவர் கள். புதிய அங்கத்தவர்களை இணைக்கும் இந்த வேலைத்திட்டத்தில் இளம் வயதினரையே கூடுதலாக இணைக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

கூட்டுறவு சேவையில் இளம் வயதினரை இணைக்கும் முயற்சிகள் வரும் காலத்தில் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

புதிதாக அங்கத்தவர்களாக இணைந்த இளம் வயதினருக்கு சங்கங்களில் கிராமிய வங்கியின் ஊடாக சுய தொழிலுக்கான கடன் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. சங்க வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு இளம் வயதினர் தொடர்ந்தும் சங்கங்களின் கிளை நிலையங்கள் ஊடாக அங்கத்தவராக இணைந்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற–17)

# தெல்லிப்பழைச் சந்தியில் கடை தீயில் எரிந்து நாசம்



வலி.வடக்கு, செப்.11

தெல்லிப்பழைச் சந்தியில் உள்ள புடைவைக் கடை ஒன்றில் நேற்று முன்தினம் இரவு தீ விபத்து ஏற்பட்டுள்ளது. அதில் பெறுமதி மிக்க புடைவைகள் எரிந்து நாசமாகியுள்ளன.

இரவு வேளை குறித்த கடையில் இருந்து புகை கிளம்புவதை அவதானித்த பொதுமக்கள் உடனடியாகச் செயற்பட்டதன் காரணமாக தீ ஏனைய கடைகளுக்குப் பரவாது தடுக்கப்பட்டது.

இதுகுறித்து தெல்லிப்பழைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து அவர்கள் உடடினாக சம்பவ இடத்துக்கு வந்து நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சுன்னாகம் மின்சார சபைக்கு தொலைபேசி மூலம் இது குறித்து அறிவிக்க முற்பட்டபோதும் மின்சார சபையினருடன் தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை என்று சம்பவத்தின்போது அங்கு நின்றிருந்த பொதுமக்கள் குற்றம் சாட்டினர்.

யாழ்.மாநகர சபை தீயணைப் பிரிவு சம்பவ இடத்துக்கு வந்து தீயை அணைத்த பின்னரே மின்சார சபையினர் அங்கு வந்து மின்சாரத்தைத் துண்டித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாரும், பொதுமக்களும் இணைந்து கடைக்குள் எஞ்சியிருந்த பொருள்களை பாதுகாப்பாக மீட்டெடுத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–86)

# சந்தேகத்துக்கிடமாகப் பயணித்த 3 இளைஞர்கள் பொலிஸாரால் கைது

வலி.வடக்கு, செப்.11

சந்தேகத்துக்கு இடமான முறையில் இரவுவேளை மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் மூவர் தெல்லிப்பழை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு இரவு 10 மணியளவில் தெல்லிப்பழை சந்தியில் உள்ள புடைவைக்கடை ஒன்றில் தீவிபத்து ஏற்பட்டதை அடுத்த அதனை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர் என்றும், அதன்போது ஒரு மோட்டார் சையிக்கிளில் மூன்று இளைஞர்கள் தலைக் கவசம் அணியாது தெல்லிப்பழை சந்தியால் வந்து யாழ்ப்பாணம் வீதியில் நின்ற பொது மக்களையும் கருத்தில் கொள்ளாது அடாவடித்தனமான முறையில் செல்ல முற்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து சிவில் உடையில் நின்ற பொலிஸார் அவர்களை மறித்து விசாரிக்க முற்பட்டபோது, குறித்த இளைஞர்கள் காயங்களுடன் காணப்பட்டுள்ளதுடன், பொலிஸாருக்கு உண்மையைக் கூற மறுத்து யாழ்ப்பாணம் வைத்திய சாலைக்கு செல்வதாகக் கூறியுள்ளனர்.

தெல்லிப்பழை வைத்தியசாலை இருக்கக் கூடியதாக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு செல்வதாக கூறியமை சந்தேகத்தை ஏற்படுத்தியமையாலும், மது போதையில் வாகனத்தை செலுத்தி வந்தமை, தலைக் கவசம் அணியாமை போன்ற காரணங்களாலும் குறித்த மூவரையும் பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்று விசாரணைகளுக்கு உட்படுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, குறித்த இளைஞர்கள் ஏற்கனவே பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ற–86)

## பரு. நகர சபை முன்னாள் தவிசாளர் விபத்தில் சாவு

யாழ்ப்பாணம், செப்.11

பருத்தித்துறை நகர சபையின் முன்னாள் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை வின்சென்ற் கெனடி, வாகன விபத்தில் உயிரிழந்துள்ளார்.

திருகோணமலையில் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற வாகன விபத்தில் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

1998 ஆம் ஆண்டு, பருத்தித்துறை நகர சபையின் தவிசாளராக பொறுப்பேற்ற கெனடி, 2 வருடங்கள் தவிசாளராகப் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இவர் புளொட் அமைப்பின் நீண்ட கால உறுப்பினராவார். (ற–5)

## எதிர்க்கட்சித் தலைவர் பதவி குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப் 11

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்ற தலைப்பிலான கலந்துரையாடல் ஒன்று வேம்படி வீதியில் உள்ள தனியார் கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கலந்துரையாடல் நடைபெறவுள்ளது என்று சர்வதேச மார்க்சிய குழு தெரிவித்துள்ளது. (ற–4)

# உள்ளூராட்சி வார செயற்பாடு கடந்த திங்கள் முதல் ஆரம்பம்

தென்மராட்சி, செப்.11

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய உள்ளூராட்சி வாரச் செயற்பாடுகள் பல்வேறு உள்ளூராட்சி சபைகளால் கடந்த திங்கட்கிழமை முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

சாவகச்சேரி நகரசபையினால் கடந்த ஏழாம் திகதி தொடக்கம் உள்ளூராட்சி வாரச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாரத்தின் முதல் நாள் நிகழ்வான நடமாடும் சேவைகள் தினத்தில் சபையின் பத்தாம் வட்டாரத்தில் ஆதனவரி அறவீடு மேற்கொள்ளப்பட்டன. இரண்டாம் நாளான கடந்த செவ்வாய்க்கிழமை வருமான மேம்பாட்டுத் தினத்தில் நகரப் பகுதியில் சைக்கிள் இலக்கத் தகடுகள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

மூன்றாம் நாளான கடந்த புதன் கிழமை சுகாதாரம், துப்புரவு ஏற்பாட்டுத் தினத்தில் நகரசபை அலுவலகம், பொது நூலகம், பொன்விழா மண்டபம் மற்றும் பொது மயானம் ஆகிய இடங்களில் நகரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்களால் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

வாரத்தின் நான்காம் [illegible] நேற்று பொது மக்கள் பய[illegible] தினமான நேற்றுமுன்தினம் வீதி விளக்குகள் பரிசீலித்து செயற்படாத விளக்குகளைப் புதுப்பித்தல், பொதுமக்களுடன் இணைந்து இடுகாடு, சுடுகாடு ஆகிய இடங்களை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தல், சபை எல்லைக்குட்பட்ட பொது அமைப்புக்கள் சமூகமட்ட அமைப்புக்கள் சமய பெரியார்கள் மூலம் நகரசபையின் கடந்தகால நிகழ்கால எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்தும் செயற்பாடுகள் நடைபெற்றன.

ஐந்தாம் நாளான நாளை சுற்றாடல் மற்றும் மரம் நடும் தினத்தில் சபை எல்லைக்குட்பட்ட பிரதான இடங்களில் மரக்கன்றுகள் நடுகையும் நடைபெறவுள்ளன.

ஆறாம் நாளான நாளை மறுதினம் கல்வி மற் றும் நூலக அபிவிருத்தி தினத்தில் புத்தகக் கண்காட்சி, முன் பள்ளி மாணவர்களுக்கிடையிலான போட்டிகள், சிறந்த உணவகம் தேநீரகம் குளிரகம் வெதுப்பகம் தெரிவு செய்தல் செயற்பாடுகளும், இறுதி நாளான எதிர்வரும் 13 ஆம் திகதி விளையாட்டு மற்றும் பரிசில்கள் சான்றிதழ்கள் வழங்கும் தினத்தில் அலுவலக உத்தியோகத்தர்களுக் கிடையிலான போட்டிகளும் வாரத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங் [illegible] என்று சபையின் செ[illegible] முகதாசன் தெரிவித்தார். (ற–9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளி[illegible] மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ள ஈ.சரவணபவனுக்கு பொலிகண்டி பாரதி விளைய[illegible]ழகத்தினர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். கடந்த திங்கட்கிழமை பொலிகண்டி வீரபத்திரர் ஆல[illegible]றிலில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விளையாட்டுக் கழகத் தலைவர், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பல[illegible]துகொண்டனர். (ற-108)

# புதிய அரசியல் நிலைப்பாடே தற்போது எமக்கான தேவை

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி சுட்டிக்காட்டுகின்றது

யாழ்ப்பாணம், செப்.11

நாட்டின் தேசிய இனப்பிரச்சினை இன்றும் முக்கிய பிரச்சினையாகவே நீடித்து வருகிறது. இன்று உருவாக்கப்பட்டுள்ள நல்லாட்சிக்கான தேசிய அரசு என்று அழைக்கப்படும் அரசால் இந்தப் பிரச்சினை எந்தளவுக்குத் தீர்த்து வைக்கப்படும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. எனவே சுயநிர்ணய உரிமை அடைப்படையிலான சுயாட்சித் தீர்வை முன்வைத்து முற்போக்கு தேசிய ஜனநாயக அடிப்படையில் கொள்கையை உருவாக்கி பரந்த அடிப்படையில் மக்கள் இயக்கத்தை முன்னெடுப்பதே சரியான அரசியல் மார்க்கமாக அமைய முடியும். – இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அந்தக் கட்சி விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையே பிரச்சினைகளுக்கு அடிப்படையானதாகும். இதேவேளை எமது கட்சி ஏற்கனவே முன்வைத்து வந்துள்ள தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை மீளவும் வலியுறுத்தி நிற்கிறது. ஐக்கியப்பட்ட இலங்கையில் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சித் தீர்வாகவே அரசியல் தீர்வு அமைய வேண்டும். இத்தகைய தீர்வு தனியே தமிழ்த் தேசிய இனத்துக்குரியதாக மட்டு மன்றி முஸ்லிம், மலையக தமிழ்த் தேசிய இனங்களுக்கும் ஏனைய சிறு சமூகங்களுக் கும் உரியதாக இருத்தல் வேண்டும். மேற்படி சுயாட்சித் தீர்வை, நீண்ட காலத்துக்குரியதாகக் கொள்ளும் அதே வேளை உடனடித்தீர்வாக எல்லா மட்டங்களிலும் அதிகாரப் பகிர்வை நடைமுறைப்படுத்தி இனங்களுக் கிடையிலான ஐக்கியம், சமத்துவம், ஜன நாயகம் என்பவற்றின் ஊடே பயணிக்க வேண்டும். இது சுயாட்சியை நோக்கிய தீர்வுக்கு முதற் படியாகவும் அடிப்படையாகவும் அமையமுடியும்.

இதன் மூலம் இனங்களுக்கு இடையிலான முரண்பாட்டு கொதிநிலையைத் தாழ்நிலைக்கு கொண்டுவரமுடியும். தமிழ் மக்கள், தேசிய இனப் பிரச்சினையை பேரினவாத ஒடுக்கு முறையை எதிர்ப்பதற்கும், பழைய அரசியல் பயணத்தில் கிடைத்த பட்டறிவைக் கொண்டு புதிய அரசியல் நிலைப்பாடாக முற்போக்குத் தேசிய ஜனநாயக நிலைப்பாட்டை முன்னெடுக்கவும் முன்வர வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும், மலையகத் தமிழ் மக்களும் தம்மை எதிர் நோக்கி நிற்கும் தேசிய இனமுரண்பாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வாக தமது தலைவிதியை தாமே தீர்மானிக்கும் அரசியலை முன்னெடுக்க வேண்டும். இதற்குப் புள்ளடி அரசியலுக்கு அப்பால் யதார்த்தமும் துர நோக்கமும் கொண்ட மக்கள் அதிகாரத் துக்கான வெகுஜன அரசியல் போராட்ட மார்க்கத்தில் அணிதிரள முன்வர வேண்டும்.– என்றுள்ளது. (ற-ரி2)

## கிடைத்துள்ள அதிகாரங்களை சிறப்பாகப் பயன்படுத்துவோம்

### அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

தேசிய அரசில் கிடைத்துள்ள அதி காரங்களை, தமது கட்சி சிறந்த முறை யில் பயன்படுத்தும் என்று முஸ்லிம் காங்கிரசின் தலைவரும், அமைச்சருமான ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார். கொழும்பு ஜாவத்தை பள்ளிவாசலில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை நடைபெற்ற விசேட பிரார்த்தனை நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசல்காசீம் மற்றும் எச்.எம்.எம். ஹரீஸ் ஆகியோர் பிரதியமைச்சர்களாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையைத் தொடர்ந்து, மு.கா. தலைவர் ஹக்கீமுடன் ஜாவத்தை பள்ளிவாசலுக்குச் சென்று விசேட பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இதன்போது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்கள் எனப் பலர் சமூகமளித்திருந்தனர்.

அங்கு அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது:–

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் ஜனாஸா, நாம் தற்போது கூடியிருக்கும் ஜாவத்தை பள்ளிவாசல் மையவாடியிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. எமது கட்சியின் செயற்பாடுகளை மிகவும் வீரியத்துடன் முன்னெடுப் பதற்கு இந்த இடத்தில் திடசங்கற்பம் பூணுவோம். – என்றார். (ற)

## அரசமைப்புச் சபை உறுப்பினர்கள் நியமனம் நல்லாட்சிக்கு விரோதம்

### தினேஸ் குணவர்த்தன கூறுகின்றார்

கொழும்பு, செப்.11

அரசமைப்புச் சபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட விதம் நல்லாட்சிக்கு விரோதமானது என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஸ் குணவர்த்தன தெரிவித் துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மற்றும் பிரதமர் சார்பில் இரு அமைச்சர்கள் அரசமைப்புச் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களை அரசமைப்புச் சபைக்கு நியமிப்பதால், பல சிக்கல்கள் உருவாக அதிக வாய்ப்புள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசமைப்புச் சபைக்கு ஜனாதிபதி சார்பாகவும், பிரதமர் சார்பாகவும், முறையே அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ச ஆகியோர் நியமிக் கப்பட்டுள்ளனர். சிறு கட்சிகளைப் பிரதி நிதித்துப்படுத்தும் வகையில் மக்கள் விடுதலை முன்னணியைச் சார்ந்த விஜித ஹேரத் பெயரிடப்பட்டுள்ளார். (ற)

## அதிகாரத்துக்காகவே அமைச்சுப் பதவிகள்

### சாடுகின்றார் விஜித ஹேரத்

கொழும்பு, செப்.11

பிரதியமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுக்கள் பகிரப்பட்ட முறையைப் பார்க்கும்போது, அவை அதிகாரத்தைக் குறிவைத்தே மேற்கொள்ளப்பட்டுள்ளனஎன்றுகருதமுடிகிறது என மக்கள்விடுதலை முன்னணியின் பரப்புரைச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டதன் பின்னர், நேற்று முன்தினம் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:–

சட்ட விரோதச் செயல்கள் மற்றும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கும் பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இது இலங்கை அரசியலின் மோசமான நிலையை எடுத்துக் காட்டுகின்றது. – என்றார்.

அரசமைப்புச் சபையில் சிறு கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் விஜித ஹேரத் நேற்று முன்தினம் உள்வாங்கப்பட்டிருந்தார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 24 ஆம் திருவிழா

## நல்வழி காட்டு நல்லூரானே!

தேரில் திருமுருகன் தோன்றும் திருக்காட்சி
நேரில் கண்குளிரக் கண்டு நல்ஊரில்
உறைகின்ற உமைபாலா நல்வழி காட்டு என
இறைஞ்சுவோம் உளமுருகி நாம்!

ப.மகேந்திரதாசன்,நாயன்மார்கட்டு

## பாரும் புகழ் ஓங்கிடவே ஓங்கார முருகன் தேரில் வருகின்றார்

தோளும் கடம்புமாய் தோன்றிடவே
நாளும் மணியோசை அழைத்திடும்
நல்லை மண் ஆறுமுகன் நம்
மமதை அழித்திடவே வள்ளி
தெய்வானையுடன் தேரில் வருகின்றார்
சூளும் பக்தர்கள் முருகா என அழைத்திடவே
பாரும் புகழ் ஓங்கிடவே ஓங்கார
முருகனாய் உமைமைந்தன் தேரில் வருகின்றார்

ப.பாலசுப்பிரமணியம்,(வேலணை பாலா)

## தேர்தலிலும் வரமீந்தாய்

தேரிலே நீவரும் அழகைக் காண
தேசமெல்லாம் திரள்கிறது,
தீர்வாகத் தமிழ் எங்கும் ஆளவே
தேர்தலிலும் வரமீந்தாய்,
ஊரிலே உன்பேச்சைக் கேட்கவே
ஒற்றுமைப் படுகின்றோம்,
உருப்படியான தீர்வேதும்
இன்னும் இல்லை ஏன்முருகா?

கே.எஸ்.சிவஞானராஜா

## திருத்தேரேறி நீ வரவேண்டும் சண்முகனே!

திருத் தேரேறி நீ வரவேண்டும் – நின்
திருமேனி யாம் காண வேண்டும்
தீரா நோய் தீர்க்க வேண்டும்......
தீந்தமிழ்ப் பாமாலை என்றும் பாடவேண்டும்

பச்சைத் துகில் உடுத்தி நீ வரவேண்டும்
பாரின் பஞ்ச மெல்லாம் தீர வேண்டும்
பாமரர் வாழ்வும் நலமாக வேண்டும்
பசுமை நாடாய் மாறிட வரம் தந்திட வேண்டும்!

அரியாலையூர், மிஷாந்தி செல்வராஜா

## எம் இதயம் தனில் நீயமர்ந்தாய்

நாகம் தனில் உன் தாய் அமர்ந்தாள்
நல்லை தனில் நீ அமர்ந்தாய்
இடபம் தனில் உன் தந்தை அமர்ந்தான் எம்
இதயம் தனில் நீயமர்ந்தாய்
மூஷிகம் தனில் உன் தமையன் அமர்ந்தான்எம்மை
முக்திதனில் நீயமர்த்தினாய்
கருடன் தனில் உன் மாமன் அமர்ந்தான் நல்ல
கருணைதனில் நீயமர்ந்தாய்

தாவையூர் ,சண்முகராஜா சுபபிரியன்
யாழ் இந்துக் கல்லூரி, தரம் 8டி

நல்லைக்கந்தனுக்கு
இன்று (11.09.2015) வெள்ளிக்கிழமை
24 ஆம் திருவிழா
(தேர்த்திருவிழா)





திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:
கிருபா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதி பயிற்சி பாடசாலை
இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 4353, 077 722 5292

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** வழக்கத்தை விட அதிகமாக உழைக்க நேரிடும். தொழில் வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் உண்டாகும். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**இடபம்:** நிதான புத்தியுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். பகைவர்கள் இடம் மாறிப்போகும் நன்னிலை உண்டாகும். தொழில் வியாபாரத்தில், எதிர் பார்த்த இலாபம் கிடைக்கும்.

**மிதுனம்:** பெருந்தன்மையுடன் செயல்பட்டு நற்பெயர் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய நுட்பம் மூலம் இலாபம் உயரும். பணி விஷயமாகப் பணியாளர்கள் வெளியூர் செல்வர்.

**கடகம்:** மற்றவர் விஷயத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப இலாபம் கிடைக்கும். பிள்ளைகள் வழியில் ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**சிங்கம்:** உங்களின் வளர்ச்சி கண்டு பலரும் பொறாமை கொள்வர். தொழில், வியாபாரத்தில் அமோக இலாபம் காண்பீர்கள். சுய கௌரவத்தைப் பாதுகாப்பதற்காக பணம் செலவு செய்ய நேரிடும். மாணவர்கள் படிக்கும் நேரத்தை அதிகப்படுத்துவர்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் புதிய முயற்சியில் ஈடுபட்டு ஆதாயம் காண்பீர்கள். வழக்கு விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்கும். அரசியல்வாதிகள் நீண்டதூரப் பயணம் மேற்கொள்வர்.

**துலாம்:** நேர்மையைப் பின்பற்றுவதால் பிறர் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். சுப காரியங்கள் பற்றிய பேச்சில் முன்னேற்றம் உண்டாகும். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**விருச்சிகம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணி விஷயமாகப் பணியாளர்கள் வெளியூர் செல்வர். உடல் நலனுக்காக மருத்துவச் செலவு செய்ய நேரிடும்.

**தனுசு:** மனச்சாட்சியை மதித்து நடப்பது அவசியம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பண வரவை விடக் குடும்பச் செலவு அதிகரிக்கும். தக்க சமயத்தில் நண்பர்களின் உதவி கிடைக்கும்.

**மகரம்:** கடந்த கால உழைப்பால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் அமோக இலாபம் கிடைக்கும். மனைவியின் கருத்துக்கு மதிப்பளித்து நடப்பீர்கள். வீடு, வாகன வகையில் பராமரிப்புச் செலவு ஏற்படும்.

**கும்பம்:** நண்பர் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள். அரசியல்வாதிகள் புதிய பதவிகளைப்பெறும் யோகமுண்டு.

**மீனம்:** சிறிய முயற்சியிலும் பெரிய வெற்றி கிடைக்கும். விலகிச் சென்றவர்கள்கூட விரும்பி வந்து அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் வரும். வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்கி மகிழ்வீர்கள்.



# அஜித் ஜோடியாக நடிக்க மாட்டேன் ஷாமிலி

தமிழ், மலையாளம், தெலுங்கு திரைப்படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்து பிரபலம் ஆனவர் அஜித் மனைவி –ஷாலினியின் தங்கை ஷாமிலி. 2009 இல் நாயகி அந்தஸ்துப் பெற்ற ஷாமிலி, அப்போது 'ஓய்' என்ற தெலுங்குப் படத்தில் சித்தார்த் ஜோடியாக நடித்திருந்தார். அதன் பிறகு நடிப்பில் ஆர்வம் காட்டாது, திரை உலகில் இருந்து விலகியிருந்த ஷாமிலி, தற்போது தமிழ் திரைப்படத்தில் நாயகியாக நடிக்க இருக்கிறார். துரை செந்தில்குமார் இயக்கத்தில் தனுஷ் இரட்டை வேடத்தில் நடிக்கும் திரைப்படத்தில் நாயகியாக நடிக்க ஒப்பந்தம் செய்துள்ளார். தற்போது விக்ரம் பிரபு நடிக்கும் வீரசிவாஜி படத்திலும் நாயகியாக நடித்து வருகிறார். இது தவிர மலையாளம், தெலுங்கு படங்களில் நடிப்பது பற்றியும் பேச்சு வார்த்தை உள்ளதாம்.

**இது குறித்து ஷாமிலி கூறும்போது:-**

நான் சினிமாவில் நடிப்பதில் அக்காவின் கணவர் அஜித்துக்கு அவ்வளவாக விருப்பம் இல்லை. என்றாலும், நான் நடிக்க வேண்டும் என்ற எனது விருப்பத்தைக் கூறிய உடன் அதற்கு முழு ஆதரவு கொடுத்தார். நான் போட்டோ எடுக்க வேண்டும் என்று விரும்பியதும், அவரே என்னைப் போட்டோ எடுத்தார். அதை மறக்க முடியாது.

அவர் மிகவும் அமைதியானவர். வீட்டையும் குடும்பத்தையும் மிகவும் விரும்புவார். அவருடன் இருக்கவேண்டும் என்று எல்லோரும் ஆசைப்படுவார்கள். எனது நடிப்பில் திறமையைக் காட்ட வேண்டும் என்று ஆசை இருக்கிறது.

நான் ஒரு போதும் அஜித் ஜோடியாக நடிக்கமாட்டேன். அவருடைய படங்களில் சிறப்புத் தோற்றத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தால் அது பற்றிச் சிந்திப்பேன்.

# பேஸ் புக்கில் பிடித்தவை...






ஒருவன் தன்னிடம் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறானோ, அப்படி எல்லோரிடமும் தான் நடந்து கொள்வதே ஒழுக்கமாகும்.
பெரியார்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துண்டி இந்து மயான வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.11

கொழும்புத்துறை, துண்டி இந்து மயானத்துக்கு செல்லும் வீதியை புனரமைத்துத் தருமாறு மயான பரிபாலன சபை கோரிக்கை விடுத்துள்ளது.

பிரதான கடற்கரை வீதியில் இருந்து மயானத்துக்குச் செல்லும் இந்த வீதி, கடந்த பல வருடங்களாகப் புனரமைக்கப்படாது சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. அத்துடன் மழை காலங்களில் இந்த வீதியைமேவி வெள்ளம் தேங்கி நிற்பதால் சடலங்களை மயானத்துக்குக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்படுகிறது.

இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு பல தடவைகள் யாழ்.மாநகராட்சி மன்றத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டும் இதுவரைக்கும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. பழைமை வாய்ந்த இந்த இந்து மயானத்தை பெரும் எண்ணிக்கையான மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் இருந்து தகனத்துக்காகச் சடலங்களை எடுத்துச் செல்லும் மக்களின் போக்குவரத்து சிரமத்தைத் தவிர்ப்பதற்கு இந்த மயான வீதியைப் புனரமைத்துத் தர வேண்டும் என்று மயானப் பரிபாலன சபை கோரிக்கை விடுத்துள்ளது. (ற-17)

# சாவகச்சேரி 10ஆம் வட்டாரம் ஆதன வரி செலுத்திச் சாதனை

## ஒரே நாளில் ரூபா 80 ஆயிரத்துக்கும் மேல் செலுத்தினர்

தென்மராட்சி, செப்.11

சாவகச்சேரி நகரசபையால் நடத்தப்பட்டுவரும் உள்ளராட்சி வாரத்தின் முதல் நாளில் ஆதனவரி அறவீட்டு நடமாடும் சேவையில் ஒரே நாளில் 80 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையைச் செலுத்தி சபையின் பத்தாம் வட்டார மக்கள் சாதனை படைத்துள்ளனர்.

சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் கடந்த ஏழாம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. வாரத்தின் முதல்நாள் நிகழ்வாக ஆதனவரி அறவீட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபையின் வருமானப் பரிசோதகர்களான சி.கணேசமூர்த்தி, சொ.சிவசுதன், வே.சண்முகசுந்தரம் ஆகியோர் சபையின் பத்தாம் வட்டாரத்தில் மேற்கொண்ட பரப்புரையின் பயனாக சாவகச்சேரி வடக்கு செல்வ விநாயகர் சனசமூக நிலைய மண்டபத்தில் நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

அன்றைய தினம் பெரும் எண்ணிக்கையான வரியிறுப்பாளர்கள் அங்கு வந்து தமது ஆதனங்களுக்குரிய ஆதனவரியைச் செலுத்துவதில் ஆர்வம் காட்டினர். அதனால் ஒரே நாளில் நடமாடும் சேவையில் 82 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை வருமானமாகப் பெறப்பட்டது என்று சபையின் செயலாளர் கா.சண்முகதாசன் தெரிவித்தார். (ற-9)

# முதியோர்களைப் பராமரிக்கும் சேவையாளர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், செப்.11

சர்வதேச முதியோர் வாரத்தை முன்னிட்டு முதியோர்களைப் பராமரிக்கும் சேவையாளர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று கைதடி அரச முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமூகத்தில் முதியோர்களைச் சிறந்த முறையில் பராமரித்து வரும் சேவையாளர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே. அதற்கமைய இல்லத்தில் நடைபெறும் சர்வதேச முதியோர் வார நிகழ்வுகளில் இந்த சேவையாளர்கள் முக்கியமாகப் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

முதியோர்களைப் பராமரித்து வரும் சேவையாளர்கள் தமது முழுமையான விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தைக் கைதடி அரச முதியோர் இல்லத்தில் சமர்ப்பிக்கலாம்- என்றார். (ற-17)

# கூட்டுறவு விழிப்புணர்வு பயிற்சி வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், செப்.11

வடமாகாண சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் ஒழுங்கமைப்பில் கூட்டுறவு தொடர்பான விழிப்புணர்வுப் பயிற்சி வகுப்புக்கள் வடமாகாண நிதியில் நடத்தப்பட்டு வருகின்றன.

நெதர்லாந்து மனிதநேயக் கூட்டுறவு அமைப்பின் அனுசரணையுடன் இந்தப் பயிற்சி வகுப்புக்கள் சிக்கன கடன்வழங்கும் சமாச ரீதியாக நடத்தப்பட்டு வருகின்றன. ஐக்கிய இராச்சியத்தின் மன்செஸ்ரர் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் ஜேம்ஸ் கொன்சி இந்தப் பயிற்சி வகுப்பை நடத்துவதற்கு யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார். பருத்தித்துறை மற்றும் கைதடி பிராந்தியங்களுக்கான பயிற்சியாளர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் கடந்த திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் இடம் பெற்றன.

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பயிற்சி வகுப்பில் கூட்டுறவு என்றால் என்ன?, கூட்டுறவுத் துறையில் இணைவதன் மூலம் ஏற்படும் நன்மைகள், கூட்டுறவுக்கும் ஏனைய அமைப்புக்களுக்கும் இடையிலான வேறுபாடு, புதிய கூட்டுறவை ஆரம்பிப்பது எப்படி போன்ற விளக் கங்களை இந்தப் பயிற்சி வகுப்பை நடத்திய விரிவுரையாளர் ஜேம்ஸ் கொன்சி எடுத்துக் கூறினார்.

இந்தப் பயிற்சி வகுப்புக்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா போன்ற பிரதேசங்களிலும் தொடர்ந்து நடத்தப்பட உள்ளன.

கூட்டுறவு தொடர்பான இந்தப் பயிற்சி வகுப்பின் மூலம் பயிற்சியாளர்கள் பெரிதும் நன்மை யடைவார்கள் என்று சமாசத் தலைவர் இலகுநாதன் தெரிவித்தார். (ற-17)

# சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை நிதி

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை நிதி வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவைப் பெறுவதற்கு நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ள விவரப் படிவத்தைப் பூர்த்தி செய்து நிலையத்தின் தலைவர் அல்லது பொருளாளர் நிலைய இறப்பர் முத்திரையிட்டு இன்று நகரசபை கணக்காளரைத் தொடர்பு கொண்டு உரிய உறுதிச் சீட்டில் கையொப்பமிட வேண்டும் என்று செயலாளர் கா.சண்முகதாசன் அறிவித்துள்ளார். சபை எல்லைக்குட்பட்ட 21 சனசமூக நிலையங்கள் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# கூரையில் இருந்து தவறி வீழ்ந்து இருவர் காயம்

தென்மராட்சி, செப்.11

கூரைவேலைகள் மேற்கொண்ட வேளையில் தவறி வீழ்ந்து இருவர் காயமடைந்தனர்.

கடந்த செவ்வாய்கிழமை இரவு வரணிப் பகுதியில் வீட்டொன்றின் கூரைவேலைகளைச்செய்து கொண்டிருந்த வேளையில் தவறி வீழ்ந்து வட்டக்கச்சி கட்சன் வீதியைச் சேர்ந்த தம்புசாமி ரவிச்சந்திரன் (வயது -32 ) என்பவரும், கடந்த புதன்கிழமை மீசாலை வடக்கில் ஆலய கூரை வேலை செய்து கொண்டிருந்த வேளையில் தவறி வீழ்ந்த மீசாலை மேற்கைச் சேர்ந்த சிறிபரன் தஜீவன் (வயது-24 ) என்பவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.(ற-9)

# மருத்துவ முகாம்

சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி வார செயற்பாடுகளில் ஒன்றாக சாவகச்சேரி லயன்ஸ் கழகத்துடன் இணைந்து இலவச மருத்துவ முகாம் ஒன்று நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவுள்ளது. இந்த மருத்துவ முகாம் காலை 9 மணி தொடக்கம் எழுதுமட்டுவாழ் ஆயுள்வேத மருந்தகத்தில் நடத்தப்படவுள்ளது.

அதில் கண், நீரிழிவு, பொது மருத்துவம் போன்ற நோய்களுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுப் பார்வையில் குறைபாடு காணப்படும் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

பிரதேச சபையின் ஆயர்வேத மருத்துவர் திருமதி ரஜிதா கனகசுந்தரம் 'கண் நோயியல் மருத்துவம்' தொடர்பான கருத்தரங்கு ஒன்றை நடத்துவார் என்றும், லயன்ஸ்கழக மருத்துவர்களால் மேற்கத்திய மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்பட்டு சிகிச்சையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# ஆன்மிக சொற்பொழிவு

சாவகச்சேரி, செப்.11

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு 'தொண்டர் தம் பெருமை' என்னும் தலைப்பில் கவிஞர் த.நாகேஸ்வரன் ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார் என ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (ற-9)

# அருள்நெறி விழாவின் 24ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.11

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் அருள்நெறி விழாவின்24ஆம் நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நடைபெறுகின்றது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பி.ப 3 மணிமுதல் பி.ப 6 மணி வரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமை வகிக்கவுள்ளார்.

பிரதம விருந்தினராக நிதி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசன் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் பொலிகை விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவன் ஜெ.ஐதுர்சனின் பேச்சு, ஏழாலை கருணாகரப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவி க.திரண்மிகாவின் பேச்சு, குழுநடனம், மாணவிகள் ம.யதுசா, ஜெ.பவிசாளினி ஆகியோரின் தனிநடனம், துர்க்காதேவி அறநெறிப் பாடசாலை மாணவி யோ.அனுசாவின் பேச்சு, புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் வில்லிசை, ஒல்லுடை அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நாடகம், பொலிகை விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசை போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ற-10)

பாராட்டி வாழ்த்துகின்றோம்




இலங்கையின் தேசிய அரசாங்கத்தின் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக

கௌரவ திருமதி விஜயகலா மகேஸ்வரன்

அவர்கள் நேற்று அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைவதோடு கணவர் அமரர் மகேஸ்வரன் விட்டுச் சென்ற பணிகளை தொடர்ந்து சிறப்புற தாங்கள் மக்கள் சேவை செய்ய எல்லாம் வல்ல புங்குடுதீவு சிறி கண்ணகி அம்மனின் நல்லாசி கிடைக்க பாராட்டி வாழ்த்துகின்றோம்.

288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2567

சிவா நறுமணப் பூங்கா
C/O து.குருணாதசிவம் J.P


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டோவைக் கொண்டு சென்றவர் திருப்பித் தரவில்லை என முறைப்பாடு

வற்றாப்பளை ஆலயத்துக்குச் சென்று விட்டுத் திரும்பக் கொண்டு வந்து தருவதாகக் கூறி வாங்கிச் சென்ற ஓட்டோவைத் கொண்டு வந்து ஒப்படைக்காததால் அதன் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். கடந்த ஜூன்மாதம் இடம்பெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்பாள் ஆலயத்துக்குச் சென்று விட்டு திரும்பக் கொண்டு வந்த தருவதாக கூறி வாங்கிச் சென்றவர் மூன்று மாதங்களின் பின்னரும் இதுவரை ஓட்டோவைத் திருப்பித் தரவில்லை என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பாக பொலிஸார் சாவகச் சேரி நீதிமன்றில் கடந்த செவ்வாய் கிழமை அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (ற-9)

## மரண அறிவித்தல்கள்

### சிறிகண்டு சண்முகநாதன்



பிறப்பு 19.04.1947 இறப்பு 08.09.2015

யாழ். இருபாலையைப் பிறப்பிடமாகவும் வவுனியா, ஓமந்தை, நொச்சிக்குளத்தை வதி விடமாகவும் கனடாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிறி கண்டு சண்முகநாதன் 08 .09 .2015 செவ்வாய்க்கிழமை நொச்சிக் குளத்தில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சிறிகண்டு - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான கந்தையா - மணியம்மா தம்பதி களின் அன்பு மருமகனும் பவளராணி அவர்களின் அன்புக் கணவரும் சத்தியதாஸ் (கனடா), சத்தியசீலன் (கனடா),கலைவாணி (கனடா) காலஞ்சென்ற கருணாநிதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் முருகையா,காலஞ்சென்றவர்களான சரஸ்வதி (பாக்கியம்), கமலா, பூமணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கௌசி(கனடா), ஆனந்தன் (கனடா),நிசா(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சகிலன் , தக்சன்,தனுசுயன்,குயிலன், சந்தோஷ், அருண், லொசாணி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப ஒரு மணியளவில் நொச்சிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நொச்சிக்குளம்,
ஓமந்தை,
வவுனியா.

தகவல்: குடும்பத்தினர்
T.P: 077 461 0769
சத்தியதாஸ்

### திருமதி தெய்வானைப்பிள்ளை (சின்னத்தங்கைச்சி) சரவணமுத்து



வசாவிளான், கண்ணகிஅம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஆசாரிலேன், தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை சரவணமுத்து 09.09.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
ஆசாரி லேன், தாவடிவடக்கு.

### சரவணமுத்து பாலசிங்கம்



யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து பாலசிங்கம் 08.09.2015 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சரவணமுத்து - அன்னபிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும் கதிரவேலு - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும் தயாபரன்,காலஞ்சென்ற சிறிதரன் மற்றும் கிருபாகரன்,காலஞ்சென்ற ஜெயாதரன் மற்றும்சுசிகலாஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ் சென்றவர்களான நடராஜா,தியாகராஜா,யோகம்மா மற்றும் முத்துச்சாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கிருஷாலினி,சொர்ணரூபா , நந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கனகசபாபதி, காலஞ்சென்ற குகதாசன் மற்றும் நல்லநாதன் ,இந்திராணி,காலஞ்சென்ற நாகம்மா,தேவியம்மா, காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் தவமணிஆகியோரின் அன்பு மைத்துனரும் கபிசன்,பிரவீனா,கோபிகா,பிறேமிகா,சஞ்சயன் ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2015) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42, திருமகள் வீதி,
அரியாலை.

தகவல்: மைத்துனர்
க.கனகசபாபதி

# யாழ்.முஸ்லிம் ஒன்றுகூடலும் முஸ்லிம் கலாசார நிகழ்வும்

யாழ்ப்பாணம், செப்.11

யாழ்.முஸ்லிம் ஒன்றுகூடல் 2015, விசேட முஸ்லிம் கலாசார நிகழ்வு என்பவை எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் முஸ்லிம் கலாசார நிகழ்வொன்றை நடத்துதல், நல்லிணக்கத்தை ஊக்கு வித்தல், மீள்குடியேற்றத்தை ஊக்குவித்தல் போன்ற நோக்கங்களுக்காக வடக்கு மாகாண கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டு அமைச்சின் செயலாளர் எஸ். இரவீந்திரன் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அதில் யாழ்.மாவட்ட அரச உத்தியோகத்தர்கள், அரசியல் தலைவர்கள், உலமாக்கள், சமூகத்தலைவர்கள் எனப் பலரும் பங்கேற்றனர். அதில் மேற்படி கலாசார நிகழ்வை ஏற்பாடு செய்து முன்னெடுப்பதற்கான ஏற்பாட்டுக்குழு தெரிவு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வுகளின் பிரதம ஏற்பாட்டாளராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.அஸ்மின் செயற்படவுள்ளார். கலாசாரத் திணைக்களம் சார்பாக திருமதி செ.வனஜா, திருமதி சு.உஷா ஆகியோரும், பிரதான நிகழ்வுகளுக்குப் பொறுப்பாக ஜனாப் எம்.எல்.லாபிர், கே.எம்.நிலாம், மௌலவி அப்துல் அஸீஸ், ஜனாப் நெய்னா முஹம்மத் ஆகியோரும், மாணவர் போட்டி நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாக அஷ்–ஷெய்க் பைஸல் (மதனி), ஜனாபா ஜன்ஸி கபூர் ஆகியோரும், சிறுவர் போட்டிகளுக்குப் பொறுப்பாக ஜனாபா நிஸாரா மற்றும் ஜனாபா பர்ஹானா ஆகியோரும், திறந்த போட்டிகளுக்குப் பொறுப்பாக ஜனாபா ஸபீலாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

விளையாட்டு நிகழ்வுகளுக்குப் பொறுப்பாக ஜனாப் ஆர்.கே. சுவர்கஹான் மற்றும் ஜனாப் எம்.ஷரபுல் அனாம் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். நிகழ்வுகளைத் தொகுத்து வழங்குவதற்கு ஜனாப் என்.எம்.அப்துல் லாஹ் நியமிக்கப்பட்டுள்ளார்.

போட்டி நிகழ்ச்சிகளுக்கான அறிவித்தல்கள் மிகவிரைவில் வெளியிடப் படும் எனவும் வடக்கு மாகாண சபையின் அனுசரணையோடு இடம்பெறும் இந்தக் கலாசார நிகழ்வுகளில் அனைத்து யாழ்ப்பாண முஸ்லிம் மக்களும் கலந்துகொள்ள வேண்டும் எனவும் எஸ்.இரவீந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். (ற-10)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் கணபதிப்பிள்ளை வீரசிங்கம்



மண்ணில் 04.09.1930 விண்ணில் 12.08.2015

எமது சங்கத்தின் முன்னாள் தலைவர் கணபதிப்பிள்ளை வீரசிங்கம் அவர்கள் அமரத்துவம் அடைந்த 31 ஆவது நாளான இன்று அன்னார் சங்கத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிய சேவையினை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

அன்னாரது ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்

(11.15)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



தோற்றம் 16.07.1971

மறைவு 12.08.2015

### திருமதி சர்வாஜினி சுரேஷ்

கடந்த 12.08.2015 புதன்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் குல விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (11.09.2015) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

ஏழாலை மேற்கு ,சுன்னாகம்.

குடும்பத்தினர்.

# பால்குட பவனிக்கு பதியலாம்

யாழ்ப்பாணம், செப்.11

யாழ்.வண்.வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் விநாயகர் சதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு பால்குட பவனிக்கான பதிவுகள் நடைபெற்று வருகின்றன. பால்குடப் பவனி எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 3.45 மணிக்கு கலட்டி எச்சாட்டி மஹாமாரி அம்மன் ஆலயத்தில் ஆரம்பித்து ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தை வந்தடையவுள்ளது என்றும், அதற்கான பதிவுகளை அடியார்கள் மேற்கொள்ள முடியும் என்றும் ஆலய பிரதமகுரு தெரிவித்துள்ளார். (ற-ரி5)

# வருமான அறிக்கை சமர்ப்பிக்காத வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

தென்மராட்சி, செப்.11

சாவகச்சேரி நகரப் பகுதி வர்த்தகர்களில் 2012, 2013, 2014 ஆகிய ஆண்டுகளின் வருமானம் தொடர்பான அறிக்கைகளை இறைவரித் திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்காதவர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

குறித்த வர்த்தகர்கள் தமது வருமானம் பற்றிய விவரங்களையும், பிள்ளைகளின் வருமானம் தொடர்பான விவரங்களையும் சமர்ப்பிக்கத் தவறினர் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

நான்கு வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போதிலும், நீதிமன்றுக்கு வருகை தந்த வர்த்தகரொருவருக்கு உரிய காலத்தில் விவரங்களைச் சமர்ப்பிக்காத குற் றத்துக்காக 3 ஆயிரம் ரூபா அப ராதம் விதிக்கப்பட்டது.

அதேவேளை, வழக்குக்காக வர்த்தகர்கள் சார்பில் நீதிமன்றுக்கு வந்திருந்தவர்கள் கருத்துத் தெரிவித்த போது, குறித்த வர்த்தகர்கள் வங்கிகளில் பெற்ற கடன்களை மீளச் செலுத்த முடியாமல் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக தவித்துக் கொண்டிருக்கின்றனர். இந்தநிலையில் வருமான வரி விவரம் வழங்கப்படவில்லையென வழக்கத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.– என்றனர். (ற-9)

# கருத்தரங்கு

வடமாகாண நீதிமன்றங்களில் இயங்கும் சமுதாய சீர்திருத்தப் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 15 ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு மன்னார் நீதிமன்ற அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. நீதிமன்றங்களில் சமுதாயம் சார் சீர்திருத்தப் பிரிவுகளில் கடமையாற்றும் அபிவிருத்தி அலுவலர்கள், வேலைப் பரிசோதகர்கள் ஆகியோரை கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு சமுதாயம் சார் சீர்திருத்த திணைக்கள ஆணையாளர் சார்பில் வடமாகாண சமுதாய சீர்திருத்த அலுவலர் எம்.எம்.அனஸ் அறிவித்துள்ளார். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்திசார்ந்த இன்னிசைப் பாடல்களை ஆவணப்படுத்துவது பாராட்டத்தக்கது

## யாழ்.கல்வி வலய கல்விப் பணிப்பாளர் என். தெய்வேந்திரராஜா தெரிவிப்பு

அச்சுவேலி, செப்.11

இளைய தலைமுறையினர் பக்திசார் இன்னிசைப் பாடல்களை இயற்றி இசை அமைத்துப் பாடி இறுவட்டாக வெளியிட்டு ஆவணப்படுத்துவது பாராட்டத்தக்க ஒரு முயற்சியாகும். இத்தகைய பயனுள்ள, சமூகத்தில் நின்று நிலைக்கக் கூடிய முயற்சிகளுக்கு அனைத்துத் தரப்பினரும் தங்களது ஒத்துழைப்பு உதவிகளை வழங்க முன்வரவேண்டும். இசை மன இறுக்கத்தை மாற்றி, அமைதியை ஏற்படுத்துவதோடு மக்களை இயல்பான வாழ்க்கை முறைக்கும் உள்ளாக்குகின்றது. – இவ்வாறு கூறினார் யாழ்.கல்வி வலய கல்விப் பணிப்பாளர் என். தெய்வேந்திரராஜா.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்களான சி.நிதர்சன், எஸ்.விசாகன் மற்றும் ஆர். தமிழினி ஆகியோரால் பாடப்பட்ட அவ்வொல்லை சித்திவிநாயகர் இசைக்கானம் இறுவட்டு வெளியீட்டு விழா ஆலய முன்றலில் நடைபெற்றது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.தங்கவேலாயுதம் தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில் விருந்தினராகக் கலந்து கொண்டு இறுவட்டை வெளியிட்டு உரையாற்றும்போதே வலயக்கல்விப் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சங்கீதம் சகல நிலையில் உள்ளவர்களுக்கும் மன அமைதியை ஏற்படுத்தும். இளைய தலைமுறையினர் பக்திசார் பாடல்களை இயற்றி இசை அமைத்துப் பாடி இறுவட்டாக ஆவணப்படுத்தி வெளியிடுவது பாராட்டத்தக்கது. அதுவும் எனது மாணவர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டு இந்த இசைக்கானம் இறுவட்டை வெளியிடுவதும் அதில் நான் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குவதும் இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது. இத்தகைய ஆக்கபூர்வமான, சமூகத்துக்கு நன்மை தரும் முயற்சிகளில் இளைய தலைமுறையினர் ஈடுபடவேண்டும். இத்தகைய முயற்சிகளுக்கு சமூகத்தின் அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு உதவிகள் வழங்க முன்வரவேண்டும்.

நான் ஹாட்லிக் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றிய வேளையில் மன இறுக்கத்துக்கு உள்ளாகும் போது சங்கீத அறைக்கு அருகில் சென்று சில நிமிடநேரம் நிற்பதுண்டு. அடுத்த நிமிடம் மனம் இயல்பு நிலைக்கு வந்துவிடும். அந்த வகையில் இசைக்கு வசப்படாதார் எவரும் இல்லை.

பக்திசார் இசைப்பாடல்கள் எமது ஆலயங்களின் வரலாறுகளை, அற்புதங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுவதும், அவை இறுவட்டுக்களாக ஆவணப்படுத்தப்படுவதும் பாராட்டத்தக்க முயற்சிகளாகும். தம்மிடம் கற்ற மாணவர்கள் தங்களிலும் பார்க்க மேல்நிலையில் இருப்பதனையே ஆசிரியர்கள் விரும்புகின்றனர். ஒரு மாணவனை ஆசிரியர் தண்டிக்கும்போது குறித்த மாணவன் கவலை கொள்ளாவிடினும் ஆசிரியர்கள் கவலை கொள்கின்றனர். அது ஆசிரியர் – மாணவரிடையே நிலவும் தொடர்பு, பரஸ்பர விசுவாசம்.– என்று தெரிவித்தார். (ற–11)

# விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி, செப்.11

வீதியோரத்தில் பயணிகளை இறக்கிக் கொண்டிருந்த பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்ட மோட்டார் சைக்கிள் வீதியின் மறுபக்கமாக வந்த சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் இருவர் காயமடைந்தனர்.

இந்தச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை நுணாவில் பொது நூலகத்துக்கு அண்மையில் ஏ–9 வீதியில் நடந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மீசாலை வடக்கு இராமாவிலைச் சேர்ந்த கந்தசாமி மயூரன் (வயது–29) என்பவரும், சைக்கிளில் பயணித்த மட்டுவில் தெற்கைச் சேர்ந்த இரத்தினம் ஜெயகாந்தன் (வயது–48) என்பவருமே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.(ற–9)

# அனுமதிப் பத்திரமின்றிக் கொண்டு சென்ற மணல் பறிமுதல்

அனுமதிப்பத்திரமின்றி டிராக்டரில் மணல் ஏற்றிச் சென்ற இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

குறித்த இளைஞர் இந்து ஆலயம் ஒன்றுக்காக அனுமதிப்பத்திரத்துடன் டிப்பர் வாகனத்தில் கொண்டு வரப்பட்ட மணலை, டிப்பர் வாகனம் செல்வதற்கு ஒழுங்கை சிறியதாக இருந்ததால் மணலை ஓர் இடத்தில் பறித்து மீண்டும் அவ்விடத்திலிருந்து ஏற்றிக்கொண்டு சென்றபோதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

எதிரி குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து மணல் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டதுடன் எதிரி கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார். (ற–103)


உதயன் நல்லூர் தேர்ச் சிறப்பிதழ் - 11.09.2015

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

ஏன் AFஇல் FRENCH கற்க வேண்டும்?

- உலகம் முழுவதும் பிரெஞ்சு கற்பதற்கு 1883இல் PARIS இல் நிறுவப்பட்ட மிகப்பெரிய சர்வதேச நிறுவனம் AF 136 நாடுகளில் 1040 கிளைகள்(இலங்கையில் கொழும்பு, கண்டி, மாத்தறை, காலி & யாழில் 1976 முதல்). www.ambafrance-lk.org
- இலங்கையில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே நிறுவனம் AF.
- பிரான்ஸ்நாட்டு ஆசிரியர் & யாழ். பல்கலைக்கழக பிரெஞ் ஆசிரியர்கள்.
- சர்வதேச நிறுவனமொன்றின் CERTIFICATESஐ பெறுங்கள். இலங்கையில் AF மட்டுமே INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. குறிப்பு: DELF A1 பரீட்சை: AF மாணவர்களுக்கு Rs.3850. ஏனையோருக்கு Rs.9900. (10 மாதத்தில் 3 அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்)
- பிரெஞ்சு மொழிபெயர்புகள். VISA FORM போன்றவை நிரப்புதல்
- மாணவர்களுக்கென நூலக வசதி, AUDIO-VISUAL AIDS
- யாழ்,வன்னி,மன்னார்,தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AFஇல் படித்தே FRANCE, CANADA... செல்கிறார்கள்.
- யாரும் படிக்கலாம்.வயதெல்லை இல்லை.

வெளிநாடு ஒன்றில் இருக்கும்போது பிரெஞ் பேச தேவையான ஆற்றலை வழங்குகிறோம்.

BEST PLACE IN SRI LANKA

வகுப்புகள் விரைவில் ஆரம்பம்... சனி,ஞாயிறு உடன் அழைத்து பதிவை உறுதிப்படுத்துங்கள்.

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

AFஆல் முடியாதவை!

✓ யாழில் எம்மைவிட்டால் சிறந்த பிரெஞ் ஆசிரியர்கள் வேறு எவருமில்லை எனகூறல்!? வேறு நிறுவனங்களில் படித்தவர்களை எமது நிறுவனத்தில் படித்தவர்கள் எனகூறல்!?

✓ DELF பரீட்சையில் எமது மாணவர்கள் மட்டுமே 100% சித்தி என கூறல்!? EMBASSY, INTERNATIONAL என்ற சொற்களை தவறாக பயன்படுத்தி எமை சர்வதேச நிறுவனமாக காட்டுதல்?

மாணவர்களே, பணம், நேரத்தை செலவழித்துப் படிக்கும்போது நம்பிக்கை, சர்வதேச அங்கீகாரம், சிறந்த கற்றல் கற்பித்தல் உள்ள நிறுவனத்தை தெரிவுசெய்யுங்கள். தனிநபர்களிடம் ஏமாந்த பலர் AFற்கு வந்துள்ளார்கள். 021 222 8093


உதயன் நல்லூர் தேர்ச் சிறப்பிதழ் - 11.09.2015

# Vamadeva Memorial Tennis Court

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் (TCT) முப்பது இலட்சம் ரூபா நிதிப்பங்களிப்புடன் புனித பத்திரிசியார் கல்லூரியில் (St.Patrick's College, Jaffna) அமைக்கப்பட்ட

**வாமதேவா ஞாபகார்த்த டெனிஸ் விளையாட்டரங்கு, நுழைவாயில்**

ஆகியன வைபவ ரீதியாக யாழ்ப்பாண பேராயர் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் திறந்து வைக்கப்பட்ட போது

## நிகழ்வுகளின் பதிவு









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## பிரதம குருவின் ஆசிச்செய்தி



ரதேப்யோ ரத பதிப்பிச்சவோ - நமோ நம. என்று இருக்கு வேதத்திலே சிறப் பித்துக் கூறப்பட்டுள்ள மகிமை பொருந்திய ரதோற்சவப் பெருநாளில் ஓங்காரப் பிர ணவப் பெருந் தகையாம் 'பழம் பதியான்' தேரேறி வருகிறார். ஆலய வரலாற்றிலேயே முதன் முதலாக 1008 கலசங்களுடன் கூடிய அஷ்டோத்திர சகஸ்ர கலசாபி ஷேகம் இன்று இடம்பெறுவது கூடுதல் சிறப்பு.1981 ஆம் ஆண்டிலிருந்து இவ்வாலயத்திற்கும் அடி யேனுக்கும் தொடர்பு இருந்து வருவது விநாயகரின் பேரருட் திறனே. சர்வசாதகராக, போதகராக, பிரதிஷ்டா பிரமத குருவாக, மகோஹ்சவ சிவாச்சாரியாராக சேவை செய்யக்கிடைத்தமை பெரும் பேறாகும். அது மட்டுமல்ல எமது சகலன் ''மறை வண்ணர்'' து.மணிவண்ணக் குருக்களும் இவ் வாலயத்திலே தொன்று தொட்டு மஹோற்சவகால சிவாச் சாரியாராக கடமையாற்றிவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.இன்று தேரேறி வரும் பழம்பதியான் பேரருள் உங்கள் அனைவருக்கும் கிடைக்கவும், புலம்பெயர்ந்து வாழும் அனைத்து பழம் பதியான பெருங்கருணை கிடைக்கவும் பழம் பதியானை வேண்டு கின்றேன்.

**சர்வ சாதக சக்கரவர்த்தி, சகலாகம வாருதி**
**டாக்டர் அருள்ஜோதி சாம்பசிவ ஜெகதீஸ்வர**
**சிவாச்சாரியார் - J.P**
**அதிபர்,**
**சர்வதேச ஸ்ரீதேவி குருகுல சபரிபீடம்**
**நாயன்மார்கட்டு**

## செல்வம் செழிக்கும் பழம்பதியான்

வடகடலும் தென்கடலும் சங்கமிக்கும் இடத்தில் யாழ்ப்பாண நன்நகரில் மல்லை என்னும் இடத்தில் எழுந்தருளியிருக்கும் மல்லாகம் பழம்பதியாரின் ரதோற்சவம் காண வாரீர் பலதரப்பட்ட செல்வங்களையும் அள்ளி செழிக்கும் மல்லாகம் பழம்பதியானின் அருள் ஆட்சி எல்லோருக்கும் கிடைக்கவேண்டும். நாட்டில் சாந்தியும் சமாதானமும் கிடைக்கவேண்டு மென்று பழம் பதியானின் ராதோற்சவ காலத்தில் வேண்டி நிற் கின்றோம்.

**சிவஸ்ரீ முத்தையாக் குருக்கள்**
**நாகேந்திர சர்மா ஆதீனகர்த்தா.**

## ஆலய வரலாறு

வழிப்போக்கர் வாயிலும் வரும் கருணை மொழி பழங்கோயிலானே என்பது. இந்தப் புதுமையான பெயர் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயிலுக்கு ஏன், எவ்வாறு எழுந்ததென்பதை வரலாற்று நூல்களிலே காண்பதரிது. கர்ண பரம்பரையாக வந்துகொண்டது இந்நாமம். இந்த உண்மையை இவ் ஆதீனப்புலவர் இயற்றிய ''மல்லை மாநகர் பழம் பிள்ளையார் - பன்மணிமாலை'' என்ற நூல் மிகத் தெளிவாக விளக்குகின்றது. ஆலயம் இதன் காலம் எழுநூற்றாண்டுகளுக்கு முன் என்றால் ஆங்கில ஆண்டு 1300 இற்கும் முன் என்பது புலனாகும். போத்துக்கேயர் போர்ப்படை யாழ்ப்பாணத்தில் படையெடுத்துப் படுகொலையும் பழிபாதகமும் செய்தது வரலாற்றின்படி 1585 ஆம் ஆண்டாகும்.

எங்கள் ஆலய அந்தணப் பரம்பரையில் யான் அறிந்த அளவில் ஒரு சின்னையர் இருந்தனர். அவர்களின் மூதா தையர் தான் இக்கோயிலை நிறுவியவர்கள். சின்னையர் அவர்கள் வம்சாவழி வாய்ச்சொல் வரலாற்றின்படி, போத்துக் கேயர் யாழ்ப்பாணத்தில் பல கோயில்களை இடித்து ஒழித்து வரும் அந்த ஆவேசத்தில் இந்தப் பிள்ளையார் கோயிலை அணுகியும் உட்புகமுடியாது திகைத்துப் பின் வாங்கினர் எனவும், மூல விக்கிரகத்தை பூசை செய்யும் அந்தணர் கூரையில் செருகிக் காப்பாற்றினார் என்றும் சொல்லப்படுவதை அறிந்திருக்கின்றோம்.

ஆதீனப் புலவர் இயற்றிய

''எல்லாமாய் எங்குமாய் இன்ப எழிலாய் இயங்குமிறை
சொல்லாகும் தும்பிக்கைத் தூயோன் பிரணவத் தோற்ற மதில்
மல்லாக மாநகர் வைகி வளமருள் மன்பதிதான்
பல்லாண்டு டியல்புதுப் பண்பார் பழங்கோயில் பாரினிலே''
''பொல்லாத புன்நெறிப் போர்த்துக்கற் போர்வீரர்
மல்லாக மாதலத்தில் மாலுறச்செய் தொல்லோனே
எல்லாள ஏரம்பா ஐயா பழம்பிள்ளையாய்
நல்லாராய் வாழ நடத்து''

என்று சிறந்த செய்யுள்கள் இத்தலத்தின் உத்தமத்தை நன்கு புலப்படுத்துகின்றன.ஆரம்பத்தில் பிள்ளையார் கோயில் அமைந்தது. அதன் பின் அநேக ஆண்டுகள் சென்றதும் சிவஸ்ரீ சின்னையர் சுற்றத்தவர் சிவஸ்ரீ சீனிஐயா அவர்கள் திருமுருகன் கோயில் அமைத்தனர். பூசைகள் செவ்வனே நடத்தி வந்தனர். 1917 ஆம் ஆண்டு ஐயர் அவர்கள் அகால மரணமடைய, திருமுருகன் கோயில் நிர்வாகத்தை சிவஸ்ரீ முத்தையாக் குருக்கள் பொறுப்பெடுத்து நடத்தினர். அவருக்குப்பின் யான் நியமங்களை நெறியாக நிகழ்த்தி இவ் ஆலயம் சிறப்புற கிரியை முறைகள் யாவும் நடைபெற்று வருகின்றன.

## அந்நியர் கால அழியாத் தொன்மை விநாயகர்

''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது நம் ஆன்றோர்கள் கூறிய கருத்து. ஆலயங்கள் நமது கலாசாரச் சின்னங்கள். பக்தியோடு பண்பாட்டையும் வளர்ப்பவை தலங்களாகும். மனதை ஒருநிலைப்படுத்தும், மனதின் மேன்மையை வலியுறுத்தும் மையங்களவை. தெய்வத்திற் கேற்பவும், வழிபடும் மக்களின் வசதிக்கேற்பவும் சிறியதும், பெரியதுமான ஆலயங்கள் அனைத்து இடங்களிலும் நிரம் பியுள்ளன.

இவ்வாறு ஆலயங்கள் எங்கும் பரவியுள்ள நிலையில் எமது தாய்த் திருநாட்டின் யாழ் மண்ணிலே மல்லாகம் பகுதியில் உள்ள அந்நியர் ஆட்சிக் காலம் தொட்டு தொன்மை வாய்ந்த பழம் பெரும் கோயிலான மல்லாகம் பழம்பதிப் பிள்ளையார் திருமுருகன் கருமாரி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் 02.09.2015 தொடக்கம் வெகுவிமரிசையாக நடைபெறுகின்ற நிலையில் இன்று தேர்த்திருவிழா கோலாகலமாக நடைபெறுகின்றது.

இவ்வாலயம் அந்நியர் ஆட்சிக் காலத்திலே அழிக்க முடியாத தனிச் சிறப்புவாய்ந்த ஆலயமாகத் திகழ்வது வரலாறு கண்ட உண்மை. இத்தகைய சிறப்பு வாய்ந்த ஆலயத்தின் தேர்த் திருவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பேருவகை கொள்கிறேன். ஆலயத்தின் பெருமைகளும், பெயர்களும், கலாசாரமும் அழிந்து விடாது பாதுகாக்க மென்மேலும் சரித்திரப் புகழ் அடைய விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

சோ. சுகிர்தன்,
தலைவர்,
மல்லாகம் பழம்பதி பிள்ளையார் திருமுருகன் கருமாரி
தேவஸ்தானம், மல்லாகம்.

K.V.தாசன் பந்தல் தாசன் ஆட்ஸ்
மாவிட்டபுரம் (மல்லாகம்)
தொ.பே.077 947 881

மதன் பந்தல் சேவை
மல்லாகம் கிழக்கு, மல்லாகம்.
தொ.பே.077 910 3445

உதயா பல்பொருள் வாணிபம்
கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.

அனோஜன் றேடர்ஸ்
கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.
தொ.பே.
021 320 5132

R.T.R. ICE CREAM CORNAER
K.K.S. Rd, Mallakam.
T.P.021 321 8081

SOTHY STUDIO
K.K.S. Rd,
Mallakam.

COMPUTAR CORNER
K.K.S. Rd.
Mallakam.
T.P. 021 205 9044

A.N. பல்பொருள் வாணிபம்
நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

ESWARY TIMBER DEPOT
K.K.S. Rd.Mallakam.

Ledchumanan 'A' Hard Ware
K.K.S. Rd.Mallakam.
T.P. 077 392 2317

கஜகரன் பல் பொருள் வாணிபம்
கே.கே.எஸ். றோட்,
மல்லாகம்.

DREAM STYLE Beauty Parlour
K.K.S. Rd.Mallakam.
T.P. 077 555 0396

பிள்ளையார் வெதுப்பகம்
196, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

Suresh Batt ery charge & Sales & Services
No.194, K.K.S. Road,
Chunnakam.
T.P. 021 791 2987

விதுஜா கூல் ஸ்பொட்
7 ஆம் கட்டை,
கே.கே.எஸ். வீதி,
மல்லாகம்.

SABINAYA MOTORS
Authorized Dealer TVS
No.80/ K.K.S. Road, Mallakam.
T.P. 077 886 4315,
021 300 3411

சிவராம் நகையகம்
கே.கே.எஸ். வீதி, மல்லாகம்,
உரிமையாளர்:
நா.சிவராசா (ராசன்)

THAVAMJA Engineering Warks
Court's Road,
Mallakam.

ஜெயதுர்க்கா நகைத்தொழிலகம்
புகையிரத வீதி, மல்லாகம்,
077 611 6929

Rajah Cyele shop
Station Road,
Mallakam.
021 790 4555

நிஷ்குறோசரி Stors
Statlion Road,
Mallakam.

அபி ரெக்ஸ்ரைல்ஸ்
கே.கே.எஸ்.றோட்,
மல்லாகம்.

TN பந்தல்சேவை
TN Complex
கே.கே.எஸ்.றோட், மல்லாகம்.
T.P.077 902 5111

பழம்பதி தேவஸ்தானம்
மல்லாகம்.

மல்லாகம் பழம் பதி
திருமுருகன் இந்து இளைஞர் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவீன ரக புறொசெஸ்ஸருடன் சொனி எக்ஸ்பெரியா இசற் 5 அல்ற்ரா

சொனி நிறுவனம் எக்ஸ்பெரியா இசற் 5 அல்ற்ரா எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைபேசியை அடுத்த வருடம் அறிமுகம் செய்யவுள்ளது.

குவல்கொம் ஸ்நாப்டிராகன் 820 புறொசெஸ்ஸருடன் அறிமுகம் செய்யப்படவுள்ள இந்தக் கைபேசி 6.44 அங்குல அளவு, 3840 X 2160 பிக்செல் றெசலூசன் உடைய தொடு திரையைக் கொண்டுள்ளதுடன், பிரதான நினைவகமாக 4ஜிபி ராம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இவை தவிர 23 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 5 மெகாபிக்சல்களை உடையதும் எக்ஸ்மொர் ஆர்எஸ் சென்சாரை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமராவும் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் அன்ரோயிட் இயங்குதளத்தின் பிந்திய பதிப்பான அன்ரோயிட் 6.0 மார்ஸ்மல்லோவையும் கொண்டதாக இந்த கைபேசி அடுத்த வருடம் பெப்ரவரி மாதமளவில் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

# இரு புறமும் பார்வையிடக்கூடிய திரை

எல்ஜி நிறுவனமானது இரு புறமும் காட்சிகளை(டபிள் சைடெட்) உருவாக்கக்கூடிய திரையை ஜேர்மனியின் தலைநகர் பேர்லினில் இடம்பெற்ற ஐஎப்ஏ 2015 நிகழ்வில் அறிமுகம் செய்துள்ளது.

ஓலெட் (ஓகானிக் லைற்- எமிற்றிங் டையொடி) தொழில்நுட்பத்தினைக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த திரையில் 281 சென்ரி மீற்றர், 139 சென்ரி மீற்றர் அளவுகளைக் கொண்ட இரு வகைகளை உருவாக்கியுள்ளது. இதேவேளை இவற்றின் தடிப்பு 5.3 மில்லி மீற்றர்களாக காணப்படுவதுடன், இந்த அளவானது ஐபோன்- 6 ஸ்மார்ட் கைப்பேசியின் தடிப்பை விடவும் குறைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது மாதிரிகளை மட்டுமே அறிமுகம் செய்துள்ள எல்ஜி நிறுவனம் விரைவில் விற்பனைக்கு விடக்கூடிய திரைகளை உருவாக்கவுள்ளது.



# 3டி தொடுதிரையுடன் ஐபோன்- 6 எஸ்



மக்கள் மத்தியில் பிரபல்யம் வாய்ந்த ஸ்மார்ட் கைபேசியான ஐபோனின் புதிய பதிப்பான ஐபோன்- 6 மற்றும் ஐபோன்- 6 பிளஸ் கடந்த வருடம் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் விரைவில் ஐபோன்- 6 எஸ் மற்றும் ஐபோன்- 6 எஸ் பிளஸ் ஆகிய கைபேசிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. குறித்த கைபேசிகள் தொடர்பான பல தகவல்கள் நாளுக்கு நாள் வெளியாகிய வண்ணம் உள்ளன.

இவற்றின் தொடர்ச்சியாக ஐபோன்- 6 எஸ் கைபேசியானது முப்பரிமாண தொடுதிரையைக் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது எனும் தகவல் வெளியாகியுள்ளது.

எனினும் இந்தத் தகவலை அப்பிள் நிறுவனம் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கவில்லை. எவ்வாறெனினும் ஐபோன்- 6 எஸ் 2910 ஒ 1080 பிக்செல் றெசொலுசன் உடைய திரையையும், ஐபோன்- 6 எஸ் பிளஸ் 2560 ஒ 1440 பிக்செல் றெசொலுசன் உடைய திரையைக் கொண்டதாகவும், இரண்டு கைபேசிகளும் அப்பிள் ஏ9 புறொசெஸ்ஸர் பிரதான நினைவகமாக 2ஜிபி ராம், 12 மெகாபிக்சல்களை உடைய கமராவைக் கொண்டதாகவும் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குருதிச் சோகை இனங்காணப்பட்ட குழந்தைகளுக்கு ஊட்ட மருந்துகள்

யாழ்ப்பாணம், செப்.11

தீவகத்தின் வேலணைப் பிரதேசத்தில் குருதிச் சோகை இனங்காணப்பட்ட 1–5 வயதுக்குட்பட்ட 30 குழந்தைகளுக்கு இரும்புச் சத்து அதிகம் உள்ள ஊட்ட மருந்துகள் வழங்கப்பட்டன.

சங்கானை லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் லயன் மருத்துவர் கஜெயச் சந்திரமூர்த்தியின் வழிகாட்டலில் இந்த நிகழ்வு வேலணை பிராந்திய சுகாதார பணிமனையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் தீவக பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி லயன் மருந்துவர் குகதாசன், சங்கானை லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் ஜெ.றஜீவன், நிகழ்ச்சி திட்டத் தலைவர் லயன் சீமாட்டி மயூரிக்கா, மருத்துவர்கள் அஜெயக்குமார்,லயன் சீமாட்டி மேரி மெற்லின் மற்றும் வேலணைப் பிர தேசத்தில் வசிக்கும் பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் கபிலன் என்பவரின் பிறந்ததினத்தை முன்னிட்டு இந்த மருத்துவ உதவி வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப் பட்டது. (ந–10)



# முதியோர் சங்கப் பிரதிநிதிகளுக்கு இடையே வினாடிவினாப் போட்டி

## கரைச்சிப் பிரதேச செயலக அணி முதலிடம்

கிளிநொச்சி, செப்.11

கிளிநொச்சி மாவட்ட முதியோர் சங்கப் பிரதிநிதிகளுக்கிடையிலான வினாடி வினாப் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றது. அதில் கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி ஆகிய பிரதேச செலயகங்களைச் சேர்ந்த முதியோர் சங்கங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தனர்.

போட்டிகளில் முதலிடத்தை கரைச்சி பிரதேச செயலக அணியும் இரண்டாவது இடத்தை கண்டாவளைப் பிரதேச செயலக அணியும் பெற்றுக் கொண்டன. முதலிடம் பெற்ற கரைச்சி பிரதேச செயலக அணி கடந்த வருடம் பிரதேச மாவட்ட மாகாண நிலைப் போட்டிகளில் முதலிடம் பெற்று தேசிய நிலைப் போட்டியில் பங்குபற்றியிருந்தது.(ந–9)



# பின்தங்கிய கிராமப் பாடசாலைகளுக்கு மேம்படுத்தப்பட்ட குடிதண்ணீர் வசதி

*முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் ஏற்பாட்டில்*




மட்டக்களப்பு, செப்.11

மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள தமிழ், முஸ்லிம் கிராமப் பாடசாலைகளில் குடி தண்ணீர் வசதிக்கான தேவைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. உள்நாட்டுப்போர் மற்றும் இயற்கை இடரினால் பாதிக்கப்பட்டு அபிவிருத்தியடைந்து வரும் பின்தங்கியுள்ள கிராமப் பாடசாலைகளில் மாணவர்களுக்கான குடி தண்ணீர் வசதிகள் மிக நீண்ட காலமாக நிவர்த்தி செய்யப்படாமல் இருந்து வந்தன.

'சகலருக்கும் கல்வி' எனும் அபிவிருத்தித் திட்டத்துக்கமைவாக தேர்வு செய்யப்பட்ட ஏழு கிராமப் பாடசாலைகளிலும் 4.9 மில்லியன் ரூபா செலவில் புதிய நீர்த்தாங்கிகள் நிர்மாணிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

வலயக்கல்வி அலு வலகங்களுடன் இணைந்து இலங்கைக்கான முஸ்லிம் எயிட் கள நிறுவனம் இத்னை நிர்மாணித்துள்ளது.

இதன் திறப்பு விழா நிகழ்வு மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்துக்குட்பட்ட மீராவோடை அல்–ஹிதாயா மகா வித்தியாலயத்தின் அதிபர் ஏ.எல்.அபுல்ஹஸன் தலைமையில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.சேகுஅலி, ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.மீராசாஹிப், முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் ரீ.சலீம், சிரேஷ்ட செயற்திட்ட அதிகாரி எம்.எம்.எம். முனீர், மாவட்ட இணைப்பாளர் எம்.ஏ.எம்.அஸ்மி,கல்வி வலயத்தின் உதவிக்கல்விப் பணிப் பாளர் கே.எம்.ஜெமிலூன் நிஸா, பாடசாலையின் பிரதி அதிபர் ஏ.எம்.அன்வர்,முன்னாள் பிரதேச சபை தவிசாளர் கே.பீ. எஸ்.ஹமீட் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ந–10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இருவரைச் சித்திரவதை செய்து கொடூரமாகக் கொன்ற ஐ.எஸ்.

டமஸ்கஸ்,செப்.11
தீவிரவாதிகள் போல் நடித்து உளவு பார்த்ததாகக் கூறி இரண்டு ஆண்களைச் சித்திரவதை செய்து கொலை செய்த வீடியோவை ஐ.எஸ். அமைப்பினர் வெளியிட்டுள்ளனர். ஈராக், சிரியா ஆகிய நாடுகளைத் தளமாக கொண்டு இயங்கி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் பல்வேறு அட்டூழியங்களைப் புரிந்து வருகின்றனர்.

உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் இளைஞர்கள் படையெடுப்பதால், அந்த இயக்கம் பலம் பெற்று வருகிறது. இந்த நிலையில் தீவிரவாதிகள் போல் நடித்து ஐ.எஸ். இயக்கத்தை உளவு பார்த்ததாகக் கூறி இரண்டு ஆண்களை ஐ.எஸ். இயக்கத்தினர் சித்திரவதை செய்து கொடூரமாகக் கொலை செய்த வீடியோ வெளியாகியுள்ளது. அந்த வீடியோவில், இரண்டு ஆண்களின் உடலில் வெடிகுண்டு கட்டப்பட்டுள்ளது. அதன் திரியை எரிய விட்டு, அவர்களது கண்களில் சாவுப் பயத்தை ஏற்படுத்தித் தீவிரவாதிகள் சித்திரவதை செய்கின்றனர். பின்னர் அந்த வெடிகுண்டுகள் வெடித்து, அவ்விருவரும் உயிரிழக்கின்றனர். பின்னர் ஒரு கட்டடம் வெடித்துச் சிதறுவதும் காட்டப்படுகிறது. அதாவது உளவு பார்த்ததாகக் கொலை செய்யப்பட்ட இருவரும் அந்தக் கட்டடத்தின் உள்ளேயே கொலை செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

## குஜராத்தில் 110,000 சிறுவர் தொழிலாளர்கள்

### அரச சார்பற்ற நிறுவனம் தகவல்



குஜராத் மாநிலத்தில் ஒருலட்சத்துக்கும் அதிகமான சிறுவர் தொழிலாளர்கள் பல்வேறு துறைகளில் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று மேற்கொண்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குஜராத் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் பருத்தி விதைகள் நாட்டின் 55 சதவீத தேவை யைப் பூர்த்தி செய்கின்றன. இந்த விதை உற்பத்திப் பிரிவில் மட்டும் சுமார் ஒரு லட்சத்து 10 ஆயிரம் சிறுவர்கள் தொழிலாளர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர். இந்த தொழிலாளர்கள் அனைவரும் 14 வயதுக்குட்பட்டவர்களாவர்.

இந்தியா முழுதிலும் உள்ள பருத்தி விதை உற்பத்திப் பிரிவில் சுமார் 25 சதவீதம் அளவுக்கு 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் ஆந்திரா, தெலுங்கானா, தமிழ்நாடு, கர்நாடகா, ராஜஸ்தான் உட்பட பல்வேறு மாநிலங்களிலும் இந்தத் துறையில் சிறுவர் தொழிலாளர்கள் பணி புரிந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

குஜராத் மாநிலத்தில் 56.7 சதவீத சிறுவர்கள் பாடசாலைப் படிப்பை பாதியில் கைவிட்டவர்களாகவும், 34.3 சதவீதத்தினர் பாடசாலைக்குச் செல்பவர்களாகவும், சீசன் கால கட்டங்களில் முழுநேர தொழிலாளர்களாகப் பணி புரிவதாகவும் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாது சிறுவர் தொழிலாளர்களில் பெரும்பாலானவர்கள் பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த சிறுவர்கள், பிற இனத்தைச் சார்ந்த சிறுவர்கள் ஆவர் எனவும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 50 ஆயிரம் டொலர் பரிசு தமிழ் மாணவன் சாதனை



மெல்போர்ன்,செப்.11
ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற ஸ்பெல்லிங்பீ எனப்படும் மிக அதிகமான ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட சொற்றொடரை வாசிக்கும் போட்டியில் அங்கு வசிக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தமிழ்த் தம்பதியரின் மகனான அனிருத் கதிர்வேல்(வயது–9) என்ற சிறுவன் சம்பியன் பட்டத்தை வென்றதுடன் 50 ஆயிரம் டொலர்களையும் பரிசாகப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த அனிருத்தின் பெற்றோரான பிரிதிவி ராஜ்–சுஜாதா தம்பதியினர் 16 வருடங்களுக்கு முன்னர் ஆஸ்திரேலியாவில் குடியேறி, மெல்போர்ன் நகரில் வசித்து வருகின்றனர். அங்குள்ள ஒரு பாடசாலையில் படித்து வரும் அனிருத் முதல் வகுப்பு மாணவனாக இருந்த வேளையில் வருடந்தோறும் நடத்தப்பட்டு வரும் ஸ்பெல்லிங் பீ போட்டியில் ஆர்வத்துடன் பங்கேற்று வந்துள்ளார். இந்த வருடம் நடைபெற்ற போட்டியில் உள்நாட்டு மாணவர்களை எல்லாம் பின்னுக்குத்தள்ளி சம்பியன் பட்டத்தை அனிருத் வென்றுள்ளார். மேலும், அவரது கல்விக்கான உதவித்தொகையாக 50 ஆயிரம் ஆஸ்திரேலிய டொலர்களும், அவரது பாடசாலைக்குத் தேவையான சுமார் 10 ஆயிரம் டொலர்கள் மதிப்புள்ள உபகரணங்களும் அவருக்குப் பரிசாக வழங்கப்பட்டுள்ளன. (ஐ)

## கைபேசி அழைப்புக்கு பதில் இல்லை மனைவியின் மூக்கை கடித்த கணவர்



சீனாவில்தமது கணவர்கைபேசிக்குஅழைப்பு விடுத்தபோது பதில் அளிக்காத கோபத்தில் தமது மூக்கைக் கடித்துத் தின்றுவிட்டதாக அவரது மனைவி பரபரப்பு முறைப்பாடொன்றை வழங்கியுள்ளார். கிழக்கு சீனாவின் சாங்டோங் மாகாணத்தைச் சேர்ந்த யாங் என்ற பெண்மணியின் கணவர் அண்மையில் ஒரு நாள் அதிகாலை 2 மணியளவில் தமது மனைவியின் கைபேசிக்கு அழைப்பு விடுத்துள்ளார். அப்போது யாங் இரவு நேரப் பணியில் இருந்த காரணத்தால், அந்த அழைப்பை ஏற்க முடியவில்லை.

இதனால் யாங் மீது கோபம் கொண்ட அவரது கணவர், மனைவி வேலை செய்யும் இடத்துக்கு நேரில் சென்று சண்டையிட்டுள்ளார். மேலும் அந்தச் சண்டையின் போது, அந்த நபர் யாங் கின் மூக்கைக் கடித்துத் தின்றுவிட்டதாக சீனப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்த நிலையில், யாங் கின் மூக்கு கிட்டத்தட்ட முற்றிலுமாக இல்லாது போய்விட்டது என்றும் – அவரது மூக்கு சரியாக இயங்கத் தேவையான அனைத்து சிகிச்சைகளும் அளிக்கப்படவேண்டும் எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)



நோர்வே நாட்டில் நவ் ஆர்ட் எனும் பெயரில் தெரு ஓவியக் கலைஞர்களுக்கான திருவிழா, கடந்த வாரம் கோலாகலமாக நடைபெற்றது. அதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஓவியக் கலைஞர்கள் கலந்துகொண்டனர். ஆனால் அவர்களில் பிரெஞ்சுக் கலைஞர்களான எல்லா மற்றும் பிட் இருவரும் சேர்ந்து வரைந்த லிலித் மற்றும் ஒலா என்ற ஓவியம் தான் பலரையும் பிரமிப்பில் ஆழ்த்தியுள்ளது. அந்த ஓவியம் நோர்வேயில் உள்ள தொழிற்சாலைக் கட்டடங்களுக்கு மேலாக வரையப்பட்டது. மேலும் 2 லட்சத்து 25 ஆயிரம் சதுர அடி அளவுக்குப் பரந்து விரிந்துள்ளது.(ஐ)

## பாகிஸ்தானில் பத்திரிகையாளர் சுட்டுக்கொலை

பாகிஸ்தானின் கராச்சி நகரில் மூத்த பத்திரிகையாளர் ஒருவர் மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கராச்சியின் வடக்கு செக்டார்சி பகுதியில் வசித்து வந்த அப்தாப் ஆலம் (வயது–42) என்பவர் ஜியோ நியூஸ், சமா டிவி உள்ளிட்ட பல்வேறு ஊடகங்களில் பணியாற்றியுள்ளார். நேற்றுமுன்தினம் தனது வீட்டில் இருந்து வெளியே சென்ற அவரை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த இரண்டு நபர்கள், திடீரென அவரை நோக்கித் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர். இதனால் தலை, கழுத்து, மார்பு என உடல் முழுக்க துப்பாக்கிக் குண்டுகள் துளைத்ததால் குருதி வெள்ளத் தில் சரிந்த அவரை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற போதும் அவரது உயிரைக் காப்பாற்ற இயலவில்லை. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சீனாவின் வசமுள்ள திபெத்தின் தன்னாட்சிப் பகுதி உருவாகி 50 வருடங்கள் நிறைவடைந்ததை நினைவுகூரும் வகையில், அதன் தலைநகரில் கலைநிகழ்ச்சிகளுடன் கூடிய கண்கவர் விழா நடைபெற்றது. (ஐ)

## 46 வருடங்கள் தலைக்குள் தையல் ஊசி

பீஜிங்,செப்.11

சீனாவில் பெண் ஒருவரின் தலைக்குள் மூளைக்கு அருகில் 46 வருடங்களாக இருக் கும் தையல் ஊசியை அகற்ற மருத்துவர்கள் முடிவு செய்துள்ளனர். சீனாவின் கிழக்குப் அன் ஹுய் மாகாணத்தில் உள்ள ஹயைபியை சேந்த லியு கேயோ என்பவர் கடும் தலைவலி யால் அவதிப்பட்டு மருத்துவ மனைக்குச் சென் றுள்ளார்.

அங்கு மருத்துவர்கள் சோதனை செய்து பார்த்ததில் அவரது தலைக் குள் மூளையின் அருகே 4.6 சென்றி மீற்றர் நீளமான தையல் ஊசி யொன்று இருந்தது தெரியவந்தது. அந்த ஊசி லியு மூளையின் இடது அரைக் கோளத்தில் நேராக நின்று கொண்டு இருந்ததால், தொடர்ந்து தலைவலி இருந்து வந்துள்ளது. குறைந்தது 46 வருடங்களாவது அந்த ஊசி அவரது தலைக்குள் இருந்திருக்க வேண்டும் என்றும், அறுவைச் சிகிச்சை செய்யுவில்லை என்றால் எதிர்காலத்தில் வலிப்பு மற்றும் கடுமையான உடல் உபா தைகள் ஏற்படும் எனவும் மருத்து வர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ–ரி4)

## தூதரகங்களை மூடுகிறது நைஜீரியா?

அரச செலவினங்களைக் குறைக் கும் நோக்கில் தமது தூதரகங் களைப் பேணுவது தொடர்பாக மறுபரி சீலனை செய்ய நைஜீரிய ஜனாதிபதி முஹமது புஹாரி உத்தர விட்டுள்ளார்.

பல தூதரகங்களில் போதுமான கட்டமைப்பு வசதிகள் இல்லை யென்றும் அதனால் அங்கு பணி யாற்றும் ஊழியர்கள் மனச்சோர் வடைந்துள்ளனர் எனவும் நைஜீ ரிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார். தற்போதுள்ள சூழலில் நைஜீரி யாவால் பல நாடுகளில் தூதரகங் களை வைத்திருக்க வசதியில்லை எனவும் அவற்றை மூடுவது தொடர்பில் பரிசீலனை செய்யு மாறும் முஹமது புஹாரி உத்தர விட்டுள்ளார். (ஐ)

# எட்டு இலட்சம் அகதிகள் ஐரோப்பாவில் தஞ்சமடைவர்

## ஐ.நா. மதிப்பீடு

ஜெனிவா,செப்.11

போரினால் இடம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் இந்த வருடமும், அடுத்த வருடமும் மொத்தம் 8 லட்சத்து 50 ஆயிரம் அகதிகள் தஞ்சமடைவர் என ஐ.நா. அகதிகள் அமைப்புத் தெரிவித் துள்ளது. உள்நாட்டுப் போர் காரண மாகச் சிரியாவில் உள்ள மக்கள் அகதிகளாக வெளியேறி ஐரோப் பிய நாடுகளுக்குச் செல்கின்றனர். அதேபோன்று உள்நாட்டுப் பிரச் சினை நிலவும் ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் இருந் தும் மக்கள் வெளியேறி ஐரோப் பிய நாடுகளுக்கு அகதிகளாகச் செல்கின்றனர். படகுகள் மூலம் கிரீஸ் நாட்டின் லெஸ்பாஸ் தீவுக்கு வரும் அகதிகள், அங்கிருந்து மசி டோனியா, சேர்பியா, ஹங்கேரி, ஆஸ்திரியா ஆகிய நாடுகளை பஸ்கள் மூலமாகவும், ரயில்கள் மூலமாகவும் கடந்து ஜேர்மனிக்குச் செல்கின்றனர். தற்போது கிரீஸ், ஹங்கேரி, இத்தாலி ஆகிய நாடு களில் ஒரு லட்சத்து 60 ஆயிரம் அகதி கள் உள்ளனர். அகதிகளைப் பகிர்ந்து கொள்ள ஐரோப்பிய யூனியன் கூட்டமைப்பில் உள்ள ஏனைய நாடு களும் முன்வர வேண்டும் என ஜேர் மனி வேண்டுகோள் விடுத்துள்ளது. இதையடுத்து பிரான்ஸ், ஸ்பெயின் உட்பட சில நாடுகள் அகதிகளைப் பகிர்ந்து கொள்ள முன்வந்துள்ளன. இதேபோன்று அமெரிக்கா, வளை குடா நாடுகள், ஜப்பான் போன்ற வைகளும் அகதிகளுக்கு மறு வாழ்வு அளிக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும் என ஐ.நா. அகதிகள் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள் ளது. இந்த வருடத்தில் மொத்தம் 4 லட்சம் அகதிகள் ஐரோப்பிய நாடு களுக்கு வருவர் என்றும், அடுத்த வருடம் மேலும் 4 லட்சத்து 50 ஆயிரம் பேர் வரலாம் என்றும் ஐ.நா. மதிப் பிட்டுள்ளது.

### ஐரோப்பிய ஆணையத் தலைவர் கவலை

அகதிகள் எதிர்கொள்ளும் நெருக் கடிகளை மனிதாபிமானம், கண்ணி யம் மற்றும் நேர்மையுடன் அணுக வேண்டும் என ஐரோப்பிய மக்களி டம், ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையர் ஜோன் க்ளாட் யங்கர் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஐரோப்பிய ஒன்றியம் வலுவான நிலையில் இல்லை என்றாலும், மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக் காவில் நிலவும் சூழல்கள் காரண மாக, ஐரோப்பா நம்பிக்கையின் ஒளிவிளக்காகப் பார்க்கப்படுகிறது என அவர் தெரிவித்துள்ளார். ஐரோப் பிய நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உருக்கமான உரையிலேயே இந்த வேண்டுகோளை அவர் விடுத் துள்ளார். கட்டாயமாக அகதிக ளைப் பகிர்ந்துகொள்ளும் திட்டத் தின்படி, ஐரோப்பிய ஒன்றியம் ஒரு லட்சத்து 60 ஆயிரம் மக்களை குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் எளிமையான வகையில் முன்வைக்கப்பட்ட திட் டத்துக்கு உறுப்பு நாடுகளிடமிருந்து கடுமையான எதிர்ப்புகள் எழுந் திருந்தன.

### 12 ஆயிரம் அகதிகளுக்கு ஆஸ்திரேலியா அடைக்கலம்



சிரியாவில் இருந்து அகதிகளாக வரும் 12 ஆயிரம் பேருக்கு அடைக்கலம் அளிக்கத் தயாராக இருப்பதாக ஆஸ்திரேலியப் பிரத மர் டோனி அபாட் அறிவித் துள்ளார். ஹங்கேரியில் தவித்துக் கொண்டிருந்த அகதிகளை ஏற்பதற்கு ஆஸ்திரியாவும், ஜேர் மனியும் முன்வந்தன. அவ்விரு நாடுகளும் அகதிகளை ஏற்பதற்கு தங்களது எல்லைகளைத் திறந்து விட்டுள்ளன.

இதையடுத்து ஏராளமான அகதிகள் ஆஸ்திரியாவின் வியன்னா நக ருக்குப் பஸ்களில் சென்றடைந்தனர். அங்கிருந்து அவர்கள் ரயில்கள் மூலம் ஜேர்மனியின் முனிச் உள்ளிட்ட பிற நகரங்களுக்குச் சென்றுள்ளனர். இதையடுத்து, இருபதாயிரம் சிரியா அகதிகளுக்கு அடைக்கலம் அளிக்கத் தயாராக இருப்பதாக வெனிசுலா நாட்டின் ஜனாதிபதி அறிவித்திருந்தார். இந்த நிலையில், ஆஸ்திரேலியாவும் மனிதாபிமான அடிப்படையில் அதிகமான சிரியா அகதிகளுக்கு அடைக்கலம் அளிக்க வேண்டும் என ஆஸ்திரேலியாவில் உள்ள பிரதான எதிர்க்கட்சிகள் குரல் எழுப்பின. இதனை ஏற்று, இந்த வருடத்தில் மேலும் 12 ஆயிரம் சிரியா அகதிகளுக்கு அடைக்கலம் அளிக்கத் தயாராக உள்ளதாக ஆஸ்திரேலிய பிரதமர் டோனி அபாட் அறிவித்துள்ளார். சிரியா மற்றும் ஈராக்கில் இருந்து வெளி யேறி இதர நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ள சுமார் இரண் டரை லட்சம் அகதிகளின் நல் வாழ்வுக்கான நிதியாக 44 லட்சம் ஆஸ்திரேலிய டொலர்களை வழங்கு வதாகவும் அவர் உறுதியளித்துள் ளார்.

சிரியா மற்றும் ஈராக்கில் நடை பெற்றுவரும், மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் மீதான தாக் குதல்களை அதிகப்படுத்த முடிவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள் ளார்.

சிரியாவில் இருந்து வெளியேறும் 13 ஆயிரத்து 750 அகதிகளுக்கு ஒதுக்கீட்டு முறையில் வருடந் தோறும் ஆஸ்திரேலியா அடைக் கலம் அளித்துவருவது குறிப்பி டத்தக்கது. (ஐ)

# இரண்டாம் எலிசபெத் வரலாற்றுச் சாதனை

தனது 25 ஆவது வயதில் ராணி யாகப் பட்டம் சூட்டிக்கொண்ட இரண் டாம் எலிசபெத் இங்கிலாந்தை அதிக காலம் ஆண்ட ராணி என்ற சாதனையைப் படைத்துள்ளார். இங்கிலாந்து வரலாற்றில் விக் டோரியா தான் அந்த நாட்டை அதிக காலம் ஆண்ட ராணியாக இருந்துள்ளார். அவர் இங்கிலாந்தை 63 வருடங்கள் 7 மாதம், 2 நாள் கள், 16 மணி நேரம் மற்றும் 23 நொடிகள் ஆண்டார். இந்நிலையில் ராணி விக்டோரியாவின் சாதனையை



இரண்டாம் எலிசபெத் ராணி தனது 89 ஆவது வயதில் முறியடித்துள ளார். எலிசபெத் தனது தந்தை யான மன்னர் ஜோர்ஜ் இறந்த பின்னர் தனது 25 ஆவது வயதில் கடந்த 1952 ஆம் ஆண்டு பெப்ர வரி மாதம் 6 ஆம் திகதி இங்கிலாந் தின் ராணியாக மகுடம் சூட்டிக் கொண்டார். இங்கிலாந்தை இதுவரை ஆண்டவர்களிலேயே இரண்டாம் எலிசபெத் தான் சிறந்தவர் என்று கணக் கெடுப்பில் தெரிய வந் துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசை காட்டிய தீபம்

ஆறுமுகம் ரவீந்திரன்,

மனுக்குல சேவை மிகவும் மகத்தானது. அந்தச் சேவைக்கு இலக்கணமாய் இந்த உலகில் பலர் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களின் அரிய வரலாறுகளைப் படித்து நாம் நெகிழ்ந்திருக்கின்றோம்; வியந்திருக்கின்றோம். ஆனால், இத்தகு பெருமைக்குரியவராய் எமது காலத்தில் எமது மண்ணில் ஒரு அன்னை வாழ்ந்தார் என்பது எம்மில் பலருக்குத் தெரியாமலும் இருக்கக்கூடும். கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி என்ற அந்த அற்புத அன்னை பற்றி நிச்சயமாய் நாம் அனைவருமே தெரிந்துவைத்திருக்க வேண்டும். கண் பார்வையற்றவர்கள் கதியற்றவர்களாய், வாழ வழியற்றவர்களாய்த் தவித்து நின்ற ஒரு காலத்தில், அவர்களைக் கைதூக்கி, அவர்கள் வாழ்வுக்கு ஒளியூட்டிய பெருமைக்குரியவர் இந்த அம்மையார்.

எமது நாட்டைப் பொறுத்த வரை 1972 ஆம் ஆண்டுக்கு முன்னர் விழிப்புல வலுவிழந்தவர்கள் சாதாரண பாடசாலைகளில் கற்பதற்கான வாய்ப்பெதுவும் இருக்கவில்லை. அவர்களுக்கென இயங்கிவந்த பிரத்தியேக பாடசாலைகளிலேயே அவர்களால் கற்க முடிந்தது. அங்கு அவர்களுக்கு ஆரம்பக் கல்வி மட்டுமே அளிக்கப்பட்டது. அதற்கப்பால் அவர்கள், கற்கவோ, கல்வியால் கிடைக்கக்கூடிய பயன்களைப் பெற்றுக்கொள்ளவோ முடியாத நிலையே காணப்பட்டது.

இந்த நிலையில் ஒரு முக்கிய திருப்பமாக 1972 ஆம் ஆண்டு இலங்கையில் ஒன்றிணைக்கப்பட்ட கல்வித்திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது. இதன் பயனாக விழிப்புல வலுவிழந்த மாணவர்களும் சாதாரண பாடசாலைகளில் சாதாரண மாணவர்களோடு இணைந்து கல்வி கற்பதற்கான வாய்ப்புக் கிட்டியது. எனினும், தமிழ்ப் பிரதேசங்களிலே குறித்த ஒன்றிணைக்கப்பட்ட கல்வித் திட்டத்தைப் பொறுப்பேற்றுச் செயற்படுத்துவதற்கு ஆசிரியர்கள்எவரும் முன்வரவில்லை. இந்த வேளையில்தான், அதுவரை ஒரு சாதாரண ஆசிரியையாகப் பணியாற்றிக் கொண்டிருந்த செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையார் இந்தப் பெரும் பணியை மனமுவந்து பொறுப்பேற்றுக்கொண்டார். அந்த வேளையில், அவருக்கு ஆதர வளித்தவர்களைக் காட்டிலும் விமர்சித்தவர்களும் ஏன் பரிகசித்தவர்களுங்கூட அதிகமாக இருந்தனர். எனினும்,

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க தனது பணியை உறுதியுடன் அவர் முன்னெடுத்தார். கால்நடையாக வீடு வீடாகச் சென்று அங்கே இருளில் முடங்கிக்கிடந்த பல விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளை வெளியுலகுக்கு அழைத்து வந்தார். மருத்துவ விஞ்ஞானம் அவர்களது கண்களுக்கு ஒளி வழங்க முடியாது என்று கை விரித்த நிலையில், கல்வியெனும் கண்ணை இவர்களுக்கு வழங்க என்னால் முடியும் எனத் துணிந்து சொன்னார். அதைச் செய்தும் காட்டினார்.

இருபதுக்கும் அதிகமான அவரது மாணவர்கள் பட்டதாரிகளாயினர். இன்னும் பலர், பல்வேறு நிலைகளில் கல்வி பெற்றுப் பயனடைந்தனர். ஒரு நிறுவனம், சாதிக்க முடியாததைத் தனியொருவராய் நின்று அவர் சாதித்துக்காட்டினார். எனினும், இந்தக் கல்வி வெளிச்சத்துக்குள் அகப்படாத பல பிள்ளைகள் இன்னமும் தங்கள் வீடுகளிலே முடங்கியிருக்கிறார்கள் என்பதை அவர் அறிந்தேயிருந்தார். அவர்களுக்கு எவ்வாறு உதவலாம் என்பது பற்றிச் சிந்திக்கவும் செய்தார். அதன் பயனாகவே வாழ்வகம் என்ற உன்னத நிறுவனம் உதயமாயிற்று.

1988ஆம்ஆண்டுதெல்லிப்பழையிலேவாடகை வீடொன்றில் வாழ்வக நிறுவனம்ஆரம்பிக்கப்பட்டது. செல்வி சின்னத்தம்பி அம்மையார் தனது உற்றார் உறவினர்களை விடுத்து, தானும் வாழ்வகத்திலேயே தங்கியிருந்து அந்தப் பிள்ளைகளின் விடிவுக்காகப் பாடுபடலானார். எத்தனையோ இன்னல்கள், இடப்பெயர்வுகள், பொருளிழப்புக்கள். எல்லாவற்றையும் எதிர்கொண்டு, தான் உருவாக்கிய வாழ்வகத்தை தற்போதுள்ள அதன் சொந்த வதிவிடத்தில் நிலைநிறுத்துவதில் அவர் வெற்றியும் கண்டார்.

தனது உடல் நலம் படிப்படியாகக் குன்றிவருவதை நன்கு உணர்ந்திருந்தபோதிலும், அது பற்றிஅவர் ஒருபோதும் கவலை கொண்டதில்லை. மாறாக, தான் உயிருக்குயிராக நேசித்த வாழ்வகத்தின் எதிர்காலம் பற்றியே அவர் எப்போதும் கவலைகொண்டார். தனது மறைவு வாழ்வகத்தின் செயற்பாட்டில் எந்த ஒரு பாதிப்பையும் ஏற்படுத்தக்கூடாது என்பதில் அவர் மிகவும் உறுதியாக இருந்தார். தனது மாணவர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்து தனக்குப் பின்னர் வாழ்வக நிறுவனத்தை வழிநடத்திச்செல்லும் பொறுப்பை ஒப்படைத்ததோடல்லாமல், அதனைத் துணிச்சலாய் வெளிப்படுத்தவும் செய்தார்.

2006 செப்ரெம்பர் 9ஆம் திகதியன்று சடுதியாய் நோய்வாய்ப்பட்ட அவர் இரு நாள்களின் பின்னர் 11ஆம் திகதியன்று அமைதியாய் அமரரானார். 'இன்றுதான் நாம் கண்ணிழந்தோம்' என்று அவரது மாணவர்கள் கதறி அழுதனர். வாழ்வக சமூகமே ஒரு கணம் திகைத்து நடுங்கியது. இருந்தாலும், அவர் இட்ட பலமான அடித்தளமும், அவரது ஆசிகளும் வாழ்வகத்தின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு வழிசெய்தன.

இந்த அம்மையாரின் அரிய சேவையைக் கௌரவிக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் 2010 ஆம் ஆண்டு இவருக்குத் தேகாந்த நிலையில் கலாநிதிப் பட்டம் வழங்கி, தனக்குக் கௌரவம் தேடிக்கொண்டது.

இன்று வாழ்வக நிறுவுநர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்களின் ஒன்பதாவது நினைவுநாள் வாழ்வக நிறுவனத்தில் பக்திபூர்வமாக அனுட்டிக்கப்படுகின்றது. அவரது இந்த ஒன்பதாவது நினைவுநாளை



மகிமைப்படுத்தும்வகையில் வறிய நிலையிலுள்ள பாடசாலை மாணவர் களுக்கான இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் முதற் கட்டமாக இன்றைய நினைவுநாள் நிகழ்வின்போது பத்து மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட உள்ளன

இலங்கை வாழ் தமிழ் பேசும் விழிப்புல வலுவிழந்தோரின் கல்வி வரலாற்றில் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்களுக்கு என்றுமே காத்திரமானஇடமொன்று உள்ளது. மண்ணினுள் வேராய், மாலையில் நூலாய் வாழ்ந்து இவர் ஆற்றிய அரும் பணிகள் விபரிப்புகளுக்கு அப்பாற்பட்டவை. திசை தெரியாது தவித்து நின்ற பிள்ளைகள் பலருக்குத் திசை காட்டிய இந்தத் தீபத்தை ஈன்ற எமது மண் நிச்சயம் பெருமைக்குரியதே.

இவர் தொடக்கிவைத்த பணி தொடர, வளர நாமும் நம்மாலானவற்றைச் செய்வோமாக.

# சீரிய வாழ்வுக்கு சிரமதானம்

ரிஷி தொண்டுநாதன்

மனித வாழ்வில் மகத்தான கைங்கரியங்களை நிறைவேற்றி மானிடத்தின் பெறுமதியை ஒவ்வொருவரும் சீரராகப் பேண வேண்டும். இறைவன் தந்த அவயவங்களை இனிய காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டும். தானும் வாழ்ந்து பிறரையும் நல்லவண்ணம் வாழவைப்பதுக்கு முயற்சி செய்பவனே உத்தம மனிதன் எனலாம். ஊதியம், வேதனம் எதுவுமின்றி பலரது நன்மை கருதி தொண்டு செய்யும் பண்பாடு இந்து சமயத்தில் தொன்று தொட்டு இருந்து வந்துள்ளது. இதனாலேயே பல இந்துக் கோயில்கள், குளங்கள், மடங்கள், தர்மபீடங்கள் உருவாகின. இந்தப் பண்பாடு பிற்காலத்தில் நிறுவன அமைப்பாக, குழுவாக உருப் பெற்றது. சர்வதேசத்துக்கே சிரமதானம் என்ற தொண்டை அறிமுகம் செய்தவர்கள் இந்துக்களே. அன்னதானம், அறிவுத்தானம் வரிசையில் சிரமதானத்தையும் தமது சிரசிலே ஏற்றிப் பேணியவர்கள் இந்துக்கள். கத்தியின்றி, குருதியின்றி போர் செய்த அகிம்சா மூர்த்தி காந்திமகான் சிரமதானத்தை மதித்தவர், ஊக்குவித்தவர். ஜெயப்பிரகாஸ் நாராயணன் என்று அழைக்கப்பட்ட இந்தியப் பேரறிஞர் சிரமதான இயக்கத்தை நிறுவனமாக வளர்த்து எடுத்தவர். இன்று சிரமதானத்தை மேல் நாட்டவர்கள் ஆர்வமாகக் கைக்கொள்கிறார்கள். அதே சமயம் கீழைத் தேயத்தவர்கள் சிரமதானத்தைக் கைவிட்டு வருகிறார்கள். பல குளங்கள், கேணிகள் ஈழத்திலும் இந்தியாவிலும் சிரமதானத்தால் உருவாக்கப்பட்டதை நாம்அறிவோம்.ஆனால், இன்றுஒரு கேணியைக்கூட சிரமதானம் மூலம் சுத்தம் செய்யும் சமூகம் எம் மத்தியிலில்லை. எந்தவொருபொதுப்பணிக்கும்ஊதியம்கொடுக்கும் வழக்கத்தைக் கட்டியெழுப்புகின்றோம். அதனால், சிரமதானம் சிரமமாகிவிட்டது.



மேலைநாட்டுப் பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகள் பல இடங்களுக்குச் சென்று சிரமதானம் செய்கிறார்கள். வைத்தியசாலைகள், பொதுமக்கள் நடமாடும் இடங்கள், பூங்காக்கள், முதியோர் இல்லங்கள் போன்ற இடங்களுக்குச் சென்று சிரமதானத்தில் எந்தவித உயர்வு தாழ்வும் இன்றி ஈடுபடுகின்றார்கள். சுவாமி விவேகானந்தர் சிரமதானத்தை ஊதியம் அற்ற உண்மைத் தொண்டாக வளர்க்க முற்பட்டார். ஜீவசேவையை சிவபூசைஎன்றார்.இன்றுஅந்தநிலைமாறிவிட்டது. நாவலர்பெருமான் திருத்தொண்டர் புராணத்தை வசன நடையில் வெளியிட்டு யாழ்ப்பாணச் சமூகத்தை திருத்தொண்டுக்கு ஆற்றுப்படுத்தினார். அவரது சமயப் பிரசங்கம் திருத்தொண்டைப் பரப்பியது. இன்று சமயப் பிரசங்கத்துக்கு ஊதியம் பேசும் நிலை வந்துவிட்டது. கோயில் தொண்டுகள் யாவும் இன்று தொழிலாகிவிட்டது. தொண்டுப் பணிகள் பல தொழிலாக மாறிய காரணத்தினால், சிரமதானம் என்ற சொல் சீவிக்க முடியாமல் போகிறது. குறிப்பாக எங்களது மண்ணில் சிரமதானப் பண்பாடு கட்டி வளர்க்கப்பட வேண்டும். கோயில், பாடசாலை, சமூகரீதியாக மக்களுக்குப் பயன்தரும் பொது இடங்கள் யாவும் சிரமதானப் பணியினால் சீர்செய்யப் பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். சிங்கப்பூர் திருநாட்டைக் கட்டி வளர்த்த அந்த நாட்டின் தந்தை என வர்ணிக்கப்படும் லீ குவான் யூ (முன்னாள் சிங்கப்பூர் பிரதமர்) தனது கையில் ஒரு விளக்குமாற்றை எடுத்துக்கொண்டு, சிங்கப்பூர் பெருந்தெருவை இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் கூட்டத்தொடங்கினார். அவர் கையாண்ட வழி சிரமதானம். தலைவன்எவ்வழியோ குடிகளும் அவ்வழி என்ற சொல் மிகவும் அர்த்த முடையது. சிங்கப்பூரை அழகாபுரியாக்குவதற்கு ஆரம்பத்தில் உதவியது அவர் வழிகாட்டிய சிரமதானமே.

இன்று சிறிய சிறிய சொந்தவேலைகளையே தாம் நிறைவேற்றாமல் ஊதியம் கொடுத்து ஒப்பேற்றும் நிலை வந்துவிட்டது. உழைப்பில்லாத உடம்புகள் பல ஊதிப்பெருத்து நோய்களைச் சுமக்கும் கூடமாகிவிட்டது. கடவுள் எமக்குத் தந்த நல்ல சந்தர்ப்பங்களை நாம் பயன்படுத்தத் தவறிவிட்டோம். "நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ ?" என்ற பாரதியாரின் வரிகள் ஞாபகத்துக்கு வருகின்றன.எங்களது மண்ணை வளப்படுத்துவதற்கு சிரமதான மார்க்கம் தான் உகந்தது. சிரமதான அமைப்புக்கள் உருவாக வேண்டும். சிரமதானம் செய்பவர்களி டையே மனிதத் தகுதியைவிட, வேறு எந்த உயர்வு தாழ்வும் இல்லை. சகலரும் ஒன்றாக சங்கமித்து நல்ல காரியங்களைச் செய்வதற்குச் சிரமதானம் கைகொடுக்கிறது. இன்று கோயில்கள் சமூக ஸ்தாபனங்களில் சிரமதானச் சிந்தனையை ஊக்குவித் தல் அவசியமாகும். பாடசாலைகளில் சிரமதான உணர்வை மாணவர்களிடையே விதைக்க வேண்டும். இந்த நிலையை வளர்க்காவிட்டால், கோயில் திருவிழாவில் சுவாமி காவுவதற்கே எதிர் காலத்தில் ஊதியம் வழங்கும் நிலை வந்து விடும். தொண்டினால் உயர்ந்தது எமது சமயம். திருக்கேதீச்சர திருத்தலத்தின் மீது பாடிய தேவாரத்தில் "தொண்டர்நாள்தொறும்துதிசெய்ய அருள் தரும் கேதீச்சரம்" என விழித்துள்ளமையை உணரலாம். எனவே தொண்டர் வழியை பின்பற்றுவோமாக! போரின் அழிவுகளினால் சிதைந்துபோன,எமது மண்ணையும், மக்களையும் கட்டி வளர்ப்பதற்கு பிறர் தயவை முழுமையாக எதிர்பார்ப்பதை விடுத்து, சிரமதானத்தின் ஊடாக செயற்கருங்காரியங்களைச் செய்ய அனைவரும் ஒன்றிணைந்து முற்படுவோமாக.!

நன்றி: இந்து ஒளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் நாடகத் திருவிழா - 2015

வரலாற்றுப் பெருமை மிகு நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவையொட்டி ஆலயச் சூழலில் பல்வேறு வகைகளிலான இயல்,இசை,நாடக நிகழ்வுகளும் நடைபெறுகின்றன. அந்த வகையில் ஆலய சுற்றாடலில் இருந்து சற்றுத் தூரத்தில் பாணன் குளப் பகுதியில் 12 நாள்கள் நடைபெற்ற நல்லூர் நாடகத் திருவிழாவில் மேடையேறிய பல்வேறு அரங்காற்றுகைகளான நவீன நாடகம், சிறுவர் நாடகம், ஓராள் அரங்கு, விழிப்புணர்வு நாடகம், இசை நாடகம், சிந்து நடைக் கூத்து, மோடிமை நாடகம்,வேடமுக நாடகம் என ஏகப்பட்ட வகையறாக்களாக நாட்டிலும், வீட்டிலும் நடப்பவற்றை யதார்த்தபூர்வமாக அளிக்கை செய்திருந்தன.

இவற்றில் "ஓராள் அரங்கு" பார்வையாளர் மத்தியில் கூடுதல் வரவேற்பைப் பெற்றதை உணர முடிந்தது. அப்பப்பா, இத்தனை ஆற்றல்களை வெளிப்படுத்தும், பிரசவிக்கும் எங்கள் மண்ணின் கலைஞர்களுக்கு, பிறழ்ந்து போயிருக்கும்– சீரழிந்து கொண்டிருக்கும் எங்கள் சந்ததியினரை நல்வழிப்படுத்தும் பணி தலைக்கு மேல் உள்ளது என்பது மறுக்க முடியாத ஒன்று.


நிகழ்வுகள் நடைபெற்ற அரங்கை பஞ்சபூத அரங்கு என குறிப்பிட்டிருந்தார்கள். பார்வையாளர் சமூகத் தில் எனக்கருகில் இருந்த ஒரு பெரியவர் தான் தின மும் இந்த நிகழ்வுகளைப் பார்ப்பதாகவும் இடையில் ஒருநாள் மழை வந்தபோது நிகழ்வு கள் குழம்பிவிடுமோ என்ற ஆதங்கம் தனக்கு ஏற்பட்டதாகவும் ஆனாலும் நிகழ்வு தாமத மாக ஆரம்பித்தது தனக்கு பெரும் ஆறுதல் அளித்தது எனவும் குறிப்பிட்டதுடன், வயோதி பம் வந்தால் நோய்களும் துரத்திக் கொண்டு வரும் ஆனாலும் தான் சிறுவயதிலிருந்தே வடமராட்சி மண்ணில் இவ்வாறான நிகழ்வுகளைப் பார்த்து நாடகத் துறையில் தனது ஆர்வத்தை வளர்த்துக் கொண்டதால் மழையையும் பொருட் படுத்தாது அன்றைக்கு வந்ததாகவும் குறிப்பிட்டார்.

இந்த அரங்காற்றுகைகளைத் தினமும் வந்து பார்ப்பதாக அவர் கூறியதைக் கேட்க எனக்கு அவர் மீது பொறாமையாகத்தான் இருந்தது. ஒருநாள் தான் இவற்றை பார்க்கும் பாக்கியம்– பேறு எனக்குக் கிடைத்தது. (வாரத்தில் 6 நாள் வேலை, அதுவும் மாலை நேர வேலை, மேலதிகாரி லீவு தரமாட்டார்)

நிகழ்வின் பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள் குறிப்பிட்டது போல் திரைப்படம், சின்னத்திரை சீரியல்களின் மாயத்தில் இருந்து எம்மவர்கள் விடுபட வேண்டும். எங்கெங்கோ இருந்தெல்லாம் கலைஞர்களை இறக்குமதி செய்து நிகழ்வுகளுக்கு கூட்டம் சேர்க்கும் போக்கிலிருந்து இவர்களது கவனம் கலைக்கப்பட்டு எங்களவர்களின் பக்கமும் திரும்ப வேண்டும். அவற்றைச் செய்ய வேண்டாம் எனக் கூறவில்லை. இவற்றுக்கும் ஆதரவு தாருங்கள் ஏனென்றால் பண்பாடு, மரபு, விழுமியங்கள், மனிதநேயம் ஆகியவற்றைத் தொலைத்துவிட்டு கலாசார வறுமைக்கு ஆட்பட்டு நொந்து போயிருக்கும் எமது தமிழ்ச் சாதிக்கு இம்மாதிரியான உள ஆற்றுகைகளே பெரிதும் உதவக் கூடியன.

அந்தக் காலங்களில் சினிமாக் கொட்டகைகளில் நாடக நிகழ்வுகளும் இடம்பெற்றதாக அறிய முடிகிறது. இங்கிலாந்தில் " பொறி" என்ற நாடகமும் வருடக் கணக்கில் நடைபெற்றதாக் கூட செய்தி. ஏன் எங்கள் சிந்தனைகளும் இன்று உறங்கிக் கிடக்கும் சினிமாக் கொட்டகைகளின் பக்கம் திரும்பக் கூடாது? நல்லூர் நாடகத் திருவிழா போல் ஒவ்வொரு பிரதேசத்திலும் இவைபோல் ஏன் நடைபெறக் கூடாது.

## வாசகர் திருமுகம்




இதற்கு குபேரவாசல்கள் திறக்கப்பட வேண் டும்.

எது எப்படியாயினும் நல்லூர் நாடகத் திருவிழா அதனைப் பார்த்தவர்கள் மத்தியில் நிச்சயம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமிருக்காது. அந்த வகையில் இந்த நாடகத் திருவிழாவின் பங்காளிக் கலைஞர்கள், குறிப்பாக சமூக மத்தியில் கலைஞர்களைப் பொறுக்கி எடுத்து,கருத்துக்களை அவர்கள் மூலம் கடை பரப்பிய– வெளிச்சம் போட்டுக் காட்டிய இயக்குநர் ஆகியோருக்கு எமது சமூகம் மிகுந்த கடமைப்பட்டிருக்கிறது. கலை வளர வேண்டும். கலைஞர்கள் வளர வேண்டும். எங்கள் சமூகம் ஆரோக்கியமான சமூகமாக வாழ வேண்டும். கலைத் தாகம் எம்மவருக்கு ஏற்பட வேண்டும். நோய் இருக்கும் இடத்தில் தான் மருத்துவருக்கு வேலை. நாடும் அகமும் தானே நாடகம்.

*செல்வவேலாயுதம்*
*யாழ். நகர்*

## கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# ஆபத்துக்களைக் கவனத்தில் கொள்வது மிக அவசியம்

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 14ஆம் திகதி ஜெனி வாவில் ஆரம்பமாகிறது. இந்தக் கூட்டத்தில் இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவால் ஏற்படுத்தப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட இருப்பதாலும், போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைக்கு உள்ளகப் பொறி முறையொன்றுக்கு ஆதரவு தெரிவிக்கும் பிரேர ணையை அமெரிக்கா கொண்டுவர இருப்ப தாலும் இக்கூட்டத் தொடர் மிகவும் முக்கியமானதாகக் கருதப் படுகிறது. அதனால்தான் இலங்கை அரசதரப்பு பலம்பொருந்திய ஓர் உயர்மட்டத் தூதுக்குழுவை ஜெனிவாவுக்கு அனுப்பத் தீர்மானித்துள்ளது. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் குழு ஒன்றும் ஜெனிவா செல்கிறது. போர்க்குற்ற மிழைத்தோரை நீதியின் முன் நிறுத்தும் முயற்சியில் கடந்த காலங்களில் படிப்படியாக ஏற்பட்ட முன்னேற்றங்கள் ஜனவரி - 8 ஆட்சி மாற்றத்தின் பின்னர் பின்னடைவைச் சந்தித்துள்ளன. தற்போதைய ஐ.நா. கூட்டத் தொடர் இலங்கை அரசுக்குச் சாதக மானதாக இருக்கும் என்று எதிர்வுகூறல்கள் உள்ளதால் ஜெனிவா செல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்களிப்பு காத்திரமானதாக இருக்க வேண்டும்.

2014 செப்டெம்பர் அமெரிக்கத் தீர்மானத்துக்கு இணங்க, அதாவது சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற தீர்மானத்துக்கு அமைய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் ஏற்படுத்தப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ள அதே கூட்டத்தொடரில், உள்ளகப்பொறி முறைக்கு ஆதரவு தெரிவிக்கும் அமெரிக்காவின் மற்றொரு தீர்மானமும் சமர்ப்பிக்கப்பட இருப்பது பல்வேறு சர்ச்சைகளையும் - குழப்பங்களையும் ஏற்படுத்தி விட்டுள்ளது.

கடந்தகால அனுபவங்கள் காரணமாக, உள்ளக விசாரணைகள் நீதியாக நடத்தப்படாததன் காரணமாக தமிழ் மக்களுக்கு உள்ளக விசாரணைகளில் நம்பிக்கை இல்லை. சர்வதேச விசாரணை மூலம் போர்க்குற்றவாளிகள் சர்வதேச நீதிமன்றில் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாக இருக்கிறது. போர்க்குற்றவாளிகளுக்கு சர்வதேச நீதிமன்றத்தில் தண்டனை கிடைக்கச் செய்வதன் மூலமே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்க முடியும். எனினும் ஐ.நா. விசாரணைக் குழுவின் அறிக்கையும் உள்ளக விசாரணைப் பொறிமுறை தொடர்பான தீர்மானமும் ஒரே கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ளதால் ஐ.நா. விசாரணைக்குழு அறிக்கையை, வலுவிழக்கச் செய்யும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபடலாம் என்ற ஐயப்பாடும் உண்டு. இதற்கான முதலாவது சமிக்ஞை நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மூலம் வெளிவந்திருப்பதை இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

நீதி அமைச்சின் கடமைகளை நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றுக்கொண்ட அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பணியா ளர்கள் மத்தியில் உரையாற்றுகையில், இலங்கை சர்வதேச விசாரணைகளில் இருந்து முழுமையாக விடுபட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மீது சர்வதேச விசாரணை முன்னெடுக்க வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற் றிய ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவானது, ஆட்சிக்கு வந்துள்ள புதிய ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அரசியல் அனுபவம் மற்றும் நம்பகத்தன்மை காரணமாகத் தனது நிலைப்பாட்டில் இருந்து மாறி உள்ளக விசாரணை மூலமே உள்நாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சந்தர்ப்பம் வழங்கியுள் ளது என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அப்படி யென்றால் 2014 செப்ரெம்பர் தீர்மானத்துக்கு அமைய ஏற்படுத்தப்பட்ட ஐ.நா. விசாரணை அறிக்கை வலுவிழந்துவிடப்போகிறதா? உள்ளக விசாரணை மூலம்தான் இறுதித் தீர்வா? உள்ளக விசா ரணை தமிழ் மக்களுக்கு நீதி வழங்குமா?

சர்வதேச விசாரணை, உள்ளக விசாரணை குறித்து முரண்பாடான கருத்துகளைத் தெரிவித்து காலத்தை வீணடித்துக்கொண்டிருக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் வரப்போகும் ஆபத்துகளைக் கவனத்தில் கொண்டு செயற்படுவது அவசியமாகும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழரின் அடிப்படை உரிமைகள்; எதிர்பார்ப்பை மூடும் உத்திகள்

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இந்த நாட்டில் நடைபெறும் அனைத்துச் சம்பவங்களும் தனி ஈழம் ஒன்றைத் தோற்றுவிப்பதற்கான அறிகுறிகளாகவே தென்படுகின்றன. அதற்கான அனைத்து வழிமுறைகளையும் ஜனாதிபதியும் பிரதமரும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்....

இவ்வாறு கொதித்து எழுந்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரும், தூய்மையான ஹெல உறுமய அரசியல் கட்சியின் தலைவருமான உதய கம்மன்பில (ஹெல உறுமய என்பது தமிழில், இலங்கைத் தீவின் உரிமையாளர்கள் எனப் பொருள்படும்)

கடந்த திங்கட்கிழமை அன்று, தாம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் தமது அதீத இனவாதம் கலந்த மேற்கண்ட கருத்தை வெளிப்படுத்தி இருந்தார்.

புதிய நாடாளுமன்றத்தில் சபாநாயகருக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் வேளையில், வழமையான தமது இனவாதக் கருத்துக்களை வெளியிட முடியாத நிலை உருவானதால், ஊடகவியலாளர் மாநாட்டில் தமது மேற்போந்த ஆதங்கத்தை அவர் கொட்டித் தள்ளினார் என்று கொள்ளலாம்.

நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தாம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்த, கக்கிய இனவாதக் கருத்துக்களில் பின்வருவனவும் அடங்குகின்றன:

--இந்த நாட்டின் பாதுகாப்புக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. வடக்கில் இருந்து இராணுவம் வெளியேற்றப்பட்டுள்ளது.

--பாதுகாப்பு வலயத்தில் உள்ள காணிகளில் இருந்து இராணுவத்தினர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

-- புலிகளை நியாயப்படுத்தும் வேலைத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதுடன், இராணுவத்தைத் தண்டிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

--அதையும் தாண்டி எதிர்க்கட்சித் தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

--இன்னும் சில நாள்களில் வெளிவரவுள்ள இலங்கைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக் குழு) விசாரணை அறிக்கை மூலம், எமது இராணுவ வீரர்களை அனைத்துலக விசாரணைக் கூண்டில் ஏற்றவும், விடுதலைப் புலிப் பயங்கரவாதிகளை நியாயப்படுத்தவுமே, இன்றைய அரசு முழுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

மேற்போந்த கருத்துக்கள், தகவல்களுடன் தூய்மையான ஹெல உறுமய கட்சியின் தலைவர், தமது பிரலாபங்களை நிறுத்தவில்லை. ரணில் அரசின் ஆட்சி விரைவில் முடிவடைந்து விடும் என்றும் முத்தாய்ப்பு வைத்திருக்கிறார்!

மொத்தத்தில்.....

பல்வேறு வகையான இன்னல்களையும் இழப்புகளையும் அனுபவித்த, அனுபவிக்கும் இலங்கைத் தமிழினம், தற்போது தான் சற்று மூச்சு விடுவதற்கு ஆரம்பித்து உள்ளது. அதனைச் சீரணிக்க முடியாத தென்னிலங்கையின் இனவாத சக்திகள், தமது கொடூர முகத்தை வெளிக்காட்ட ஆரம்பித்து விட்டன. அதன் வெட்டு முகமே மேலே தொட்டுக் காட்டப்பட்ட உதய கம்மன்பிலவின் ஆக்ரோச அரசியல் வீச்சு.

தனி ஈழம், தமிழீழம் என்ற சொற் பதங்களை, தொண்டைக்குள் விழுங்கியவாறு தென்னிலங்கை அரசியலில் முன்னிலை நாடிச் செல்வதற்கான உத்தியாகவும், அவரது மேற் சொன்ன நிலைப்பாட்டைக் கொள்ளலாம், பார்க்கலாம்!

இத்தகு பின்புலத்தில், வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்குச் சேர வேண்டிய அடிப்படை அரசியல் உரிமைகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கும் வாய்ப்பு மூடப்பட்டுவிடும். இதுதான் இன்றைய யதார்த்தமான உண்மை.

# போர்க்குற்ற விசாரணை குறித்து குழம்பி நிற்கும் தமிழர்கள்



சேரலாதன்

இறுதிப் போரின்போது, இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றச் செயல்கள், மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை இடம்பெற வேண்டுமா? அல்லது உள்ளக விசாரணைகள் மூலமாகத் திருப்தியான தீர்வைக் காண முடியுமா? என்பது தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் தமிழர் தரப்பினரிடையே வலுத்து வருகின்றன. இறுதிப்போர் முடிவுக்கு வந்து சுமார் ஆறு ஆண்டுகள் கழிந்த நிலையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான தீர்வு எதுவும் வழங்கப்படாத நிலையே காணப்படுகின்றது. போர்க்குற்ற விசாரணை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் செயலுருப் பெறுவதற்கு முன்பதாகவே அதை நீர்த்துப் போகச் செய்யும் முயற்சிகளில் அந்த நாடு தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. இந்தத் தீர்மானத்துக்குப் பதிலாக வேறொரு தீர்மானத்தை இலங்கைக்குச் சார்பான வகையில் ஐ.நா.மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றுவதற்கு அமெரிக்கா தீர்மானித்துள்ளது. இதை இலங்கைக்கு வருகை தந்த தெற்காசிய விவகாரங்களுக்கான ராஜாங்கச் செயலரான நிஷா பிஸ்வாலும் உறுதி செய்துள்ளார். மேலும் உள்ளக விசாரணை இடம்பெறுவதையே அமெரிக்கா ஆதரிக்குமென்பது தெளிவாகியுள்ள நிலையில் சர்வதேச விசாரணையா? அல்லது உள்ளக விசாரணையா? என்பது தொடர்பாகப் பல தரப்பினரும் தமது கருத்துக்களைப் பதிவு செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இந்த விடயம் தொடர்பாக ஒத்த கருத்து நிலவவில்லை. இதனால் சர்வதேச விசாரணைக்கு அவசியமில்லை என ஒரு சாராரும், உள்ளக விசாரணையில் நம்பிக்கை இல்லை, சர்வதேச விசாரணையே தேவையென இன்னொரு சாராரும் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் சர்வதேச விசாரணைகள் ஏற்கனவே நடந்து முடிந்துவிட்டதால் தற்போது அதற்கு அவசியமில்லையெனக் கூறியிருந்தார். தற்போது கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராசா இந்தக் கருத்தையே வெளியிட்டிருக்கிறார். இதேவேளை – கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில் சர்வதேச விசாரணையைத் தமிழர்கள் கோருவது நியாயமானதே என்று கூறியிருக்கிறார். மேலும், இதுவரை நடந்த உள்ளக விசாரணைகள் நேர்மையற்றவை எனவும் அவர் தெரிவித்திருக்கிறார். இந்த நிலையில் சர்வதேச விசாரணை இடம்பெற வேண்டுமென வலியுறுத்தி கையெழுத்துக்களைச் சேகரிக்கும் நடவடிக்கைகள் தமிழர் பிரதேசங்களில் இடம்பெற்று வருகின்றன. பெரும்பாலான தமிழர்கள் சர்வதேச விசாரணை இடம்பெறுவதையே விரும்புவதாகத் தெரிகின்றது.

இலங்கை அரசினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் நம்பத்தகுந்தவை அல்ல என்ற கருத்து பரவலாகக் காணப்படுகின்றது. ஏனென்றால் இந்த விசாரணைகளால் பாதிக்கப்பட்டவர்கள் எந்தவொரு பயனும் அடைந்ததாகச் சரித்திரம் இல்லை. விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அவை கிடப்பில் போடப் படுவதையே இதுவரை காலமும் காண முடிந்துள்ளது. ஒரு கண் துடைப்புக்காக மட்டுமே விசாரணைகள் இடம்பெறுவதால் மக்கள் அவற்றின் மீது நம்பிக்கை இழந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளும் உரியமுறையில் முன்னெடுத்துச் செல்லப்படுமா என்பதிலும் சந்தேகம் காணப்படுகின்றது. மகிந்த தரப்பினரின் கைமுற்றாக ஓய்ந்துவிடவில்லை என்பதால் அவர்கள் தமக்கு எதிரான விசாரணைகள் இடம்பெறுவதைக் குழப்பவே செய்வார்கள். மைத்திரி அரசும் இந்த விடயத்தில் தர்மசங்கடமான தொரு நிலையிலேயே உள்ளது.

இது இவ்வாறிருக்க இறுதிப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றச் செயல்கள் தொடர்பாக இலங்கை அரசினால் உள்ளக விசாரணை ஒன்று இடம்பெற்று பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்கப்படுமா? என்பது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதி தாம் முன்னர் உறுதிமொழி வழங்கியதன் பிரகாரம் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களென இனம் காட்டப்பட்டவர்களைக் காப்பாற்றவே செய்வார். முன்னாள் ஆட்சியாளர்கள் மீதும், படையினர் மீது நடவடிக்கை எடுத்து பெரும்பான்மை மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்ளுவதற்கு அவர் விரும்பவே மாட்டார். மேலும், போர் இடம்பெற்ற போது, இடம்பெற்ற உயிரிழப்புக்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தத் தேவையில்லை என்ற பெரும்பான்மையின புத்திஜீவிகள் சிலரின் கருத்துக்களை அவர் புறமொதுக்கிவிட மாட்டாரெனவும் நம்பலாம்.

இந்த நிலையில்தான் தமிழர்கள் சர்வதேச விசாரணையா? அல்லது உள்ளக விசாரணையா? எனப் பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருக்கின்றனர். இது அரசுக்குச் சாதகமானதொரு நிலையை ஏற்படுத்திவிடப் போகின்றது. மேலும் அமெரிக்காவின் தந்திரங்களுக்கும் உதவி செய்துவிடப்போகின்றன. உண்மையில் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேசத்துக்கு அக்கறை இருந்திருக்குமாயின் போர் நிறைவுபெற்று ஆறு ஆண்டுகள் வெறுமனே கழிந் திருக்க வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. ஐ.நா.விசாரணை, சர்வதேச விசாரணை, தற்போது உள்ளக விசாரணையெனக் காலம் கடந்து சென்று கொண்டிருக்கிறதே தவிர, பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி கிடைப்பதாகத் தெரியவில்லை. சர்வதேசமும் தம்மை கைவிட்டு விட்டதாகவே பாதிப்புக்களை எதிர்கொண்டார்கள் நினைக்கும் அளவுக்கு நிலைமை மோசமடைந்து காணப்படுகின்றது.

வெறுமனே ஜெனிவா செல்வதும் அங்கு உணர்ச்சிகரமான வார்த்தைகளை வெளியிடுவதும் ஒருபோதுமே நன்மை தரப்போவதில்லை. இதை விட ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் தமிழர் தரப்பினர் ஈடுபட வேண்டும். அரசு சர்வதேச விசாரணைகள் இடம்பெறுவதைத் தடுக்கும் நோக்கில் முழு வீச்சுடன் செயற்படுவதைக் காண முடிகின்றது. இதற்கெனப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதியும் நேரடியாகக் களத்தில் இறங்கக் கூடிய சாத்தியங்களும் காணப்படுகின்றன. ஆகவே தமிழர் தலைமைகள் வெறும் வேகத்தைமட்டுமேகாட்டாதுவிவேகத்துடன் செயற்படுவதே இன்றைய தேவையாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செ.உமாசுதன்



# சர்வதேச மேலாதிக்கத்தை புரட்டிய புரட்டாதி – 11

உலக வல்லாதிக்க நாடான அமெரிக்காவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையங்கள் மீது கடத்தப்பட்ட விமானங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களை எவரும் எளிதில் மறந்துவிட முடியாது.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் அமெரிக்காவின் வல்லாதிக்கத்துக்கு விழுந்த மிகப்பெரிய அடி. அந்த நாட்டின் பயணிகள் விமானத்தை நன்கு திட்டமிட்ட முறையிலே கடத்தி. மேற்கொள்ளப்பட்ட இந்த விமானத் தற்கொலைத் தாக்குதல், உலகின் பொலிஸ்காரனாகத் தன்னைத் தற்போதும் வெளிக்காட்டி வரும், கருதிவரும் அமெரிக்காவின் சுய நலப்போக்குக்கு ஏற்பட்ட பெரும் சோதனையும், நல்லதொரு படிப்பினையும் என்றுதான் சொல்ல வேண்டும்.

அமெரிக்க விமானங்களைக் கடத்தி மேற்கொள்ளப்பட்ட அடுத்தடுத்த அதிரடித்தாக்குதல்கள் அமெரிக்காவை அதிரவைத்ததோடு, முழு உலகையுமே வியப்பில் ஆழ்த்தியிருந்தன. ஏனெனில் உலகத்தின் மிக வலுவான பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்ட நாடு என்று கருதப்படுவது அமெரிக்கா. அத்தகைய உயர் பாதுகாப்பு வலயத்தினுள், மையத்தினுள் புகுந்து கண்ணுக்குள் விரலைவிட்டு ஆட்டுவதுபோல் தாக்குதலை மேற்கொண்டனர்.

அத்துடன் உலகின் அதிஉயர் பாதுகாப்பு வலயங்களுள் மிக முக்கியமான பங்கைக் கொண்டது பென்டகன். பாதுகாப்புக்கான இதயம் என்று சொல்லப்பட்ட இந்த நகரில் மிக …குவில், மிகப்பெரிய தாக்குதலை மேற்கொண்டு அங்கு கடமையில் இருந்த 800 பேரை பலியெடுத்து அதன் பாதுகாப்பு ஏற்பாடுகளையே தகர்த்தெறியுமளவுக்கு இந்தத் தாக்குதல் பின்னணி அமைந்திருந்ததுடன் பாதுகாப்பு என்ற பெரு அரணையே சிதைத்திருந்தது இந்தத் தாக்குதல்.

அமெரிக்காவின் பொருளாதார மையமான நியூயோர்க்கில் அமெரிக்க நேரப்படி காலை 8.35 மணிக்கு முதலாவது தாக்குதல் நடத்தப்பட்டது. மன்ஹட்டன் நகரில் உள்ள பிரசித்திபெற்ற உலக வர்த்தக மையத்தின் (World Trade Center) இரட்டை அடுக்கு மாடிக் கோபுரங்களில் ஒன்றின் மீது கடத்தப்பட்ட போயிங் – 767' ரக விமானம் ஒன்று மோதி வெடித்துச் சிதறியது. கட்டடத்தின் உச்சிப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலினால் அங்கு நெருப்புப்பற்றி தீப்பிழம்பு எழுந்தது.

…து நேரத்தில் அதே திசையில் வந்த மற்றைய பயணிகள் விமானம் அருகில் இருந்த அடுத்த கட்டடக் கோபுரத்தின் நடுப்பகுதியில் மோதி அதை ஊடறுத்து தீப்பிழம்பாக மறுபுறத்தில் வெடித்துச் சிதறி வெளியேறியது.

தாக்குதலில் தீப்பற்றி எரிந்த இந்த இரண்டு கட்டடங்களும் ஒரு சில மணி நேரத்துக்குள் முற்றாக சரிந்து விழுந்தன. இந்தத் தாக்குதல்களினால் நியூயோர்க் நகரமே புகை மண்டலத்தால் மூடுண்டது. 110 அடுக்கு மாடிகளைக் கொண்ட இரண்டு கட்டடங்கள் முற்றாகத் தகர்ந்தன. பாதுகாப்புத் தலைமையகமான பென்டகனும் முற்றாக எரிந்தது. இந்தத்தாக்குதல் சம்பவங்களால் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர். அதேசமயம் அமெரிக்க இராஜாங்க அமைச்சுக் கட்டடம் மற்றும் காங்கிரஸ் கட்டடம் ஆகியவற்றுக்கு வெளியேயும் சில குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன. கடத்தப்பட்ட நான்கு விமானங்களிலும் பயணித்த 266 பயணிகள் விமானங்கள் நொறுங்கியதால் உடல் சிதறிப் பலியானதாகவும் சொல்லப்பட்டது.

சுமார் 50 ஆயிரம் பேர் பணியாற்றும் உலக வர்த்தக மையத்தின் மீது நடத்தப்பட்ட விமானத்தற்கொலைத் தாக்குதல்கள் உலக பொருளாதாரத்தில் அமெரிக்கா செலுத்தும் எதேச்சாதிகாரப் போக்குக்கு எதிரான குறியீடாக கருதப்பட்டது.

இதற்கு மேலதிகமாக மிகப் பிரதானமான விடயங்களாக சிலவற்றை கருத முடியும் சர்வதேச மேலாதிக்கத்தைப் பயன்படுத்தி, பிறநாடுகளின் இறையாண்மையை உதாசீனப்படுத்தி அவற்றைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருகின்ற அமெரிக்காவின் முயற்சிகளுக்கான முதல் அடியாக இது அமைந்தது.

அதுதவிர, பயங்கரவாதத்தை எதிர்ப்பதாகக் கூறி, சுயஉரிமைகளுக்காகப் போராடும் இனவிடுதலைப் போராட்டங்களை நசுக்கும் அமெரிக்காவின் செயல்களுக்கு விழுந்த இரண்டாவது அடியாகவும் இது அமைந்தது.

இதேபோன்று அமெரிக்க இராஜாங்க அமைச்சுக்களுக்கு அருகே வெடித்த குண்டுகள் அமெரிக்கா அடுத்த நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடும் போக்குக்கு எழுப்பப்பட்ட எச்சரிக்கை மணியாகவும் அமைந்தது.

இந்த விடயங்களுக்கு மேலதிகமாக இன விடுதலைப் போராட்டங்களை வன்முறை கொண்டு அடக்க முயற்சிக்கும் ஆதரவு நாடுகள் மற்றும் தீவிரவாத இயக்கங்களுக்கு பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை என்ற பெயரில் உதவிகளை அள்ளி வழங்கும் செயற்பாடுகளும், ஏனைய நாடுகளையும், நியாயமான கோரிக்கைகளையும் வேண்டுதல்களையும் அடக்குமுறை அரசுகளிடம் முன்வைக்கும் இனவிடுதலை அமைப்புக்கள் மத்தியிலும் அமெரிக்கா தொடர்பான வெறுப்பை ஏற்படுத்தியிருந் தமையை எவரும் மறுப்பதற்கில்லை.

அமெரிக்காவின் மேற்சொன்ன தார்ப்பரியங்கள் இலங்கையையும் விட்டுவைக்கவில்லை. இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளில் வாழ்கின்ற தங்களுடைய பூர்வீக நிலங்களில் சுதந்திரமின்றி வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற தமிழ்மக்களின் வாழ்வில் திட்டமிட்ட முறையிலே கடந்த 2009 இல் இனப்படுகொலைச் செயற்றிட்டம் ஈவிரக்கமின்றி மேற்கொள்ளப்பட்டது. இது மனிதகுலம் மறவாத இரத்த சரித்திரம்.

இனவிடுதலை வேண்டி, தங்களது நியாயமான அரசியல் உரிமைகளையும், வேண்டுதல்களையும், அபிலாசைகளையும் இனவாத இலங்கை அரசிடம் கோரி கடந்த 60 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்கள் அகிம்சை வழியிலும் அதனைத் தொடர்ந்து ஆயுத வழியிலும் போராடினர். ஆனால் அதற்கான ஆசியும், ஆசீர்வாதமும் தமிழ் மக்களுக்கு வழங்கப்படவில்லை. தமிழினப் படுகொலையைத் திட்டமிட்டு செய்து தமிழ் ஈழத்திலே இரத்த ஆறு பெருக்கெடுக்க உறுதுணையாக இருந்ததே ஒழிய அதற்கான பாவமன்னிப்பை இதுவரை தன் மனச்சாட்சியின் பால் இருந்து கேட்கவில்லை. அதற்கான பிரதி உபகாரங்களையும் இதுவரை செய்யவில்லை.

மாறாகப் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை என்ற பெயரில் தமிழனின் நியாயமான வேண்டுதல்களைப் புரிந்துகொள்ளாமல்

> 66
>
> **110 அடுக்கு மாடிகளைக் கொண்ட இரண்டு கட்டடங்கள் முற்றாகத் தகர்ந்தன. பாதுகாப்புத் தலைமையகமான பென்டகனும் முற்றாக எரிந்தது. இந்தத் தாக்குதல் சம்பவங்களால் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அதேசமயம் அமெரிக்க இராஜாங்க அமைச்சுக் கட்டடம் மற்றும் காங்கிரஸ் கட்டடம் ஆகியவற்றுக்கு வெளியேயும் சில குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன. கடத்தப்பட்ட நான்கு விமானங்களிலும் பயணித்த 266 பயணிகள் விமானங்கள் நொறுங்கியதால் உடல் சிதறிப் பலியானதாகவும் சொல்லப்பட்டது.**

இலங்கை அரசுக்கு மறைமுகமாக உதவிகளை அள்ளி வழங்கி மிகப்பெரிய மனிதப் படுகொலையை மேற்கொள்ளக் காரணமாக அமெரிக்கா இருந்ததை எவரும் மறந்து விட முடியாது.

போர் முடிவின் பின்னர் இலங்கையில் இடம்பெற்றது. மனிதப்படுகொலை தான், மிகப் பெரிய மனித உரிமை மீறல்கள் அங்கு இடம்பெற்றுள்ளன. அதனை நியாயமாக விசாரிக்க வேண்டும் என்று கூறிவந்தது. இதனை தமிழ் மக்கள் மீது இனப்படுகொலையை செய்ததன் பின்னரான ஓர் கழிவிரக்கமாகத்தான் கருத முடிந்தது. ஆரம்பத்தில் சர்வதேச விசாரணை வேண்டுமென்ற தமிழரின் கோரிக்கைக்கு வலுச் சேர்த்த அமெரிக்கா, இலங்கையில் இந்த வருடம் புதுமாற்றம் ஏற்பட்டிருக்கிறது, அவர்கள் தமிழருக்கு நியாயமான தீர்வைதர முயற்சிப்பர் எனக்கூறி மேல் இருந்து கீழிறங்கி உள்ளக விசாரணை என்ற நியாயத்தின் பக்கம் சாய்ந்திருப்பது போல தோன்றுகிறது.

தீர்வு என்பதன் உண்மையான தோற்றத்தையும், அதன் உருவத்தையும் தமிழ்மக்கள் பார்ப்பதற்கு, பொறுமைக்கும் காத்திருப்பிற்கும் இலக்கணமான தமிழர் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டிய நிலை தற்போது தோன்றியிருக்கிறது.

அமெரிக்காவில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 10 ஆயிரம் பேர் கொல்லப்பட்ட சம்பவம் மிகப் பரிதாபத்துக்குரிய வேதனைக்குரிய விடயம். மனித உயிர்களை மதிக்கத் தெரியாதவர்களின் செயல் இது என்பதில் தப்பில்லை என பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் குறிப்பிட்டிருந்தார்.

ஆக, இத்தகைய சம்பவங்களின் வலிகளைப் புரிந்துகொண்ட ஒரு நாடே, நியாயமான கோரிக்கைகளை முன்வைத்த தமிழர்களை பயங்கரவாதம் என்ற நாமம் சூட்டி இலங்கை அரசுக்கு உதவி பல்லாயிரக்கணக்கில் கொன்று குவித்ததை மறக்க முடியாது. இத்தகைய கோரச் சம்பவங்கள் மனித வரலாற்றில் என்றுமே நிகழக்கூடாது.

இவ்வாறான அடக்குமுறைகளையும், தாக்குதல்களையும் கைகொட்டி வரவேற்காமல், ஆரவாரித்து மகிழாமல், தமிழர் மீது கரிசனையோடு உலகின் மிகப் பெரும் வல்லரசாக இருக்கின்ற அமெரிக்காவும், ஏனைய உலக நாடுகளும் தமிழர்களுக்கு தீர்வை மிக விரைவிலே பெற்றுத் தரக் கடமையாற்ற வேண்டும். உலகின் பொலிஸ்காரன், சர்வதேச காவல்காரன் என்ற நினைப்பிலிருந்து கீழிறங்கி சிறுபான்மை இனங்கள் மீதான ஆக்கிரமிப்பு, அட்டூழியங்களுக்கு துணை போகாமல் இருக்க வேண்டும். ஏனைய நாடுகளில் இனங்களும், அந்த இனங்களின் மக்களும் அமைதியாகவும், நீதி கிடைக்கப்பெற்றவர்களாகவும் வாழவழி செய்ய வேண்டும். தன்வினை தன்னைச் சுடும் என்பதையும், அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்பதையும் கேட்டுப் புரிந்து கொண்டு பணி செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 6 | | | 7 |
| 6 | | 3 | 5 | | 9 | 2 | | 1 |
| | | | | | | 6 | | |
| 1 | | 7 | | | | | 6 | 2 |
| | 2 | | | | | | 3 | |
| 5 | 3 | | | | | 4 | | 8 |
| 3 | 6 | | | | | | 2 | |
| 2 | | | 3 | | 1 | 8 | | 6 |
| 9 | | | 2 | 6 | | | | |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 4 | 5 | 9 | 7 | 3 | 1 | 8 |
| 3 | 1 | 9 | 6 | 2 | 8 | 5 | 4 | 7 |
| 7 | 5 | 8 | 1 | 3 | 4 | 6 | 9 | 2 |
| 4 | 7 | 3 | 2 | 8 | 5 | 1 | 6 | 9 |
| 5 | 2 | 6 | 7 | 1 | 9 | 8 | 3 | 4 |
| 8 | 9 | 1 | 4 | 6 | 3 | 2 | 7 | 5 |
| 1 | 3 | 5 | 9 | 7 | 2 | 4 | 8 | 6 |
| 9 | 8 | 2 | 3 | 4 | 6 | 7 | 5 | 1 |
| 6 | 4 | 7 | 8 | 5 | 1 | 9 | 2 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலினும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## காலையில் வெறும் வயிற்றில் உட்கொள்ள உகந்தவை....

**தண்ணீர்**

ஒரு நாள் முழுவதும் குடிக்க வேண்டிய தண்ணீரில் கால் பங்கு நீரை, காலை எழுந்தவுடன் வெறும் வயிற்றில் அரை மணி நேரத்துக்குள் குடிக்க வேண்டும். சிலர், வெந்நீர் அருந்துவார்கள். ஆனால், குளிர்ந்த நீர் குடிப்பது தான் சிறந்தது. தண்ணீர், அமிலத்தின் அதிகப்படி யான வீரியத்தைச் சமன் செய்து, வயிற்றைச் சீராக இயக்க உதவுகிறது. தொடர்ந்து தண்ணீர் குடித்து வருவதால் உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், மாரடைப்பு, உடல்பருமன், சிறுநீரகக் கோளாறு போன்ற நோய்களின் தாக்கத்தையும் எம்மால் வெகுவாகக் குறைக்க முடியும்.

**அருகம்புல் சாறு**

அல்சருக்கு அருமருந்தே வெறும் வயிற்றில் பருகும் அருகம்புல் சாறுதான். அருகம்புல் தாவரத்தின் இலை மற்றும் தண்டுப் பகுதியின் கலவைதான் இது. அருகம்புல் தண்டு மட்டும்தான் மருத்துவக் குணமுடையது. இந்த இலையின் ஓரங்களில் உள்ள வெள்ளையான சுனைப் பகுதி நச்சுத் தன்மை கொண்டதால், வயிற்றுப் போக்கைத் தூண்டிவிடும் அபாயம் கொண்டது. எனவே அருகம்புல் செடியை வீட்டிலே அரைத்து சாறு எடுத்து, வெந்நீருடன் பயன்படுத்துவது நல்லது.

**வெள்ளைப் பூசணிச் சாறு**

வெறும் வயிற்றில் வெள்ளைப்பூசணிச் சாறு குடித்து வந்தால் தொப்பை, ஊளைச் சதை விரைவில் குறையும். கூடவே, அதனுடன் சிறிது மிளகு தூள் மற்றும் மஞ்சள் தூள் சேர்த்துக் கொள்வதன் மூலம் குடிப்பதற்கான முழுப் பலனும் கிடைக்கும். ஆனால், இது மிகவும் குளிர்ச்சியானது என்பதால் 7 மாதத்துக்கு மேற்பட்ட கர்ப்பிணிகள் மற்றும் 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் இதனைத் தவிர்க்கவேண்டியது அவசியம்.

**இஞ்சிச் சாறு**

இஞ்சியின் தோல் பகுதி நச்சுத்தன்மை வாய்ந்தது. இஞ்சித் தோலை நீக்கிவிட்டு, சாறு எடுத்து அதோடு தேன் கலந்து வெறும் வயிற்றில் குடித்து வரலாம். உடலில் உள்ள தேவையில்லாத கொழுப்பு குறைவதுடன் நுரையீரல் தொடர்பான நோய்களும் தீரும்.

**நெல்லிக்காய்ச் சாறு**

தினமும் வெறும் வயிற்றில், நெல்லிக்காய்ச் சாறு குடித்து வந்தால், உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகள் கரைவதுடன் உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியும் அதிகரிக்கும்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### நன்னெறி எது?

கற்பு என்பது ஆண் பெண் என்ற பேதமில்லாமல் இருபாலாரிடமும் இருக்கவேண்டிய நன்னெறி ஆகும். நீங்கள் இறைவனை உணர்ந்தால் உங்கள் முகம் மாறிவிடும். உங்கள் குரல், தோற்றம் கூட மாறிவிடும். நீங்கள் மனிதகுலத்துக்கே ஒரு வரப்பிரசாதமாக மாறிவிடுவீர்கள். எதை நினைக்கிறீர்களோ அதுவாகவே ஆ[illegible]நீர்கள். வலிமையுள்ளவர்களாக, மனத்தூய்மை மிக்கவர்களாக உங்களை நீங்கள் எண்ணினால் நிச்சயம் அந்தப் பண்புகள் உங்கள் உணர்வோடு கலந்துவிடும். நீங்கள் மகத்தான பணிகளைச் செய்வதற்காகப் பிறந்திருக்கிறீர்கள்.

**நாளை**

**ஆவணி-26**
**சனிக்கிழமை**
**12.09.2015**

*திதி: சதுர்த்தசி மு.ப.10.36 வரை*
*நட்சத்திரம்: மகம் பி.ப.12.01 வரை*
*சுபநேரம்: 03.03–04.33 வரை*
*இராகுகாலம்: 09.03–10.33 வரை*
*அமாவாசை விரதம்*

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | – | 40 | 60 | 40 | 60 | 40 | 20 |
| கத்தரி | 90 | 70 | 80 | 80 | 60 | 80 | 80 | 40 |
| கரட் | 80 | 140 | 80 | 100 | 120 | 120 | 100–120 | 120 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 40 | 40–50 | 60 | 50–60 | 40 |
| பயிற்றை | 30 | 40 | 60 | 30 | 40 | 80 | 80–100 | 30 |
| பாகல் | 80 | 50 | 100 | 80 | 80 | 120 | 100–110 | 60 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 80 | 120 | 80 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 120 | 100 | 100 | 110 | 100–120 | 90 |
| சி.வெங்காயம் | 70 | 50–100 | 80 | 80 | 70 | 100 | 100–120 | 60 |
| பூசணி | 40 | 30 | 40 | 30 | 30 | 60 | 50–60 | 25 |
| தக்காளி | 40 | 40 | 60 | 50 | 50–60 | 70 | 60–80 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 60 | 50–80 | 40 | 60 | 25 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20 | 40 | 30–35 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 50 | 30 | 20 | 20 | 40 | 10–15 | 10 |
| பச்சை மிளகாய் | 140 | 120 | 120 | 120 | 80 | 120 | 200–220 | 100 |
| புடோல் | 40 | 50 | 40 | 40 | 40 | 60 | 60–80 | 30 |
| கோவா | 70 | 80 | 60 | 60 | 60 | 80 | 80–100 | 40–50 |
| வெண்டி | 40 | 40 | 40 | 40 | 60 | 40 | 40–50 | 25 |
| போஞ்சி | 160 | 130 | 180 | 160 | 140 | 140 | 120–160 | 140 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 | 80 | 80 | 120 | 70–80 | 70 |
| தேங்காய் | 50 | 45–50 | 50 | 40–50 | 60 | 40–50 | 35–50 | 35 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 90 | 90 | 90 | 80–100 | 80–100 |
| தேசிக்காய் | 70 | 120 | 120 | 100 | 60 | 120 | 120–160 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 | 15–20 | 08 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 | 100 | 100 | 120 | 100–120 | 100 |
| இராசவள்ளி | 250 | – | – | 160 | 100–120 | – | 180 | 80 |
| முருங்கைக்காய் | 120 | 80 | 100 | 60 | 80–120 | 100 | 120 | 70 |

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 600 | 600 | 650 |
| நண்டு | 300 | 400 | 300 | 300 | 200 | 400 |
| கணவாய் | 600 | 600 | 600 | 700 | 600 | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 500 | 420 |
| சுறா | 500 | 500 | – | 700 | – | 400 |
| சீலா | 300 | 400 | 300 | 450 | 400 | 300 |
| விளை | 650 | 400 | 400 | 500 | 400 | 250 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | – |
| கும்பிளா | 350 | 350 | 300 | 400 | 400 | – |
| கிழாக்கன் | 500 | 800 | – | 450 | – | – |
| ஒரா | 350 | 400 | 300 | – | – | – |
| திரளி | 250 | 250 | 200 | 250 | 200 | 300 |
| நகரை | 200 | 200 | 150 | 300 | 200 | 300 |
| ஆடை | 150 | 150 | 100 | 200 | 150 | 60 |
| ஒட்டி | 250 | 200 | 250 | – | 300 | 250 |
| திருக்கை | 150 | 300 | 250 | 300 | 200 | 150 |
| பாலை | 350 | 250 | 300 | 400 | 300 | – |
| வாழை | 100 | 150 | – | 300 | 300 | 200 |
| கொய் | 100 | 100 | 100 | 120 | 50 | – |
| மதனம் | 150 | 250 | 300 | 250 | – | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்களுக்கு மச்சப்பலன் எப்படி?



- இரு புருவங்களுக்கு மத்தியில் மச்சம் இருந்தால் தீர்க்காயுள்.
- நெற்றியின் வலப்புறத்தில் மச்சம் இருந்தால் எதிர்பாராத பணவரவு கிடைக்கும்.
- வலது புருவத்தில் மச்சம் இருந்தால் அதிர்ஷ்கரமான மனைவி அமைவார்.
- வலது பொட்டில் மச்சம் இருந்தால் திடீரென பெரும் செல்வமும் புகழும் கிடைக்கும்.
- வலது கண்ணில் மச்சம் இருந்தால் நண்பர்கள் உறவினர் மூலம் புகழ் கிடைக்கும்.
- வலது கண்ணுக்குள் வெண்படலத்தின் மேற்புறத்தில் மச்சம் இருந்தால் அவர் ஆன்மிக சிந்தனையுள்ளவராக புகழ் பெற்று விளங்குவார்.
- இரு கண்களில் ஏதேனும் ஒன்றில் வெண் படலத்தின் கீழ்ப் புறத்தில் மச்சம் இருந்தால் அவர்கள் பல பிரச்சினைகளைச் சந்திப்பார்கள்.
- இரு கண்களில் ஏதேனும் ஒரு வெளிப்புற ஓரத்தில் மச்சம் இருந்தால் அவர் வாழ்க்கை சீராக இருக்கும். இருப்பினும் தனது வாழ்நாளில் அவர் ஏதேனும் ஒரு வன்முறை சம்பவத்தைச் சந்திப்பார்.
- இடது புருவத்தில் மச்சம் இருந்தால் பணக்கஷ்டமான வாழ்க்கை அமையும்.
- இடது கண் வெண்படலத்தில் மச்சம் இருந்தால் வறுமையான வாழ்க்கை அமையும். இருப்பினும் அதைச் சமாளிக்கும் பக்குவமும் இருக்கும்.
- இடது கண்ணின் வலப்புறத்தில் மச்சம் இருந்தால் சொத்து விடயங்களில் சங்கடங்களைச் சந்திப்பார்கள். இருப்பினும் ஓரளவுக்குச் சொத்தைச் சேகரித்து விடுவார்கள்.
- இடது கண்ணின் இடப்புறத்தில் மச்சம் இருந்தால் உறவினர்களுடன் பிரச்சினை ஏற்பட்டு தனி நபர் ஆவார்கள். இருப்பினும் அவர்களது வாழ்நாளின் பிற் பகுதியில் அதிர்ஷ்டத்தை அடைவார்கள்.
- மூக்கின் மேல் பகுதியில் மச்சம் இருந்தால் அவர்கள் சகல சௌகரியமும் பெற்றிடுவார்கள்.
- மூக்கின் வலதுபுறத்தில் மச்சம் இருந்தால் நினைத்ததை நடத்தி முடிக்கும் வல்லமை பெற்றிருப்பார்கள்.
- மூக்கின் இடது புறத்தில் மச்சம் இருந்தால் எதையும் நம்பாதவர்களாக இருப்பார்கள். தவறான பெண்ணின் நட்பு இவர்களுக்கு இருக்கும்.
- மூக்கின் நுனியில் மச்சம் இருந்தால் அவர்கள் தயக்க குணம் உள்ளவர்களாக இருப்பார்கள், சற்றே கர்வமும், சற்றே பாதுகாப்பு உணர்வும் இவர்களிடம் மிகுந்திருக்கும்.
- மூக்கின் கீழே மச்சம் உள்ளவர்கள் கேடான வழிகளில் பணத்தை செலவிடுபவர்களாக இருப்பார்கள்.
- நாசித்துவாரங்களுக்கு மேலே மச்சம் உள்ளவர்கள் நவநாகரிக மோகமுள்ளவர்களாக இருப்பார்கள். வசதியான வாழ்க்கையைக் கொண்டிருப்பார்கள்.
- மேல் உதட்டிலோ அல்லது கீழ் உதட்டிலோ மச்சம் இருந்தால் அவர்கள் காதல் உணர்வு மிகுந்தவர்களாக இருப்பார்கள்.
- மோவாயில் மச்சம் இருந்தால் செல்வாக்கு, புகழ் இவற்றோடு சமூகத்தில் நல்ல மதிப்பும் பெற்றி ருப்பார்கள்.
- மோவாயின் இடதுபுறத்தில் மச்சம் இருந்தால் அவர்கள் மேடு, பள்ளமான வாழ்க்கையை அனுபவிப்பார்கள், கல்வியறிவும் குறைவாக இருக்கும்.

(தொடரும்)

# பெண்ணின் குணாதிசயங்கள் பற்றிய பொய்மைகளும் உண்மைகளும்

(நேற்றைய தொடர்ச்சி)

ஆணுக்கும் பெண்ணுக்குமான குணாதிசயங்கள் வேறுபட்டாலும், இந்தப் பாகுபாட்டுக்கு இயற்கை எந்த வகையில் காரணமாக இருக்கின்றது என்ற வினா எழும்புகின்றது. இதற்குச் சில நடைமுறை அனுபவங்களே பதில் கூறும். எமது சமூகத்தில், ஆணாகப் பிறந்த ஒருவன், பெண்ணுக்கென விதிக்கப்பட்டுள்ள குணாதி சயங்களைக் கொண்டிருப்பானேயானால் அவன் பெண்ணைப்போல் இருக் கின்றான் எனவும், அதுபோல் பெண்ணாகப் பிறந்த ஒருத்தி ஆணுக்குரிய குணாதிசயங்களைக் கொண்டிருந்தால் ஆணைப் போன்றவள் என்றும் கூறப்படுவது யாவரும் அறிந்ததே. எனவே ஓர் ஆணோ பெண்ணோ தமது உடற் கூறுகளில் மாற்றமில்லாமலேயே தத்தம் எதிர்ப்பாலுக்குரிய குணங்களைக் கொண்டிருக்க முடியும் என்ற உண்மையானது, ஆண், பெண் குணாதிசயப் பகுப்புக்கள் என்பவை பால் வேறுபாடுகளின் இயற்கையான வெளிப்பாடுகள் அல்ல என்பதை நிரூபித்து விடுகின்றது. ஆகவே குணாதிசயங்கள் என்பவை மனிதனால் உருவாக்கப்படுபவை என்பது நிதர்சன மாகின்றது. இவ்வுருவாக்கம் அடிப்படையில் சமூகமயமாக்கல் என்ற செயற்பாட்டின் ஊடாக ஏற்படுத்தப்படுகின்றது. ஒரு சமூகத்தில் மூத்த தலை முறையினர் தமது இளைய தலைமுறையினரைச் சமூகத்தின் ஓர் அங்கமாக பழக்கப்படுத்துதலையே இந்தச் செயல் முறை குறிக்கின்றது. ஒரு குழந்தை பிறந்தது முதலே இந்தச் செயற்பாடு தொடங்கி விடுகின்றது. அதாவது குழந் தைகளுக்கு எத்தகைய பழக்கவழக்கங்களைச் சொல்லிக் கொடுக்கின்றோமோ எத்தகைய விழுமியங்களைக் கற்பிக்கின்றோமோ அதனடியொற்றியே அவர்களது குணங்கள், மனோ பாவங்கள், செயல்கள் என்பவை அமைந்து விடுகின்றன. இதன் வழியே அந்தச் சமூகத்தின் நம்பிக்கைகள், விழுமியங்கள், நெறிமுறைகள், பழக்க வழக்கங்கள் முதலிய சகல விடயங்களும் இளைய தலைமுறையினருக்கு ஊட்டப்படுகின்றன. மேலும் இவை திரும்பத் திரும்ப வலியுறுத்தப்படும் போதும், பரம்பரை பரம்பரையாகப் பின்பற்றப்படும்போதும் முதலும் முடிவும் கண்டு பிடிக்கப்பட முடியாத அளவுக்கு மனித உணர்வுகளுடன் ஒன்றியதாகவும், சமூக கலாசாரத்தை பிரதிபலிப்பன வாகவும் ஆகி விடுகின்றன. மனிதர்கள் குணாதிசயங்களைக் கொண்டிருத்தல் தவிர்க்க முடியாத விடயம் என்பதிலும், இத்தகைய குணாதிசயங்களைக் கட்டி யெழுப்புவதில் சமூகத்துக்குக் கடப்பாடு இருக்கின்றது என்பதிலும் கருத்து வேறு பாடுகள் இருக்கமுடியாது. மேலும் ஆண் பெண் இருபாலார் மத்தியிலும் இருக்கக்கூடிய இயல்புகளின் மாறுபட்ட தன்மை அவரவர் குணாதிசயங் களிலும் பிரதிபலிக்கக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு என்பதிலும் உடன்பாடு சாத்தியமானதே. ஆனால் நாம் இன்று காணக்கூடிய பால் அடிப்படையிலான குணாதிசய வேறுபாடுகளின் பின்னணியை மேற்குறிப்பிட்ட இயல்புகளின் மாறுபட்ட தன்மைக்குள் மட்டும் எல் லைப்படுத்தி விட முடிவதில்லை. மனித வரலாற்றைச் சற்றுப்புரட்டிப் பார்ப்போமாயின், ஆதி மனிதனுக்கு குழு வாழ்க்கை என்பது அத்தியாவசிய தேவையாக இருந்தது. இயற்கையின் சீற்றங்களில் இருந்தும், மிருகங்களின் தாக்குதல்களில் இருந்தும் தப்பிக் கொள்ளவும், தமது நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும் இந்தக் குழு வாழ்க்கையே அடிப்படையாக இருந்தது. சுருங்கக்கூறின் அன்று தனி மனிதன் என்ற நிலைப்பாட்டுக்கே இட மில்லாதிருந்தது எனலாம். மனிதரது வாழ்க்கையானது அச்சம் மிகுந்ததாக எங்கும், எக்கணமும் உயிராபத்தை எதிர்கொள்ள நேரிடும் அபாயம் மிக்கதாகக் காணப்பட்டது. எனவே மனிதனது வாழ்வுக்குரிய இயல்பூக்கமானது குழுவாழ்க்கையில் இரண்டறக் கலந்து போயிருந்தது. குழுவில் அங்கத்தவர் அழிவு மலிந்து போயிருந்ததால் புதிய உயிர்களின் வரவு மிகவும் வேண்டிதாயிற்று. அதாவது மனித அழிவைக் கட்டுப்படுத்திக் கொள்ள ஒருவித உத்தரவாதமும் இல்லாதிருந்ததால், புதிய உயிர்களின் வருகையையும், வளர்ச்சியையும் நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் மிகுந்திருந்த காலம் அது. ஆதி மனிதக் குழுவில் பெண் புதிய உயிர்களை உலகுக்குக் கொணரும் இயல்புடையவளாக இருந்தபடியால், அவளைப் பாதுகாத்து, போஷித்து வைத்திருக்க வேண்டிய தேவை, குழுக்களின் நீடிப்புக்கு அத்தியாவசியமாது ஆனது வியப்பிற்குரியதல்ல. மேலும் குழுப்புணர்ச்சி முறை மட்டுமே காணப்பட்ட நிலையில் குழு அங்கத்தவரிடையே ஆண் பெண் என்ற பால் வேறுபாட்டுக்கு அப்பால் தாய் பிள்ளைகள் என்ற உறவு மட்டுமே அறியப்பட்டிருந்தது. எனவே குழுக்கள் பெண்ணை மையமாகக் கொண்டு உருப்பெறவும், தம்மை அடையாளம் கண்டு கொள்ளவும் செய்தன. குழுவின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் என்பது முழுக் குழு அங்கத்தவர்களது கடமையாக இருந்த போதும் ஆண் பெண் இயல்புகளுக்கமைய அவர்களது கடமைகள் பகுக்கப்பட்டன.

(தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கண்கள் தப்பின!



ஒரு கிராமத்தில் பணக்கார மூதாட்டி ஒருவர் வசித்து வந்தார். அவரது பிள்ளைகள் வெளிநாட்டில் வசித்து வந்தார்கள். ஆதனால் அவர் உதவியற்றவராகக் காணப்பட்டார். அவரது வீட்டின் உணவுக்களஞ்சிய அறைக்குள் எலிகளின் தொல்லை அதிகமாக இருந்தது. தானிய மூட்டைகளைச் சேதமாக்கின. அவை உணவுப் பெட்டிகளுக்குள் குதித்து விளையாடின.

அவர் சேமித்து வைத்திருந்தவையெல்லாம் அழிந்து போவதை அவரால் தடுக்க முடியவில்லை. எலிகள் வீட்டுக்கூரையின் உட்பக்கமாக தாம்..,தீம்.. என்று குதித்துக்கும்மாளம் இடுவதும், அவரில்லாத வேளைகளில் தானிய மூட்டைகளைக் காலி செய்வதுமாக இருந்தன. இதனால் வருத்தமடைந்த மூதாட்டி கடைகடையாக ஏறி இறங்கி விதவிதமான எலிப் பொறிகளை வாங்கி வந்தார். அவற்றைக் களஞ்சிய அறையினுள் எலிகள் அகப்படக்கூடிய வகையில் ஆயத்தப்படுத்தி வைத்து விட்டு அவர் உறங்கிவிட்டார். காலையில் ஆவலோடு சென்று எலிப்பொறிகளை நோக்கினார். ஏமாற்றமைடைந்தார். ஒரு பொறியிற்கூட ஒரு எலிகூட மாட்டியிருக்கவில்லை. இப்போது மூதாட்டி முன்பை விட மிகவும் வருத்தமடைந்தார். எலித்தொல்லையை ஒழிக்க ஒரு பூனைக் குட்டியை வாங்கி வளர்ப்பது என்று தீர்மானித்தார். அயலூருக்குச் சென்று ஒரு பூனைக் குட்டியையும் வாங்கி வந்தார். அதற்கு மாமிச உணவை ஊட்டிஊட்டி ஆர்வத்துடன் வளர்த்தார். சில மாதங்கள் சென்றதும் அது நன்கு வளர்ந்து விட்டது. பறக்கும் பூச்சிகளைப் பிடிப்பதற்காக உயரத்துள்ளிக் குதித்தது. கால்களில் அகப்பட்ட பொருள்களை தட்டி, உருட்டித் தாவித்திரிந்தது. மரங்களின் மீது விர் விர் என்று ஏறியது. மூதாட்டி அதற்கு உணவு கொடுக்கத் தாமதமானால் அவரின் கால்களின் மீது பாய்ந்து கடித்து விடுவது போல் பாசாங்கு செய்தது. மூதாட்டியோ தனது கால்களைப் பிடிக்கும் பூனை எப்பொழுது எலியைப் பிடிக்கப்போகிறதோ எனக் காத்திருந்தார்.

நாள்கள் சில கழிந்தன. மூதாட்டி எதிர்பார்த்தது போல் பூனையும் எலி வேட்டையைத் தொடங்கியது. சில வேளைகளில் ஒரு நாளைக்கு இரு எலிகளைக் கூடக் கொன்று தனது உணவாக்கியது. களஞ்சிய அறையிலும் எலிகளின் நடமாட்டம் குறையத் தொடங்கியது. மூதாட்டி மிக்க மகிழ்ச்சியோடு காணப்பட்டார். பூனையை அன்பாகத் தடவிவிட்டார்.

ஆசையோடு அதனைத் தனது மடிமீது உட்கார வைத்தார். பூனைக்கு மிகவும் கொண்டாட்டம். அவர் உறங்கும் மெத்தையில் அதுவும் உறங்கியது. அந்த மூதாட்டி வளர்க்கும் இரு நாய்களை விடவும், அதற்குத்தான் அதிக உரிமை. பூனை இதனால், பணக்கார மூதாட்டியின் மாளிகை போன்ற அந்த வீட்டுக்குத், தானே இராச குமாரன் என நினைத்து இறுமாப்பு அடைந்தது. பூனையின் எலிவேட்டை தொடர்ந்ததால், கொல்லப்பட்டவை போக எஞ்சிய எலிகள் தப்பினோம், பிழைத்தோம் என்று ஓட்டம் பிடித்தன. இதனால், பூனை அணில் வேட்டையைத் தொடங்க எண்ணியது. பூனை மூதாட்டியின் தோட்டப்பக்கம் உள்ள பழமரங்களை அவ தானிக்கத் தொடங்கியது. அணில்கள், சுதந்திரமாகத் தாவிக் குதித்துக் கூடியிருந்து பழங்களை உண்டு மகிழ்வதைப் பார்க்க பூனைக்குப் பொறாமை பொங்கி வழிந்தது. மாமரத்தை நோக்கி மறைவாக நகர்ந்தது. மரத்தின் அடியில் அணில்கள் பழம் கொறித்துக் கொண்டிருந்தன. அவற்றில் ஒன்றைக் குறிவைத்தது பூனை. அந்த அணிலின் மீது பூனை பாய முற்பட்டபொழுது, அதே மரத்திலிருந்த பறவைக் கூட்டமொன்று கூச்சலிட்டு ஆர்ப்பரித்தது. அது ஒரு எச்சரிக்கை ஒலியாகவே இருந்திருக்க வேண்டும்... அதைப் புரிந்து கொண்ட அணில்கள், பதிலுக்குத் தாமும் கூச்சலிட்டுக் கொண்டு மரத்தின் மீது தாவி ஏறி மறைந்து கொண்டன. இப்போது பூனை அந்தப் பறவைகளை உற்று நோக்கியது. தொடர்ந்து அவதானிக்கவும் தொடங்கியது. அப்பொழுது தான், அதற்கொரு விசித்திரம் புரிந்தது. அந்தப் பறவைகள் மரத்திலிருக்கும் பழங்களை உண்ணவில்லை. மரத்தின் இலைகளின் மீதும், பட்டைகளுக்குள்ளும் இருக்கும் புழுக்களையும் பூச்சிகளையும் லபக் என்று ஒரே கொத்தில் தூக்கிவிடுகின்றன. பின்பு அதனை மென்று தின்று விடுகின்றன. பூனை வியப்பில் மூழ்கியது....

மறுநாள் பூனை அணிலைப்பிடிக்க முயன்றது. புழு உண்ணிப்பறவைகளைப் பொருட்படுத்தவில்லை. தன்னுடைய ஆற்றலுடன் ஒப்பிடும் பொழுதும் அந்தப்பறவைகளின் ஆற்றல் எம்மாத்திரம் என்று எண்ணியது. அணிலைப் பிடிப்பதற்கு வசதியாக பூனை பதுங்கிக்கொண்டது. குறிவைத்த அணில் பழம் கொறிப்பதில் ஈடுபட்டிருக்கையில், பூனை மறைவாக பதுங்கியபடியே மெதுவாக நகர்ந்தது. ஆனால், புழு உண் ணிப் பறவைகளின் கண்களிலிருந்து பூனை தப்பவில்லை. பூனையைக்கண்ட பறவைகள் சத்தமிட்டு ஆர்ப்பரித்தன. அணில்கள் அபாயத்தைப்புரிந்து கொண்டு மர உச்சிக்குத் தாவின. பறவைகள் சற்றுத் தள்ளி பூனையின் குறுக்கே கோபத்தோடு கொத்தின. இறக்கைகளைச் சிலிர்த்தன. கூச்சலிட்டன. இறக்கைகளைச் சிலிர்த்தபடி கோபத்தோடு சுழன்றடித்து பூனையைச் சுற்றி வளைத்தன. பூனைக்கு இப்போது பயம் வந்தது. பறவைகளின் நோக்கம் மரத்தின் உச்சியில் அதன் கூட்டுக்குள் இருந்த தனது குஞ்சுகளைக் காப்பதோ அல்லது தமது நண்பரான அணில் பிள்ளைகளுக்கு உதவுவதோ என்பது புரியவில்லை. ஆனால், பூனை அதிர்ந்து விட்டது. திகைப்பு மேலிடப் பதுங்கிக் கொண்டது. இந்தப்பறவைகள் மிகவும் மோசமானவை போலிருக்கின்றன என்று எண்ணிக்கொண்டது. சினத்தில் பூனையை நோக்கி வருவதும், பின் வாங்குவது மாக இருந்த பறவைகளைப் பார்க்க பூனைக்கு உதறலெடுத்தது. தாய்ப்பறவை ஒன்று பூனையின் கண்களைக் குறிவைத்து நகர்வதுபோல் பூனை உணர்ந்தது. புழுக்களை 'லபக்' என்று கொத்தி மென்று விழுங்கி விடுவதைப் போலத் தனது கண்களையும் அந்தப் பறவை கொத்தி...மென்று, தின்றுவிடுமோ என்று, பூனைக்கு நடுக்கமெடுத்தது. பூனை பதுங்கிப் பதுங்கிப் பின்வாங்கியது; மரத்திலிருந்து 'விர் விர்' என்று மின்னல் வேகத்தில் இறங்கி, தோட்டப் பக்கத்தை விட்டு வீட்டுப்பக்கமாக தலை தெறிக்க ஓட்டம் பிடித்தது. அறைக்குள் வந்து ஒழிந்து கொண்டு மூச்சு வாங்கியது. இன்னும் உள்ளுக்குள் உடல் நடுக்கம் மாறவில்லை, அப்பாட எனது கண்கள் தப்பின என்று நெடுமூச்சு வாங்கிய பூனை தனது முயற்சியில் தோற்றுப் போனதால் வருத்தமடைந்துடன் சோர்வடைந்து சுருண்டு படுத்துக் கொண்டது. தனது இயலாமையை எண்ணியபோது அதன் இறுமாப்பும் அடங்கியது.




# பணிவும் துணிவும் அவசியம்



உயர்வுக்குத் துணையாக இருப்பது பணிவும், துணிவும். கோழைத்தனம் கூடாது. கர்வம் ஆகாது. பணிவு பக்குவத்தை உண்டாக்கும். துணிவு எல்லையைத் தொடுகின்ற வல்லமையைத் தரும். பணிவும், துணிவும் இணைந்தால் சிறப்பாக வாழ்வு அமையும். தீமைக்கே இடம் இருக்காது. அற்புதமான வாழ்க்கை அமைவதற்கு ஆதாரமாகஇருக்கும்.பணிவுபெருமையைத் தரும். துணிவு செயற்பட வைக்கும். துணிவு கொள்பவர்களுக்குத்தான் அறிவும், உணர்வும், துணிவும் வந்து சேரும். துணிவு இல்லாத இடத்தில் சோர்வு குடி புகுந்து விடும். துணிவு பிறந்துவிட்டால் அபாயத்தைக் கண்டு அஞ்சி, ஆபத்துக்கு உள்ளாவதைத் தடுக்க முடியும். பயம் பிறந்துவிட்டால் உடலை வதைக்கும் உள்ளத்தைச் சிதைக்கும். அதற்காக எதற்கும் அஞ்சாமல் இருந்து விடவும் கூடாது. தீமையைக் கண்டு அஞ்சத்தான் வேண்டும். துணிச்சல் பிறக்க வேண்டிய இடத்தில், அச்சம் பிறக்கக் கூடாது. வெற்றி பெறும்வரை துணிச்சலோடு செயலில் இறங்க வேண்டும். எதிர்காலத்தின் சிறப்பைப் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். சென்ற காலத்தைப் பற்றித் திரும்பிப் பார்க்கக் கூடாது. முன் வைத்த காலைப் பின் வைக்கக் கூடாது. முன்னேறிச் செல்ல வேண்டும். பின்னுக்குப் போகக்கூடாது. பின் தங்கியும் நின்றுவிடக்கூடாது. பணிவோடு தொடர்ந்து செயலில் ஈடுபட வேண்டும். துணிவு பெறுவதற்குப் பல வீனத்துக்கு இடம் தரக் கூடாது. துணிவு கொள்வேன் என்று நாவினால் சொன்னால் மட்டும் போதாது. செயலிலும் காட்ட வேண்டும். ஆற்றின் இரு கரைகளைப் போன்றது பணி வும் துணிவும். கரை இல்லாத ஆற்றுநீர் கால்வாய் வழியாகப் பாயாது. கழனிகளில் புகாது. நெல்மணிகள் விளையாது. இதே போல பணிவும் துணிவும் இல்லாத வாழ்வு வெற்றிகரமாக அமையாது. இதற்கு உறு துணையாக இருப்பது நாவடக்கம்.

எதைக் காக்காமல் இருந்தாலும் நாவை கட்டாயம் காத்துக் கொள்ள வேண்டும். நாவை அடக்காவிட்டால் வசைச் சொற்களைப் பேச வேண்டியிருக்கும். ... மடக்கிப் பணி... பாதகம் ஏற்படவே ஏற்படாது. பணிவுக்கு நாவடக்கம்முன் வாசல் ஆகும். அந்த வாசலில் உள்ள படிகளைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.

அவசியம் ஏற்படும் பொழுது மட்டுமே வாயைத் திறக்க வேண்டும். சுருக்கமாகவும், சுவையாகவும் பேசுவது சிறப்பானது. கேட்பவரின் தன்மை அறிந்து நன்மை தரும் நல்ல சொற்களைத் தான் கூற வேண்டும். பேசும் சொற்களில் கோபக் காற்று வீசக்கூடாது. கடுஞ் சொல் கலக்கவே கூடாது. வசைமொழி எப் பொழுதுமே ஆகாது. இனிய சொற்கள் இருக்கும் பொழுது வன்மையான சொற்... உச்சரிக்காமல் இருப்பது ... மென்மையாகவும் இனிமையாகவும் சிந்தித்துப் பேச வேண்டும். மணி அடிப்பது போல கணீர் என்று பேசுவது சிறப் பானது. அளவுக்கு மேல் பேசக் கூடாது. சொல்லில் சிக்கனம் அவசியம் தேவை. அளந்து பேசுவது இனிமையானது. பேச வேண்டிய இடத்தில் கட்டாயம் பேச வேண் டும். எப்பொழுதும் பேசிக் கொண்டே இருப்பது விரும்பத்தக்கது அல்ல.

கண்டபடி பேசிக்கொண்டு இருப்பதால் பலவிதமான இடையூறுகள் ஏற்பட வாய்ப்பு ஏற்படும். வாய்க்கு வந்தபடி உளறக் கூடாது. நிதானித்துப் பேசுவது நல்லது. தானத்திலும் பெரிது நிதானம் என்பதை உணர்ந்து கொள்வது அவசியம். கருத்தோடும், காரியத்தோடும் பேசுவது நன்மையைத் தரும். நாவினால் வெளியேறும் சொற்களும் நறுக்காய் இருக்க வேண்டும். சிக்கனமான பேச்சு என்றுமே சிறப்பைத் தரும். கிரேக்க ஞானி சாக்ரடீசை ஒரு அற்பன் காலால் உதைத்துவிட்டான். இதைக்கண்ட அவருடைய நண்பருக்கு ஆத்திரம் பொங்கியது. சாக்ரடீஸ் பொறுமையாக இருந்தார். வாயைத் திறக்கவில்லை முகத்தைச் சுளிக்கவில்லை. ஆனால் சாக்ரடீஸின் நண்ப ருக்கோ நிலை கொள்ளவில்லை.

நண்பரைப் பார்த்து சாக்ரடீஸ், ஒரு கழுதை என்னை உதைத்தால், நான் அதைத் திருப்பி உதைப்பேன் என்று நினைக்கிறாயா நண்பா? என்று கேட்டார். ஆத்திரத்துக்கு இடம் கொடுத்தால் மனம் பாழ்பட்டு போகும். நிதானம் தவறாமல் இருக்க வேண்டுமானால் நியாயமான கோபத்துக்கு கூட அதிக முக்கியத்துவம் தரக்கூடாது. நாம் வாழ்க்கையில் உயர்ந்து முன்னேற வேண்டுமானால் பணிவும் துணிவும் கொண்டு செயற்பட வேண்டும். இதுதான் எம்மை வெற்றி பெற வைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# எதிர்க்கட்சித் தலைவர் பதவி சிறுபான்மைக்கான அங்கீகாரம்

*நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தெரிவிப்பு*

கொழும்பு, செப், 11
எதிர்க் கட்சித் தலைமைப் பதவி என்பது சிறுபான்மைகளுக்கான அங்கீகாரம் எனத் தெரிவித்துள்ளது நல்லாட்சிக்கான தேசிய முன்னணி.

இது தொடர்பில் அந்த முன்னணி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

இலங்கையின் 8ஆவது நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவாராக இரா. சம்பந்தன் பதவியேற்று இருப்பது இந்த நாட்டின் சிறுபான்மை சமூகங்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரமாக அமைகின்றது. அண்மைக்காலமாக இலங்கையின் அரசியல் ஒழுங்கில் நம்பிக்கை தரக்கூடிய பல்வேறு மாறுதல்கள் இடம்பெற்று வருகின்றன்.

2009 களில் ஆயுதப் போராட்டம் நிறைவுக்கு வந்த போதிலும் சிறுபான்மை சமூகங்களை அடக்கி ஆளுகின்ற அரசே பதவியிலிருந்தது. சிறுபான்மைச் சமூகங்களையும் தாண்டித் தேசிய நலன்களுக்கு [illegible]தகம் ஏற்படும் விதத்திலும் நாட்டின் அமைதி, ஐக்கியம் என்பவற்றிற்கு குந்தகம் ஏற்படுகின்ற விதத்திலும் கடந்த அரசு செயற்பட்டு வந்தது. 2015இன் ஆரம்பத்தில் மைத்திரிபால சிறிசேன இந்த நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டமை அத்தகைய அராஜக ஆட்சிக்கு விழுந்த முதலாவது அடியாகும். அதனைத் தொடர்ந்து எமது தேசத்தில் ஒரு புதிய ஜனநாயக ஒழுங்கு கட்டியெழுப்பப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் உடன்பாட்டோடு கூடிய தேசிய அரசு அமைக்கப்பட்டிருப்பது மற்றுமொரு நல்ல விடயம்.

அதேபோன்று எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தன் தெரிவு செய்யப்பட்டிருப்பதும் ஒரு நல்ல மாற்றம். இந்தச் சந்தர்ப்பத்தை மிகச் சரியாகப் பயன்படுத்தி இந்த நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதும் ஜனநாயக வெளியை மாசுபடுத்தாது பேணிப் பாதுகாப்பதும் எம் எல்லோரினதும் கடமை–என்றுள்ளது. (த–10)

## குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு மிக விரைவில் தீர்வு கிட்டும்

*அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு*

ஹேவாஹெட்டத் தொகுதியில் தெல்தோட்டை, கலஹா, உடுதெனியப் பிரதேசங்களில் மக்கள் எதிர்நோக்கும் குடிநீர், பாதைச் சீர்கேடு, வேலைவாய்ப்பின்மை மற்றும் கல்விப் பிரச்சினைக்கு விரைவில் உரிய தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், தமது தேர்தல் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்த வாக்காளர்களுக்கும், பொது மக்களுக்கும் நன்றி செலுத்துவதற்கான மூன்றாம் கட்டப் பயணமொன்றைக் கடந்த சனிக்கிழமை மேற்கொண்டார். இதன்போது ஹேவாஹெட்டத் தொகுதியில் கலஹா, தெல்தோட்டை, உடுதெனிய போன்ற பிரதேசங்களுக்கு சென்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முதலில் கலஹாவுக்கு சென்ற அமைச்சர் ஹக்கீம், தெல்தோட்டை, கபடாகம, ரல்லிமங்கொட, கோணாங்கொட, பத்தாம்பள்ளி, முஸ்லிம் கொலனி, முப்பதுவீடு, மெதகெக்கில, பீலிக்கரை, வனஹப்புவ, வெட்டகேபொத்த, பல்லேகம, உடுதெனிய ஆகிய கிராமங்களுக்கு வருகை தந்தபோது மக்கள் திரண்டு நின்று மகத்தான வரவேற்பளித்த னர். சிங்கள, தமிழ் மக்களும் அமைச்சரை வரவேற்றதோடு தமது பிரச்சினைகள் குறித்து அவருடன் கலந்துரையாடினர். (த–10)

### மரண அறிவித்தல்

**செல்லத்தம்பி தர்மபாஸ்கரன்**



புது வீதி, ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி தர்மபாஸ்கரன் (09.09.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் - நாகேஸ்வரி தம்பதி யரின் அன்பு மருமகனும் செல்வமலரின் அன்புக் கணவரும் சுபாசினி, சுதாசினி, சுகந்தினி, சுபராஜ், தர்மராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேந்திரராசா, ரவீந்திரன், காலஞ்சென்ற உமாதேவி மற்றும் நாகேஸ்வரன், பிரபாகரன், கலாதேவி (ஜேர்மனி), சுதாகரன் (சுவிஸ்), சிறிதரன் (கனடா), கெங்காதரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செல்வநேசன் மற்றும் கனகரஞ்சின் ஆகியோரின் மைத்துனரும் தேவகுமார், ரவீந்திரன், நர்மலன், நிசாந்தி, கார்த்திகா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புது வீதி, ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

தகவல் :
சகோதரர்கள்.

### மரண அறிவித்தல்

**சிவசம்பு சிவேந்திரன்**
(முன்னைநாள் கிளை முகாமையாளர் ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்)



வேலணையைப் பிறப்பிடமாகவும் , வேலணையையும் நீர்கொழும்பையும் வசிப்பிடமாகவும் கொண்ட் முன்னை நாள் ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளர் சிவசம்பு சிவேந்திரன் நேற்று (10.09.2015) வியாழக் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் சரவணையை சேர்ந்த சிவசம்பு - சிவகாமசுந்தரி தம்பதியரின் ஏக புத்திரனும் யோகலட்சுமியின் அன்புக் கணவரும் யாழினி (லண்டன்), Dr.மயூரி ஆகியோரின் அன்பு தந்தையும் கிருபரனின் அன்பு மாமனாரும் தனிஷ், அஜேஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

வேலணை மேற்கு,
வேலணை.

குடும்பத்தினர்.
தகவல் : சாந்தலட்சுமி (சாந்தி)

### மரண அறிவித்தல்

**திருமதி மகேஸ்வரி சிவசம்பு**
(இளைப்பாறிய தாதி உத்தியோகத்தர்)



மந்திகை, புலோலி தெற்கு, புலோலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சிவசம்பு 09.09.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்மையா - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவசம்புவின் அன்பு மனைவியும், சபேசன் (ஆசிரியர் - மட்டக்களப்பு), தர்மசுகி (கனடா), கிருஷ்ணபபி (வைத்தியர் ஜேர்மனி), மிதிலன் (உதவி முகாமையாளர் கிறீன் கிராஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வினோதினி (முகாமைத்துவ உதவியாளர் பருத்தித்துறை பிரதேசசபை), ராஜகுலேந்திரன் (கனடா), சிறிசங்கர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் அனிருத், டனிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், சிவஞானம், மார்க்கண்டு, பூரணம் மற்றும் கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2015) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 3.00 மணியளவில் கருகம்பன் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மந்திகை,
புலோலி தெற்கு.

தகவல் :
குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

**இளையதம்பி கந்தையா தியாகராசா**
(யா/எலெக்றிக் லைன்ஸ், சில்வர் ஸ்ரார் இன்டஸ்றீஸ் கொக்குவில், என்பவற்றின் பங்காளர், அகில இலங்கை சமாதான நீதிவான்)



மலர்வு 30.09.1928
உதிர்வு 10.09.2015

வேலணை கிழக்கு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 37, வவசற் பிளேஸ் வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருவாளர் இளையதம்பி கந்தையா தியாகராசா (E.K.T) 10.09.2015 வியாழக்கிழமை அதிகாலை சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், நயினாதீவு சேனாதிராசா - மாணிக்கம் தம்பதிகளின் மருமகனும் திருமதி லெட்சுமியின் (இளைப்பாறிய ஆசிரியை யா/வைத்தீஸ்வரா கல்லூரி) அன்புக் கணவரும் Dr.இறைவன் (பதில் பணிப்பாளர் வைத்திய சேவை கொ/லங்கா கொஸ்பிட்டல்) அவர்களின் அன்புத் தந்தையும் Dr.காயத்திரியின் (பல் வைத்தியர், கொ/லங்கா கொஸ்பிட்டல்) அன்பு மாமனாரும் தர்ஷன், சஞ்சயன் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் காலஞ்சென்றவர்களான E.K.நாகராசா (இளைப்பாறிய ஆசிரியர்), E.K.தங்கராசா (E.K.T அரிசி ஆலை), E.K.ஜோகராசா, மற்றும் E.K.செல்வராசா (இந்தியா), திருமதி தவமணிதேவி சிவபாலசிங்கம் (U.S.A) காலஞ்சென்ற லீலாவதி மற்றும் திருமதி லலிதாதேவி சிறிதரன் (ரவி - வேலணை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சேனாதிராசா சுப்பிரமணியம் மற்றும் திருமதி பூமகள் நடராசா (இளைப்பாறிய ஆசிரியை), திருமதி தங்கம்மா சிவபாதம், திருமதி மீனாட்சி சின்னத்தம்பி (ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி), திருமதி நாகம்மா சந்திரன் (ஓய்வு பெற்ற உதவி திட்டப் பணிப்பாளர்), திருமதி சொர்ணம்மா மகேஸ்வரநாதன் (இளைப்பாறிய ஆசிரியை) காலஞ் சென்றவர்களான இராமநாதன், பொன்னம்பலம் மற்றும் திருமதி ஜானகி சுந்தரலிங்கம் (ஜேர்மனி) ஆகினோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.09.2015) வெள்ளிக்கிழமை மு.ப 9.00 மணிமுதல் பி.ப 2.00 மணிவரை பொரளை ஜயவர்த்தன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின் பி.ப 5.00 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம் பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0775497474,
0112360145

தகவல் -
குடும்பத்தினர்

### மரண அறிவித்தல்



**திருமதி இராசம்மா முருகேசு**

காரைநகர் விளானையைப் பிறப்பிடமாகவும், பாலோடையை வசிப்பிடமாகவும் தற்போது திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா முருகேசு நேற்று (10.09.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதன்-தனுக்கோடி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா முருகேசுவின் (ஓய்வு பெற்ற பொலிஸ் O.A) அன்பு மனைவியும், சிவானந்தராசா (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), காலஞ்சென்ற சிவயோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சிவானந்தசுந்தரம் (முன்னாள் பொலிஸ் சார்ஜன் உத்தியோகத்தர்), யோகேஸ்வரி (யோகு) ஆகியோரின் அன்பு மாமியும், மோகனராசா, தர்மீகராசா, தவராசா, ஜெகராசா, நிமல தீபன், தர்ஸ்சினி-பாலகுமார், நிஷாந்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆறுமுகம், மகேஸ்வரி, காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் தங்கம்மா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான முருகேசு பொன்னம்மா, நடனசபாபதிப்பிள்ளை பாக்கியம் ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2015) வெள்ளிக்கிழமை பி.ப 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.35, கம்பஸ் லேன்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
021 222 7577

(64563) (10)

தகவல்: மகன்
சிவானந்தராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலைச் சந்தித்துப் பேச இந்தியக் கட்சிகள் ஆர்வம்

கொழும்பு, செப்.11
இந்தியாவுக்குப் பயணம் மேற் கொள்ளும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்துவதற்கு, பாரதீய ஜனதாக் கட்சியுடன் கூட்டணி அமைத்துள்ள பங்காளிக் கட்சிகள் கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டுள்ளன.

இதனால், சந்திப்புக்கான நேரம் ஒதுக்குவதில் இரு நாட்டு வெளி விவகார அமைச்சுக்களும் சிக்கலை எதிர்கொண்டுள்ளன என்று இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது. எனினும், முக்கிய கட்சிகளின் தலைவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படலாம் எனவும் அவ்வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

மூன்று நாட்கள் பயணம் மேற் கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 14ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்லவுள்ளார்.

15ஆம் திகதியே அவர் முக்கிய சந்திப்புகளில் ஈடுபடுவார். காலை யில் இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியையும் அதன்பின்னர் வெளி விவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜையும் அவர் சந்தித்துப் பேச்சு நடத்து வார்.

அன்றையதினம் மதியம் இந்தியப் பிரதமருடன் இலங்கைப் பிரதமர் அரசமுறை சந்திப்புகளை நடத்துவார். இதன்போது ரணிலுக்கு மதிய போசன விருந்தளிக்கப்பட வுள்ளது. அதனைத் தொடர்ந்து முதலீட்டாளர்கள் உட்பட முக்கிய குழுக்களுடனான சந்திப்பை பிரதமர் மேற் கொள்வார்.

இந்நிலையிலேயே, இலங்கைப் பிரதமரைச் சந்திப்பதற்கு பாரதீய ஜனதாக் கட்சித் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

டில்லிக்கு வெளியில் பிரதமரின் பயணம் அமையாது என்பதால், ஓரிரு கட்சிகளின் தலைவர்களை அவர் சந்திக்கக்கூடும் என எதிர் பார்க்கப்படுகிறது. (த–சி)


**A/L Chemistry/Biology**
இருமொழிகளிலும் வீடு வந்து கற்பித்தல். உயிரியல், இரசாயனவியல் பரீட்சைத் தடாகம் Exampool விற் பனைக்குண்டு. தொடர்பு:
**சிங்கம் மாஸ்டர் 077 773 0840**

**துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூசணி அம்மன்**



வெள்ளவத்தையில் பெர்னாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞான கணேஸ்வரி அம்மன் அவர்கள் செப்ரெம்பர் மாதம் 11,12,13 ஆம் திகதிகளில் ஞான வைரவர் ஆலயம் கலாசாலை வீதி, 2 ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறுவார்.

**பூசை நேரம்:** (64552)
முற்பகல் 10.30 - 12.30 மணிவரை (10)
மாலை 5.30 - 6.30 மணிவரை
குறிப்பு: கலாசார உடையுடன் வருகை தரவும்
தொடர்பு: 021 221 9127, 077 801 2226

**இடமாற்றம்**

சுன்னாகம் நகரின் நன்மதிப்புமிக்க நிறுவனங்களில் ஒன்றான **"தேவன்சன்"** எலக்ரிக்கல் இல 14 ஸ்ரேசன் வீதி, சுன்னாகம் சந்தி, சுன்னாகம் எனும் விலாசத்தில் இடம் மாற்றப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வருகிறது என்பதனை எமது அன்புக்குரிய பெருமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

மகாதேவன் இராஜரூபன்
"தேவன்சன்"
இல.14, ஸ்ரேசன் வீதி
சுன்னாகம் சந்தி
சுன்னாகம்
தொடர்பு:
077 3912742, 071 847 4688

**NIPPON**
அதிஉயர் வலுவுள்ள LED மின்குமிழ்கள்
DUTY - FREE PRICES IN COLOMBO
18 மாத உத்தரவாதம்
நிப்போன் LED மின்குமிழ்களை பாவித்து உங்கள் மின்சார கட்டணத்தை 90% ஆல் குறையுங்கள்
உயர் / தாழ் வோல்டேஜ் பாதுகாப்பு
புதிய வகை
வோல்டேஜ் 80-260V கூடிக்குறைந்தாலும் நிப்போன் 230V இல் ஒளிரும்.



- Lifespan – 50,000 மணித்தியாலங்கள்
- உயர்தர பிரகாசமானது
- உயர் வெப்ப உருகுநிலை தொழில்நுட்பம்
- சரியான மின்னாற்றல் கொண்டது

3W - Rs 215/=
5W - Rs 300/=
7W - Rs 340/=
9W - Rs 440/=
12W - Rs 520/=
15W - Rs 690/=
18W - Rs 800/=
Out of stock

DISCOUNT FOR TRADE

LANKA NIPPON
#18 Keyzer Street, Colombo 11
Tel: 2437735, 5230975 Fax: 2437687
info@lankanippon.com | lankanippon.com
Outlets at:
MTN SYSTEMS, Wickrama Plaza, 59/9, Ground Floor, Colombo 11. Tel: 011 4721602
BIN AHAMEDS Digital Colour Lab, No 92, Galle Road, Colombo 04. Tel: 011 2581666

**Majestic Cineplex Jaffna**
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்



மஜெஸ்டிக் ப்ளாட்டினம் 10.30 / 2.30 6.30
சில்வர் 10.15 / 2.15 / 6.15
பஹுபாலி 10.30 / 2.30
வித் ஓர் வித்தவுட் யு 6.00
விசாரணை ☏ 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

# யாழ். மண்ணில் முதன்முறையாக சர்வதேச தொலைக்காட்சி ஒன்றின் நேரடி ஒளிப்பதிவு நிகழ்ச்சி

தலைப்பு

## யாழ். மண்ணில் கலாசார சீரழிவு உண்டா? இல்லையா?

இடம் : சிவபூமி இல்லம், ஸ்ரேசன் றோட், கோண்டாவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.
நேரம் : ஞாயிறு பிற்பகல் 2 மணி

குறித்த தலைப்பின் கீழ் விவாதத்தில் பங்குபற்ற விருப்பமுடைய ஆண் பெண் இருபாலருக்குமான கலந்தாய்வும் பயிற்சியும் ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். (வயதெல்லை கிடையாது)

பங்குபற்ற விருப்பமுடையவர்களையும் பார்வையாளர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பங்குபற்றுபவர்களுக்கு பாராட்டுதல்களும் பரிசில்களும் வழங்கப்படும்.

(64556)(10)

**தொடர்புகளுக்கு: 077 183 1226**

**தங்க ஆபரணங்கள் ஏல விற்பனை**

இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி கடன் ஒழுங்கமைப்பின் கீழ் யாழ்ப்பாணம், சாவகச்சேரி மற்றும் கிளிநொச்சியிலுள்ள கிளைகளில் 30.06.2015 க்கு முன் அடகு வைக்கப்பட்ட நகைகளும் 31.08.2015 வரை மீட்கப்படாத தவணை கடந்த தங்க நகைகளை 19.09.2015ம் திகதி காலை 9.30 மணி முதல் இல.56/22/B, ஸ்டென்லி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி அலுவலக வளாகத்தில் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

இத் தங்க நகை ஆபரணங்கள் இலகு கொடுப்பனவுத் திட்டத்தின் கீழும் பெற்றுக்கொள்ளலாம்.

தங்க ஆபரணங்கள் :
சங்கிலி / வளையல் / மோதிரம் / பிரேஸ்லட்

ASIA ASSET FINANCE PLC
Muthoot Finance

உதவி பொது முகாமையாளர் (கடன்மீட்பு)
இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
Hotline: 071-6531349
Tel: 0115-899300 / 0115-669922
Fax: 0112577477 Reg No: PB139

**வலி. கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**அச்சுவேலி**
**கிராமிய வங்கி மீதியை உறுதிப்படுத்தல்**

எமது சங்கத்தின் **31.05.2015**இல் முடிவுற்ற ஆண்டுக்கான எண்பார்வை நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் சேமிப்பு புத்தகத்துடன் தங்கள் சேமிப்பு புத்தகக் கணக்கு மீதியினை கீழ்க் காணும் திகதிகளில் கிராமிய வங்கிக்கு வந்து உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

காலம் : **14.09.2015, 15.09.2015, 16.09.2015, 21.09.2015, 22.09.2015, 23.09.2015, 28.09.2015, 29.09.2015, 30.09.2015** ஆகிய ஒன்பது தினங்கள்.


பொது முகாமையாளர்
வலி.கிழக்கு, ப.நோ.கூ.சங்கம்
அச்சுவேலி.

(C/18685)(10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக் கூறலில் சகலரும் ஏற்கும் புதிய யோசனைகளே பிரதானமானவை

**போர்க்குற்ற விவகாரங்களுக்கான அமெ. தூதுவர் ஸ்டீபன் ராப் கருத்து**



கொழும்பு, செப். 11
இலங்கை குறித்த புதிய யோசனைகள் எவையும் பொறுப்புக்கூறுதல் மற்றும் மக்களின் சொந்தத் தேவைகளை நிறைவேற்றுவதை நோக்கமாகக்கொண்டு அமைந்திருக்க வேண்டும் என்று அமெரிக்காவின் போர்க்குற்ற விவகாரங்களுக்கான முன்னாள் தூதுவர் ஸ்டீபன் ராப் தெரிவித்துள்ளார்.

எனினும், எந்த யோசனையும் இலங்கையின் சகல சமூகத்தவர்களுடனும் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களை அடிப் படையானதாகக்கொண்டு உருவாக்கப்படுவது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

செப்ரெம்பர் 2009இல் அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்தில் இணைந்து கொண்ட காலப்பகுதியிலிருந்து இலங்கை விவகாரத்தில் நான் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தேன். போரின் இறுதித் தருணங்களில் இரு தரப்பும் இழைத்திருக்கக் கூடிய போர்க்குற்றங்கள் குறித்து அறிக்கையைச்சமர்ப்பிக்குமாறு எனக்கு ஆணை வழங்கப்பட்டிருந்தது.

2009 ஒக்ரோபர் நடுப்பகுதியில் நான் இடைக்கால அறிக்கையொன்றைச் சமர்ப்பித்ததுடன், அதன் பின்னர் செனட் விடுத்த வேண்டுகோளின்பேரில் சில அறிக்கைகளைச்சமர்ப்பித்தேன். இலங்கை அதிகாரிகள் நேர்மையான விசாரணைகளை முன்னெடுக்கத் தவறியுள்ளனர் என்று நான் குறிப்பிட்டிருந்தேன்.

உள்நாட்டு நடைமுறைகளுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக நான் இருதடவைகள் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டேன். 2014 ஜனவரியில் நான் மீண்டும் பயணம் மேற்கொண்டவேளை எனது பயணத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு அருகில் நூற்றுக்கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எனது முகத்தைப் பிசாசின் முகத்தைப்போல சித்திரிக்கும் பெரிய சுவரொட்டிகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒட்டி யிருந்தனர். நான் உலக சமா தானத்திற்கு ஆபத்தானவன் எனத் தெரிவிக்கும் வாசகங்கள் அதில் காணப்பட்டன. அவர்கள் நான் யாழ்ப்பாணத்தில் இருந்த வேளை கொழும்பில் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். நான் கொழும்புக்கு வந்தவேளை அனைத்தும் அமைதியாகக் காணப்பட்டன.

இலங்கை விவகாரத்தில் நான் அமெரிக்காவிலுள்ள சகாக்களுடன் இணைந்து தீவிரமாகப் பாடுபட்டேன். ஜெனிவாவுக்கு மூன்று பிரேரணைகளைக் கொண்டுவந்தோம். மனித உரிமைகள் ஆணையாளரின் விசாரணையைக் கோரும் பிரேரணையை வெற்றிகரமாக நிறைவேற்றினோம். குறிப்பிட்ட விசாரணை அறிக்கை அடுத்த சிலவாரங்களில் வெளியாகலாம்.

மனித உரிமைகள் ஆணை யாளர் இலங்கைக்கு பயணம் மேற்கொள்வார் என நான் எதிர் பார்க்கின்றேன். பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளுக்காக உறுதியாக நிற்கவேண்டும் என்ற எமது தீர்மானத்திற்கு வெற்றிகிடைத்த ஒரு சந்தர்ப்பமாக இதனை நான் காண்கிறேன்.

அதேவேளை, அத்தகைய செயற்பாடுகள் போருக்கான சட்டங்களை கருத்திலெடுப் பவையாக அமைந்திருக்க வேண்டும். போர் குறித்த சட்டங்கள் பின்பற்றப்படுதல் என்பதை அடிப்படையாக வைத்து அவற்றை நோக்கவேண்டும்.

மோதலுடன் எவ்வகை யிலும் தொடர்புபடாத மக்கள் வேண்டுமென்றே இலக்கு வைக்கப்பட்டமை மற்றும் சரணடைந்தவர்கள் படுகொலை செய்யப்பட்டமை குறித்து நாங்கள் குறிப்பாக ஆழ்ந்த கவலைகொண்டுள்ளோம். எனது அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் இவை குறித்து தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எங்களது நிலைப்பாடும், அரசுடனும், சகல சமூகங்களுடனும் நாங்கள் மேற்கொண்ட தொடர்பாடல்களும், முன்னைய அரசிலிருந்து மாறுபட்ட விதத்தில் செயற்படும் தலைமைத்துவம் அவசியம் என இலங்கை மக் கள் தீர்மானிக்கும் நிலையை ஏற்படுத்தின என நாங்கள் கருதுகின்றோம்.

நான் தற்போதைய யோசனைகளை இன்னும் ஆராயவில்லை. எனினும், எந்த யோசனையும் இலங்கையின் சகல சமூகத்தவர்களுடனும் மேற்கொள்ளப்பட்ட கலந்து ரையாடல்களை அடிப் படையானதாகக்கொண்டு உருவாக்கப்படுவது அவசியம். ஜெனிவாவிலிருந்து வரும் மின்னஞ்சலுக்குப் பதிலளிப் பதற்காக வெளியிலிருந்து கொண்டுவரப்பட்டு நடைமுறைப் படுத்தப்படும் விடயமாக அது அமையமுடியாது.

பொறுப்புக்கூறுதல், உண்மையை ஏற்படுத்துதல், இவற்றுக்கு அதிகளவுக்குக் காரணமான தனிநபர்களை விசாரணை செய்தல், குற்றங்கள் தனிநபர்களாலேயே இழைக்கப்பட்டன; சமூகங்களால் இல்லை என்ற அடிப்படையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் போன்ற இலங்கையர்களின் சொந்தத் தேவைகளுக்குப் பதிலளிப்பவை யாக இந்த யோசனைகள் அமைந் திருக்க வேண்டும்– என்றார். (த–வ)

## காபன்மொனொக்சயிட் வாயுவை சுவாசித்தமையால் தாஜுடீன் சாவு
## –சட்ட வைத்திய அதிகாரி

கொழும்பு, செப்.11
காபன்மொனொக்சயிட் வாயுவை சுவாசித்த காரணத்தினால் பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுடீன் மரணித்தார் என சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது–

வாகனம் எரிந்ததில் ஏற்பட்ட வாயுவினால் வெளியான காபர்ன் மொனொக்சயிட்டை சுவாசித்த காரணத்தினால் இவ்வாறு தாஜுடீன் உயிரிழந்துள்ளார்.

உடல் ஊனமுற்ற நிலையில் தாஜுடீன் மூச்சுத் திணறி உயிரிழந்துள்ளார். தாஜுடீனின் ரத்தத்தில் அதிகளவு எதனோல் கலந்திருந்தது. கடுமையான தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதுடன் நெஞ்சுப் பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் சட்ட வைத்திய அதிகாரி குறிப்பிட்டுள்ளார். (த–வ)


**மரண அறிவித்தல்**

**வேலுப்பிள்ளை ஈசுரபாதம்**
(முன்நாள் உ. ப அதிபர் வேலாயுதம் வித்தியாலயம் பருத்தித்துறை)



தோற்றம் 22.08.1924 | மறைவு 10.09.2015

புலோலி மேற்கைப் பிறப்பிடமாகவும் கந்த முருகேசனார் வீதி, புலோலி தெற்கு, புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ஈசுரபாதம் நேற்று (10.09.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகப்பர் வேலுப்பிள்ளை - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை முத்தையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் பாசமிகு கணவரும் மனோகரன் (ஜேர்மனி), சகுந்தலா (இளைப்பாறிய ஆசிரியை - சைவ மங்கையர் கழகம் வெள்ளவத்தை), ஹரிகரன் (ஆசிரியர் - இரத்மலானை இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்பு தந்தையாரும் லில்லிமலர் (ஜேர்மனி), ஈஸ்வரி (இளைப் பாறிய ஆசிரியை - தெகிவளை தமிழ் மகாவித்தியாலயம்), சிவபாலன் (சவுதி அரேபியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சகேயு, மீரா, பிரசாந்தன் ஆகி யோரின் அன்பு பேரனும் பிரஜீத் வைஷவி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.09.2015 வெள்ளிக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : பிள்ளைகள்
சகுந்தலா (மகள்),
ஹரிகரன் - (மகன்)

077 582 2186,
071 824 4021


# புளூடூத், ஹான்ப்ரி பாவித்தவாறு வாகனம் செலுத்தினால் குற்றம்

கொழும்பு, செப்.11
கையடக்கத் தொலைபேசியைப் பயன் படுத்திக் கொண்டு வாகனம் செலுத்து வது, மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரகாரம் குற்றமாகும் என்று தெரி வித்துள்ள பொலிஸ் தலைமையகம், புளூடூத், ஹான்ப்ரியைப் பாவித்துக் கொண்டு வாகனம் செலுத்தும் சாரதி களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்துள் ளது.

புளூடூத், ஹான்ப்ரியைப் பாவித்துக் கொண்டு வாகனம் செலுத்தும் சாரதிகளுக்கு , சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தண்டச் சிட்டை வழங்கமுடியாது என்றும், அதனால் அவ்வாறான சாரதிகளை நீதிமன்றத்தில் முற்படுத்த முடியாதுள்ளது எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார். (த–வ)


**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரி சக மாணவி புவனேந்திரன் கஸ்தூரி அவர்களின் அன்புத் தந்தை

**கனகசபை புவனேந்திரன்**

அவர்களின் திடீர் மறைவு எம்மை மீளாத் துயரில் ஆழ்த்தியுள்ளது. அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதா பத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்கந்தவரோதயன்ஸ்
2010 உயர்தர மாணவர் சார்பாக
இராமேஸ்வரன் ரஜிந்தன்.

(62977)(10)

**கண்ணீர் அஞ்சலி**



" தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தராக கடமையாற்றும் **மு.சிவகாந்தன்** அவர்களின் அன்புத் தாயாரும் கிராம அலுவலர் **திருமதி கிருஷ்ணசாந்தியின்** அன்பு மாமியாருமாகிய

**திருமதி கன்மணி முருகேசு**

அவர்களின் திடீர்மறைவு எம்மையெல்லாம் ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்"

பிரதேச செயலாளரும், சகல நலன்புரி சங்க அங்கத்தவர்களும்
நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், தெல்லிப்பழை

**31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை**

எமது கல்லூரியின் முன்னாள் விஞ்ஞான ஆசிரியர்

**திருமதி சர்வாஜினி சுரேஸ்**

அவர்களின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திபெறவும் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆசிரிய நண்பர்கள்
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை.

(64553)(10)

**கண்ணீர் அஞ்சலி**



எமது யாழ். பிரதேச செயலக நலன்புரி சங்க உறுப்பினரான **க.கிருஷ்ணதாஸன்** (வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்) அவர்களின் அன்புத் தாய்

**திருமதி அன்னபூரணம் கணபதிப்பிள்ளை**

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம், பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

**நான்காம் ஆண்டு நினைவஞ்சலி**

திருமதி பற்குணதேவி
செல்லையா

மலர்வு 13.05.1945 | உதிர்வு 28.08.2011



நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்தது
அம்மா! நீங்கள் பெற்ற செல்வங்கள்
உமை நினைந்து குவிக்கின்றோம்.
ஏங்குதே எங்கள் நெஞ்சம்! அம்மா!!
பாரினில் நாம் இருக்கும்வரை
போற்றிடுவோம்.
உங்கள் நினைவுகளை என்றும்
மறவோம்! உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

கல்லுவம்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சிகளின் யோசனைகளை உள்ளடக்கி பொதுக்கொள்கை

## உருவாக்க அமைச்சரவை ஒப்புதல்

கொழும்பு, செப். 11
பிரதான அரசியல் கட்சிகள் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் முன்வைத்த யோசனைகளுள் நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய யோசனைகளை உள்வாங்கி தேசிய அரசுக்கான பொதுக் கொள்கையொன்றைஉருவாக்குவதற்குஅமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையில் இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.
அமைச்சரவைக்கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே மேற் படி யோசனையை பிரதமர் முன்வைத்துள்ளார்.
பொதுத் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உட்பட இதர அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனங்களில் மிகப் பொருத்தமான விடயங்களைத் தெரிவுசெய்து அவற்றை உள்ளடக்கியவாறு தேசிய அரசின் பொதுக் கொள்கை ஒன்றை முன்னெடுப்பதற்கு அனுமதிகோரியே இந்த யோசனையை பிரதமர் சமர்ப்பித்துள்ளார். (த-சி)

# சசீந்திரவிடம் விசாரணை

கொழும்பு, செப். 11
ஊவா மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சசீந்திர ராஜபக்சவை பெரும் நிதி மோசடிகள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று விசாரணை செய்தது.
சசீந்திர ராஜபக்சவை ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவரிடம் பண்டாரநாயக்க சர்வதேச மா நாட்டு மண்டப காரியாலயத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டன.
முதலமைச்சர் பதவியில் இருந்த காலத்தில், மஹியங்கனைப் பிரதேசத்தில் தபால் திணைக் களத்திற்குச் சொந்தமான காணிகளை முறைகேடாகப் பயன்படுத்தியமை, தமக்குத் தேவையானவர்களுக்குக் காணிகளை வழங்கியமை மற்றும் தபால் தொழில் வாய்ப்புகளை முறைகேடாக வழங்கியமை உள்ளிட்ட காரணங்கள்தொடர்பில் இவரிடம்விசாரணைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இவரிடம் விசாரணைகள் முற்றுப் பெறாததால் மீண்டும் இவர் விசாரணைக்கு அழைக்கப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மூத்த சகோதரனான சமலின் மகனே சசீந்திர ராஜபக்ச என்பது குறிப்பிடத்தக்கது. (த-சி)

### ஆரியரத்ன

நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் சம்பிக்க ரணவக்க, விஜயதாஸ ராஜபக்ச மற்றும் விஜித ஹேரத் ஆகியோர் அரசமைப்புப் பேர வையில் உள்ளடங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.
8ஆவது நாடாளுமன்றின் முதலாவது அரசமைப்புப் பேரவைக் கூட்டம் சபாநாய கர் தலைமையில் நேற்றுச் சபாநாயகர் அலுவலகத் தில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
இதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய, எதிர்க்கட்சித்தலைவர்இரா.சம்பந்தன், அமைச் சர்களான விஜயதாஸ ராஜபக்ச, பாட்டலி சம்பிக்க ரணவக்க, டபிள்யு.டீ.ஜே. செனவிரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.
அரசமைப்பு பேரவைக்கு மீதமுள்ள உறுப்பினர்கள் விரைவில் நியமிக்கப்பட்டுச் சுயாதீன ஆணைக் குழுக்கள் நிறுவப்பட வேண்டும் என ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.
இது தொடர்பில் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களிடம் இருந்து வேட்பு மனுக்களைக் கோரவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசமைப்புப் பேரவையின் அடுத்த கூட்டம் செப்ரெம்பர் 21 மற்றும் 23ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-வ)

### நல்லைக் கந்தனின்

வீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்.
இன்றைய தேர்த் திருவிழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள் பல்வேறு இடங்களில் இருந்தும் திரள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. புலம்பெயர் நாடுகளில் இருந்து வருகை தந்துள்ள மக்களும் இன்றைய தேர்த் திருவிழாவில் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொள்வர்.
பக்தர்களின் வசதி கருதி பாதுகாப்பு, சுகாதார வசதிகள் அங்கு போதிய அளவு ஏற்படுத்தப்பட்டுள்ளன.
பக்தர்கள் தமது உடைமைகளைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளதுடன் கந்தன் தேரில் ஏறி வீதி உலா வரும் சந்தர்ப்பத்தில் பக்தர்களின் நெரிசலை கட்டுப்படுத்த உதவுமாறும் கோரப்பட்டுள்ளது. சிறுவர்களை நெரிசலான இடங்களுக்குக் கொண்டு செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-ரி)

### சகல பஸ்களும்

யார் பஸ் சங்கத்தினரும் , இலங்கைப் போக்குவரத்துச் சபையினரும் அறிவித்துள்ளனர்.
யாழ்ப்பாணத்தின் சகல பகுதிகளிலும் போக்குவரத்தில் ஈடு படும் தனியார், அரச பஸ்கள் அனைத்தும் நல்லூர் ஆலயத்துக்குச் சென்று பக்தர்களை இறக்கிய பின்னரே யாழ். மத்திய பஸ் நிலையத்துக்குத் திரும்பும் எனவும், பக்தர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து பஸ் சேவைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.
அத்தோடு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்து அச்சுவேலி, பருத்தித்துறை செல்லும் பஸ்களும் வழமைபோன்று நல்லூர் ஆலயத்துக்குச் சென்றே குறித்த பகுதிகளுக்குச் செல்லும் எனவும் அவர்கள் கூறினர். (த-21)

### கிரிதல

கிரிதல இராணுவ முகாமுக்குள் நடத்தப்படும் தேடுதல், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று அவர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.
இதையடுத்து, கிரிதல இராணுவ முகாமுக்குள் தேடுதல் நடத்த குற்றப்புலனாய்வுப் பிரிவு விடுத்த கோரிக்கை தொடர்பாக, சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
கிரிதல இராணுவ முகாமுக்குள் இருந்தே போலியான புலிகள் அமைப்பு ஒன்று இயக்கப்பட்டதாகக் குற்றப்புலனாய்வுப் பிரிவு சந்தேகம் வெளியிட்டுள்ளது. கிரிதல இராணுவ முகாமில் இருந்து செயற்பட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் அவர்களுடன் இணைந்து செயற்பட்டவர்கள் என்று 10 பேர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.
இதேவேளை, திருகோணமலையில் அமைந்திருந்த கடற்படை முகாமில் கொழும்பில் கடத்தப்பட்ட தமிழ் மாணவர்கள் தடுத்து வைத்துப் பின்னர் காணாமற்போகச் செய்யப்பட்டமை தொடர்பான வழக்கில் கடற்படை முகாமைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சோதனையிட்டமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### இலங்கைக்கு

கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
எனவே, இலங்கைக்குப் போர்க் கப்பல்கள் விற்கத் தடை விதிக்க வேண்டும் எனக் கூறியிருந்தார். இந்த மனுவை நீதிபதிகள் ஆர்.சுதாகர், வி.எம்.வேலுமணி ஆகியோர் விசாரித்தனர். அப்போது மத்திய அரசு சார்பில் முன்னிலையான சட்டத்தரணி பி.தர்மராஜ், மனுதாரர் குறிப்பிடும்படி போர்க்கப்பல் வழங்குவது குறித்து இந்திய அரசிடம் எந்த முடிவும் இல்லை.
வணிக ரீதியாகப் பயன்படுத்தும் கப்பல் குறித்து பேச்சு மட்டுமே நடந்துள்ளது. அதில், ஆயுதங்கள் எதுவும் கிடையாது– என்றார். இதைப் பதிவு செய்துகொண்ட நீதிபதிகள் மனுவை முடிவுறுத்த உத்தரவிட்டனர். (த-வ)

### ஜனநாயகத்தின்

தொடர்பாகக் கருத்து வெளியிட்டபோதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:–
அண்மையில் நடந்து முடிந்த தேர்தலின் மூலம், இலங்கையில் ஜனநாயகத்தின் அற்புதத்தைக் காண முடிந்தது. அமெரிக்காவின் பார்வையில், நாம் இப்போது தென்கிழக்காசியாவின் மீது கவனம் செலுத்தவுள்ளோம். ஆசியாவிலும் கூட அதற்கான தேவை உள்ளது.
ஏனென்றால் நாம் பெரியளவில் பிரச்சினைகளை எதிர்கொண்டிருக்கிறோம். நாம் தென்சீனக் கடல் பிராந்தியத்தில் இருக்கவேண்டும். தென்சீனக்கடலின் எதிர்காலம் குறித்து நாம் கேள்வி எழுப்பிய போது, மிகப் பெரிய பசுபிக் சமுத்திரம் எம் இருவருக்கும் போதும் என்கிறார்கள்.
ஆனால் இதற்கு மேல் எம்மிடம் விளக்கம் இல்லை. இது மலேசியா, தாய்லாந்து, தாய்வான், வியட்நாம், ஜப்பானின் பாதுகாப்பில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்? எனவே, நாம் நிச்சயம் இந்த முன்னேற்றங்களைக் கண்காணிக்கவேண்டும். நாம் மீண்டும் திரும்பி வந்துள்ளதாகச் சிலர் கூறுகின்றனர். ஆனால் உண்மை என்னவென் றால், நாம் ஒருபோதும் விட்டுச் செல்லவில்லை என்பதேயாகும் –என்றார் அவர். (த-வ)

### வடக்கின்

ரிகா தலைமையிலான குழுவினர் இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர்.
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோ சகர், ஜனாதிபதி மைத்திரிபால வின் ஆலோசகர் ஆகியோர் இந்தக் குழுவில் உள் ளடங்கியிருப்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தக் குழுவினர், யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்டங்களில், உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், நீண்ட கால நோக்கிலான அபிவிருத்தித் தேவைப் பாடுகள் தொடர்பில் விரிவாக ஆராயவுள்ளனர். இது தொடர்பிலான ஏற்பாடுகள் ஏற்கனவே குறித்த மாவட்டச் செயலகங்களினால் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5-101)

### 105 பயணிகளின்

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–
இலங்கையில் இருந்து 105 பயணிகளுடன் நேற்றுமுன்தினமிரவு விமானம் ஒன்று சென்னை விமான நிலையத்துக்குச் சென்றது. நேற்று அதி காலை 2.30 மணியளவில் அந்த விமானம் சென்னை விமான நிலையத்தில் தரை இறங்க முயன்றது.
அப்போது விமானத்தின் சக்கரத்தில் பழுது ஏற்பட்டிருப் பதை இலங்கை விமானி கண்டு பிடித்தார். இதையடுத்து சாமர்த்தியமாகச் செயற்பட்ட அவர், மிகவும் லாவகமாக அந்த விமானத்தை ஓடுபாதையில் தரை இறக்கினார். விமானம் குறிப்பிட்டளவு தூரத்துக்கு நகர்ந்த பின்னர் ஓடுபாதையிலேயே நின்றுவிட்டது. விபத்துகள் எதுவும் நிகழவில்லை.
அதன் பின்னர் அங்கு விரைந்த மீட்புப் படையினர் விமானத்தை அங்கிருந்து இழுத்து விமானம் நிற்கும் பகுதிக்குக் கொண்டு சென்றனர். அதில் இருந்த 105 பயணிகளும் பத்திரமாக இறக்கி விடப்பட்டனர்.
பின்னர் விமானத்தின் சக்கரங்கள் சரி செய்யப்பட்டன. அதன் பின்னர் அதிகாலை 4 மணிக்கு புறப்பட வேண்டிய விமானம் காலை 6 மணிக்குப் புறப்பட்டுக் கொழும்பை வந்தடைந்தது. (த-வ)

### இலங்கையை

போர்க்குற்றங்கள் குறித்து இலங்கை அரசால் மேற்கொள்ளப்படவுள்ள உள்ளக விசாரணைக்கு ஆதரவளிப்பதாகவும், அது தொடர்பில் புதியதொரு பிரேரணையை ஜெனிவா மாநாட்டில் கொண்டுவரவுள்ளதாகவும் அமெரிக்கா அறிவித்துள்ளதன் பின்னணியில் இந்தப் புதிய ஆவணப் படம் வெளியிடப்பட்டுள்ளது.
இலங்கையின் போர்க்குற்றங்களை சனல் – 4 தொலைக்காட்சி மூலம் சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தியவர்களில் ஒருவரும்,வன்னி இறுதிப் போர் அவலம் குறித்து வெளியான போர் தவிர்ப்பு வலயம் என்ற முன்னைய ஆவணப் படத்தின் இயக்குநரும், சனல் –4 தயாரிப்பாளரும் ஊடகவியலாளருமான கெலும் மக்ரேயே இந்த ஆவணப் படத்தையும் தயாரித்துள்ளார்.
'இலங்கை: நீதிக்கான தேடல்' (Sri Lanka: The Search For Justice) என்ற தலைப்பில் இந்த அரை மணி நேர ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம் மற்றும் ஸ்பானிய மொழிகளில் தயாரிக்கப்பட்டு நேற்றுச் சர்வதேச சமூகத்துக்கு இணையத்தளம் மூலம் காண்பிக்கப்பட்ட இந்த ஆவணப்படம், தமிழ், சிங்களம், ஹிந்தி, பிரெஞ்சு மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு அடுத்த சில நாள்களில் இணையத்தில் வெளியிடப்பட வுள்ளதா கத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அவர்களைக் கேட்கவேண்டும் என்ற தொனிப்பொருளில், சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் வகையில், பாதிக்கப்பட்டவர்களின் குரல்களையும், போர்க்குற்ற ஆதாரங்களையும் கொண்டதாக இந்த ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.
தற்போது பொலிவியா, பராகுவே, ஆர்ஜென்ரினா, மெக்சிக்கோ, பிரேசில் ஆகிய தென்னமெரிக்க நாடுகளில் கெலும் மக்ரே இந்த ஆவணப் படத்தின் முன்னோட்டத்தைக் காண்பித்து வருகிறார்.
அவர் அமெரிக்காவுக்குச் சென்று, நியூயோர்க் மற்றும் வொசிங்டனில் அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மத்தியில் இந்த ஆவணப்படத்தை திரையிட்டுக் காண்பிக்கவுள்ளார். அதன் பின்னர், ஜெனிவாவில் உள்ள ஐ.நா. தலைமையக வளாகத்தில் இதனைக் காண்பிக்கவும் மக்ரே திட்டமிட்டுள்ளார்.
இந்தப் புதிய ஆவணப்படம் இலங்கை அரசுக்குப் புதிய சிக்கலை தோற்றுவித்துள்ளதாக இராஜதந்திரிகள் குறிப்பிட்டுள்ளனர். குறித்த ஆவணப் படம் ஜெனிவா அமர்வில் காண்பிக்கப்படவுள்ளதால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.
சனல் 4 தொலைக்காட்சியினால் முன்னர் வெளியிடப்பட்ட ஆவணப் படங்கள் தொடர்பில் அவசர அவசரமாக விசாரணைகளை மேற்கொண்டு அவை தொடர்பில் ஜெனிவாவில் தமது விளக்கத்தை அளிக்க இலங்கை அரசு தயாராகியுள்ள நிலையில் புதிய ஆவணப்படம் வெளியாகியுள்ளமை இலங்கை அரசுக்கு நெருக்கடியை உண்டுபண்ணியுள்ளது.
சர்வதேச போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தும் வகையிலேயே இந்த ஆவணப் படம் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளதாக இராஜதந்திரிகள் குறிப்பிட்டுள்ளனர். (த-வ)

### நல்லூர்த் திருவிழாவில்

நிறுத்தப்பட்டுள்ளனர் என்று யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வூட்லர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நல்லைக் கந்தனின் தேர்த் திருவிழாவில் எந்தவித இடையூறும் ஏற்படாமல் பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கவேண்டும். கடந்த ஓகஸ்ட் 19ஆம் திகதி முதல் ஆரம்பமான நல்லூர்க் கந்தனின் உற்சவம் நாளை தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைகிறது. அண்மைய நாள்களாகப் புலம்பெயர் தமிழ் மக்கள் உட்பட நாடு முழுவதிலுமிருந்தும் சுமார் 3 லட்சம் பேர் வரை நல்லைக் கந்தனைத் தரிசித்தனர்.
ஆலய உள்வீதியிலும் வெளிவீதியிலுமெனச் சுமார் 150 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிவில் உடையில் பணியில் அமர்த்தப்பட்டிருந்தனர். வீதிப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து நெரிசல்களைக் கட்டுப்படுத்துவதற்கும் விசேட பொலிஸ் படையணியொன்று களத்தில் உள்ளது. இந்நிலையிலேயே தேர்த் திருவிழாவான இன்றும், தீர்த்தத் திருவிழாவான நாளையும் பொலிஸாரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படவுள்ளது.
அடியார் ஒருவரின் தங்கச் சங்கிலியொன்றைப் புத்தளம் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் கொள்ளையிட்ட சம்பவத்தைத் தொடர்ந்து அடியார்களின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது – என்றார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாஜுதீன் வழக்கின் முக்கிய சாட்சிக்கு கொலை அச்சுறுத்தல்

## நீதிமன்றில் சட்டமா அதிபர் அறிவிப்பு

கொழும்பு, செப். 11

பிரபல றகர் விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் கொலையின், முக்கிய சாட்சியாளருக்கு அச் சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர், விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் சட்டமா அதிபர் நேற்று நீதிமன்றில் அறிவித்தார்.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சிரேஸ்ட சட்டத்தரணி டிலான் ரத்நாயக்க கோட்டை நீதவான் நீதிமன்றில் இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பூரண விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதன் பின்னர், சந்தேகநபர்களைக் கைது செய்யுமாறு குற்றப்புலனாய்வு அதிகாரிகளுக்கு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸ் உத்தரவிட்டார்.

அத்துடன் தாஜுதீன் பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசி கிடைத்துள்ளதாகக் குறிப்பிட்ட சட்டத்தரணி, அதன் மெமரி கார்ட்டை கொழும்பு பல்கலைக்கழகக் கணினிப் பிரிவுக்கு அனுப்பி அறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்ள நீதிமன்றின் அனுமதியைக் கோரியுள்ளார்.

அந்தக் கோரிக்கையை ஆராய்ந்த, மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸ் அதற்கு அனுமதி அளித்தார். இந்த நிலையில் வழக்கு ஒக்ரோபர் 22ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டதுடன் அன்றைய தினம் விசாரணை அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு இரகசியப் பொலிஸாருக்கு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (த–வ)

# யாழ். பல்கலையில் நேற்றும் மோதல்

## குழப்பவாதிகள் இடைநிறுத்தப்படவுள்ளனர்

யாழ்ப்பாணம், செப் 11

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்றும் மாணவர்களிடையே பெரும் கைகலப்பு இடம்பெற்றுள்ளது. அதனால் கலைப்பீட 3 ஆம் மற்றும் 4 ஆம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் மறுஅறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைக் குழு அமைத்துக் குழப்பத்தில் ஈடுபட்டவர்களை இடைநிறுத்தவுள்ளதாகப் பல்கலைக்கழக மாணவ ஆலோசகர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் 2 ஆம் வருட மற்றும் 3 ஆம் வருட மாணவர்களுக்கிடையே முரண்பாடு ஏற்பட்டிருந்தது. அதில் 4 ஆம் வருட மாணவர்கள் தலையிட்டதால் 3 ஆம் வருட மாணவர்களுக்கும் 4 ஆம் வருட மாணவர்களுக்கும் இடையே நேற்றுக் கைகலப்பு ஏற்பட்டது.

இரும்புக் கம்பிகள் மற்றும் குண்டாந்தடிகள் கொண்டு அவர்கள் கைகலப்பில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கு பெரும் குழப்பம் ஏற்பட்ட நிலையில் அது தொடர்பில் சிலர் பொலிஸாருக்கும் அறிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் கோப்பாய் பொலிஸார் அங்கு விரைந்தனர்.

எனினும் நிர்வாகத்தினர் மாணவர்கள் பிரச்சினையில் தலையிட்டு அதனைத் தீர்த்ததாகத் தெரிவிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்துக்கு வெளியே மாணவர்கள் குழப்பத்தில் ஈடுபட்டால் பொலிஸார் அதில் தலையிடுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தினுள் இடம்பெறும் பிரச்சினைகள் தொடர்பில் பல்கலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் கேட்டபோதே மாணவ ஆலோசகர், இதனை விசாரணை செய்யக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்தக் குழப்பத்துடன் தொடர்புடையவர்களைப் பல்கலைக் கற்றல் செயற்பாடுகளில் இருந்து இடைநிறுத்துவது என நேற்று முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (த–4)

### சிறுபான்மையினர் 7 பேருக்கு அமைச்சு

கொழும்பு, செப். 11

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தேசிய அரசிலுள்ள 45 இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சுப் பதவிகளுள் சிறுபான்மை சமூகத்துக்கு ஏழு அமைச்சுப் பதவிகள் கிடைத்துள்ளன.

இராஜாங்க அமைச்சுகள் நான்கும், பிரதியமைச்சுகள் மூன்றுமே இவ்வாறு கிடைத்துள்ளன. இந்த அமைச்சுகள் 2 தமிழர், 5 முஸ்லிம்களிடையே பகிரப்பட்டுள்ளன.

இராஜாங்க அமைச்சர்களாக ஐ.தே.கவின் விஜயகலா மகேஸ்வரன் – சிறுவர் விவகாரம், வே.இராதாகிருஷ்ணன் – கல்வி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேசியப்பட்டியல் உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ் – புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சிரேஷ்ட உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி– தேசிய ஒருமைப்பாடு இராஜாங்க அமைச்சும் வழங்கப்பட்டுள்ளன.

பிரதியமைச்சர்களாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பைஸல் காசிம் – சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய பிரதி அமைச்சராகவும், எச்.எம்.ஹரீஸ் –விளையாட்டுத்துறை பிரதி அமைச்சராகவும்,அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அமீர் அலி –கிராமிய பொருளாதாரப் பிரதியமைச்ச ராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (த–சி)



*அமெரிக்க தூதுவர் அதுல் கெஷாப் ,கண்டி தலதா மாளிகைக்குத் தனது பயணத்தை மேற்கொண்டார். அங்குள்ள அஸ்கிரியாவுக்கு பொறுப்பான அதிவண கலகம அத்தடசி மகன்கரிய தேரர் ,மல்வத்தைக்குப் பொறுப்பான அதிவண திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் , ரமணவுக்குப் பொறுப்பான அதிவண நப்பான பிரேமஸ்ரீ தேரர் ஆகியோரை அவர் சந்தித்துப் பேசினார்.* (த)

# மஹிந்த ஆதரவாளர்களுக்கும் ராஜாங்க, பிரதி அமைச்சுக்கள்

கொழும்பு, செப். 11

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மஹிந்த, மைத்திரி தரப்பு எனப் பிளவடைந்திருந்த கடந்த கால தேர்தல்களின் போது மஹிந்த தரப்பின் தீவிர உறுப்பினர்கள் பலருக்கு அமைச்சுப் பதவிகள் நேற்று முன் தினம் வழங்கப்பட்டுள்ளன. அதில் விசேடமாக டீ.பி.ஏக்கநாயக்க, நிஷாந்த முத்துஹெட்டிகம, அருந்திக்க பெர்னாண்டோ, நிமல் லான்ஸா, சிறிபால கம்லத், டிலான் பெரேரா மற்றும் அநுராத ஜயரத்ன ஆகியோருக்கு இராஜாங்க, பிரதி அமைச்சுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ராஜபக்ச குடும்பத்தில் எவருக்கும் எந்தவித அமைச்சுப் பதவிகளும் வழங்கப்படவில்லை.

உள்ளூராட்சித் தேர்தல்கள் விரைவில் நடத்தப்படுவதற்கான தயார்படுத்தல்களை அரசு முன்னெடுத்து வருகின்றமையால், பிளவடைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மீண்டும் இணைப்பதற்காகவே பலருக்கு இராஜாங்க, பிரதி அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

### அவன்கார்ட் குறித்த உண்மைகள் அம்பலப்படுத்தப்படும்

அவன்கார்ட் பாதுகாப்பு நிறுவனம் குறித்த உண்மைகள் நாடாளுமன்றில் அம்பலப்படுத்தப்படும்" – என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் 'அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவன்கார்ட் நிறுவனத்தின் மிதக்கும் ஆயுதக் கப்பல் தொடர்பில் பாரிய சர்ச்சை உருவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ச உள்ளிட்ட பலரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

பின்னர் வழக்கு விசாரணைகள் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 22ஆம் திகதி நாடாளுமன்றில் இந்த விடயங்கள் பற்றி விசேட உரையொன்றை ஆற்றவுள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ளார். (த)

# ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் நால்வர் நேற்று விபத்தில் சாவு

கொழும்பு, செப்.11

மினுவாங்கொட பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில், ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த நான்கு பேர் உயிரிழந்ததுடன், மேலும் ஆறு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கொழும்பு மினுவாங்கொட வீதியில், மிரிஸ்வத்த என்ற இடத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் டிபெண்டர் வாகனம் ஒன்று, முன்னால் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றை முந்திச்செல்ல முயன்ற போது, எதிரே வந்த மற்றொரு பஸ்ஸுடன் மோதியது.

இரண்டு பஸ்களுக்கும் இடையில், ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் டிபெண்டர் வாகனம் சிக்கிக் கொண்டதால், இரு அதிகாரிகள் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் இருவர் பின்னர் உயிரிழந்தனர். உயிரிழந்த நால்வரில் ஒருவர் பெண் அதிகாரியாவார் என ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு அறிவித்துள்ளது.

மேலும் 6 அதிகாரிகள் படுகாயமடைந்த நிலையில், கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த–வ)

# 40 குடும்பங்களுக்கு நிரந்தரமான வீடுகள்

## கனேடியத் தமிழர் பேரவை ஏற்பாட்டில் சரவணபவன், சுமந்திரன் நடவடிக்கை

திருமலை, செப் 11

திருகோணமலை மூதூர் பகுதியில் வாழும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 40 குடும்பங்களுக்குக் கனேடியத் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சரவணபவன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

திருகோணமலை மூதூர் பிரதேசத்தின் சம்பூர் கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்து நீண்டகாலமாக இடைத்தங்கல் முகாம்களில் வசித்துத் தற்போது சொந்த இடம் திரும்பியுள்ள குடும்பங்களில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 40 குடும்பங்களுக்கே இவ்வாறு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்காகக் கனேடியத் தமிழர் பேரவையினால் எதிர்வரும் 13ஆம் திகதி கனடாவில் விழிப்புணர்வுப் பேரணி ஒன்றும் நடத்தப்படவுள்ளது. இந்தப் பேரணியில் குறித்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளதோடு இவர்கள் மூலம் மூதூர்ப் பகுதியில் 40 நிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த–101)

# எவ்வித பயம், பக்கச்சார்பின்றி உண்மைகளை அறிவியுங்கள்

## ஊடகத்துறை அமைச்சர் கயந்த தெரிவிப்பு

கொழும்பு, செப்.11

எவ்வித பயமும், பக்கச்சார்புகளுமின்றி சுதந்திரத்துடன் உண்மையான நீதியான அனைத்து செய்திகளையும் மக்களுக்கு அறிவியுங்கள் என ஊடகவியலாளர்களிடம் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

புதிதாக நியமனம் செய்யப்பட்ட, நாடாளுமன்றப் புனரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக நேற்றுக் காலை வெகுசன ஊடக அமைச்சில் வைத்துத் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

பதவியேற்பின் பின்னர், அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

செய்திகளை அறியப்படுத்தும் ஊடகவியல் தொழில் என்பது புனிதமானதொன்றாகும். எனவே அதனை எவ்வித பயமுமின்றிச் செய்யுங்கள்.

இனிமேலும் உயர் பதவியிலுள்ளவர்களால் எந்தவொரு ஊடகவியலாளருக்கும் துன்பங்கள், தொல்லைகள் இடம்பெறுவதற்கு இடமளிக்க மாட்டோம்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் ஊடகவியலாளர்கள் பயத்துடனும் அடிமைத்தனமாகவும் தொழில் செய்து வந்தனர். அவ்வாறிருந்தும் பல ஊடகவியலாளர்கள் பயத்தின் காரணமாக உயிரச்சம் கொண்டு தமது தாய்நாட்டினை விட்டு வெளிநாடுகளுக்குத் தப்பியோடியுள்ள சம்பவங்களும் உண்டு. இருந்த போதிலும் அவ்வாறானதொரு கடினமையான சூழ்நிலை திரும்பவும் இந்நாட்டில் இடம்பெற இடமளிக்கமாட்டோம்.

அனைத்து ஊடகவியலாளர்களும் நீதியாகவும் சுதந்திரமாகவும் தமது தொழிலை செய்ய முடியும். அத்துடன் ஊடகப் பயிற்சி நிலையங்களை மேலும் அபிவிருத்தி செய்வதன் மூலம் ஊடகவியல் தொழிலின் தரத்தினை நாம் மேலும் உயர்த்த முடியும் –என்றார். (த–வ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் இன்று பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ம–108)

# கிங்ஸ்ரார், சலஞ்சர்ஸ் அடுத்த சுற்றுக்குள்; ஞானவைரவர், கலையொளியை வீழ்த்தி



யாழ்ப்பாணம், செப். 11

மாதனை விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தி வரும் துடுப்பாட்டத் தொடரில் சங்கானை கிங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

**கிங்ஸ்ரார் எதிர் ஞானவைரவர்**

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் சங்கானை கிங்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் புத்தூர் ஞானவைரவர் விளையாட்டுக் கழகமும் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கிங்ஸ்ரார் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சூர்யா 38 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஞானவைரவர் அணி சார்பாக தர்சன் 3 இலக்குகளையும் கயூரன், விதுரன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினார்.

131 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய புத்தூர் ஞானவைரவர் அணி 10 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 82 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 48 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது. அதிகபட்சமாக கயூரன் 18 ஓட்டங்களையும் சூரி 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிங்ஸ்ரார் அணி சார்பாக நிசான், திலக்சன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் சோபன், யோகதாஸ் இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

**சலஞ்சர்ஸ் எதிர் கலையொளி**

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் உடுவில் சலஞ்சர்ஸ் அணியை எதிர்த்து கலையொளி அணி மோதியது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சலஞ்சர்ஸ் அணி 10 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக திலீப் 35 ஓட்டங்களையும், பிராக்கன் 18 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கலையொளிஅணிசார்பாகபிரதீஷ் 3 இலக்குகளையும் தீபன், கோகுலன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

81 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் களமிறங்கிய யாழ். கலையொளி விளையாட்டுக் கழகம் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 77 ஓட்டங்களைப் பெற்று வெறும் 3 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக கோகுலன் 40 ஓட்டங்களையும் தர்சன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சித்து 3 இலக்குகளையும் பிர[illegible]ஷ் பிரதாப் தலா 2 இலக்கையும் கைப்பற்றினர். (ம–108)

## ஆதிசக்தி அணிக்கு இலகுவெற்றி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டு ஆட்டங்களில் ஒன்றில் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றுள்ளது. மற்றொரு ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

**கில்லறி எதிர் ஞானமுருகன்**

முதலாவது ஆட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் மோதியது. ஆரம்பம் முதலே இரண்டு அணியினருக்கும் கோல் போடும் வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்ற போதிலும், எந்தவொரு வாய்ப்பும் கோலாக மாற்றம் பெறவில்லை. இதே நிலைமை இறுதி வரை நீடிக்க, ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது. ஆட்டநாயகனாக கில்லறி அணியின் கோல் காப்பாளர் சரத்பாபு தெரிவுசெய்யப்பட்டார்.

**ஆதிசக்தி எதிர் சென்.ஜோசப்**

தொடர்ந்து இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மன்னார் சென்.ஜோசப் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டத்தின் 10 ஆவது நிமிடத்தில் சென்.ஜோசப் அணியின் நட்சத்திர வீரர் டிக்கோணி ஒரு கோலை அடிக்க சென்.ஜோசப் முன்னிலை பெறத் தொடங்கியது. இருப்பினும் ஆதிசக்தியின் வீரர் பிரசாந்தன் 43 ஆவது நிமிடத்தில் தலையால் முட்டி கோலைப் பெற்றதன் மூலம் ஆட்டத்தை சமநிலைபடுத்தினார். 1:1 என்ற கோல் கணக்கில் ஆட்டத்தின் முதல்பாதி முடிவுக்கு வந்தது.

இரண்டாம் பாதியின் ஆரம்பத்திலேயே பிரசாந்தன் மற்றுமொரு கோலையும் தொடர்ந்து சகவீரர் கௌரிதாசன் 19 ஆவது நிமிடத்தில் மேலும் ஒருகோலையும் பதிவு செய்ய முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் ஆதிசக்தி வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக பிரசாந்தன் தெரிவுசெய்யப்பட்டார். (ம–108)

## கிண்ணம் வென்றது சென்.அன்ரனிஸ்

கரணவாய், செப். 11

வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் மருதங்கேணி கணேசானந்தா விளையாட்டுக் கழகத்தை 58 ஓட்டங்களால் தோற்கடித்து வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது தாளையடி சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தாளையடி சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 12 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக றெமிசன் 37 ஓட்டங்களையும், லதீபன் 28 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கணேசானந்தா லோகனன், விது ஆகியோர் தலா 2 இலக்குகளை கைப்பற்றினர்.

134 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கணேசானந்தா அணி எதிரணியின் பந்து வீச்சுக்கு முகம் கொடுத்து ஓட்டங்களைப் பெறுவதற்கு பெரும்சிரமங்களைச் சந்தித்ததுடன் 67 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்து 58 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக லோயனன் 15 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சென்.அன்ரனிஸ் அணி சார்பாக றெமின்சன் 3 இலக்குகளையும் லதீஸ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாகவும் தொடர் ஆட்ட நாயகனாகவும் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த றெமின்சன் தெரிவுசெய்யப்பட்டார். (ம–108)

## தேசிய மட்ட குத்துச் சண்டை
## செம்மலை ம.விக்கு 4 பதக்கங்கள்



மாங்குளம், செப். 11

தேசியமட்ட கனிஷ்ட பிரிவில் பெண்களுக்கான குத்துச் சண்டை தொடரில் முல்லைத்தீவு செம்மலை மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 4 மாணவிகள் ஒரு வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்கள் உட்பட நான்கு பதங்கங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த 28ஆம் திகதி தேசிய குத்துச் சண்டை சம்மேளனத்தின் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற 17 வயதுக்குட்பட்ட கனிஷ்ட பிரிவுப் பெண்களுக்கான குத்துச்சண்டை தொடரில் முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த கருத்திகா வெள்ளிப் பதக்கத்தை யும், உதயநந்தினி, லோஜி, தனுஸ்கா ஆகியோர் வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுக்கொண்டனர். இவர்க ளைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன் கிழமை பாடசாலை சமூகத்தினரால் நடத்தப்பட்டது. (ம–422)

## ரென்னிஸ் மைதான திறப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 11

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட வாமதேவா ஞாபகார்த்த ரென்னிஸ் திடல் நேற்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு யாழ்.ஆயர் தோமஸ் சவுந்திர நாயகம் அடிகளாரால் திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நினைவுக் கல்லை திருமதி வாமதேவா சொர்ணாம்பிகை திறந்து வைத்தார். சிறப்பு விருந்தினர்களாக தியாகி அறகொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் தியாகேந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பளர் மாணிக்கராசா, சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கராஜா ஆகியோர் கலந்துகொண்டனர். (ம–23)



## சென்.ஜோசப் அபார வெற்றி

யாழ்ப்பாணம், செப். 11

மன்னார் உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான உதை பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மன்னார் நகரசபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அடம்பன் ஐக்கிய அணியை எதிர்த்து பனங்கட்டுக்கொட்டு சென்.ஜோசப் அணி மோதிக்கொண்டது. இதில் பனங்கட்டுக்கொட்டு சென்.ஜோசப் அணி 6:0 என்ற கோல கணக்கில் வெற்றிபெற்றது. (ம–23)

## சம்பியனானது சிறிபதி

கிளிநொச்சி, செப். 11

புலோப்பளை, சிந்தாத்திரை மாதாவின் திருநாளை முன்னிட்டு முன்னாள் பங்குத்தந்தை அமரர் கருணாரட்ணம் நினைவாக நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரில் பளை சிறிபதி அணி சம்பியனாகியுள் ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சிறிபதி அணியை எதிர்த்து துர்க்கா அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிபதி அணி 3 இலக்குகள் இழப்புக்கு 64 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அமலதர்சிகன் 18 ஓட்டங்களையும் அபிராம் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

65 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய துர்க்கா அணி 5 பந்துப் பரிமாற்றங்களில் 43 ஓட்டங்களைப் பெற்று 21 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஆட்டநாயகனாகவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் அமலதர்சிகனும் சிறந்த பந்துவீச்சாளராக துர்க்கா அணியின் சசியும் தெரிவு செய்யப்பட்டனர். வெற்றி பெற்ற அணிக்கு கிண்ணத்தை புலோப்பளை பங்குத்தந்தை வழங் கினார். (ம–ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹபீஸுக்கு உள்ளூரில் அனுமதி

பந்துவீச்சில் தவறு இருப்பதாக தடைசெய்யப்பட்ட பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி சகலதுறை வீரர் ஹபீஸுக்கு உள்ளூர் ஆட்டங்களில் பந்துவீச அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நியூசிலாந்துக்கு எதிரான தொடரின் போது இவரது பந்து வீச்சில் சந்தேகம் ஏற்பட்டது. உடனே அவருக்கு தடை விதிக்கப்பட்டது.

அதன்பின்னர் அவர் தனது பந்து வீச்சைச் சரி செய்து கொண்டதால் மீண்டும் சர்வதேச ஆட்டங்களில் பந்துவீச அனுமதிக்கப்பட்டார்.

ஆனால், கடந்த ஜூன் மாதம் இலங்கைக்கு எதிரான காலி டெஸ்டில் விளையாடும்போது அவரது பந்துவீச்சில் மீண்டும் சந்தேகம் எழுந்தது. இதனால் சர்வதேச ஆட்டங்களில் ஓராண்டு பந்துவீசத் தடை விதிக்கப்பட்டது.

தற்போது பாகிஸ்தானில் உள்ளூர் ரி-20 தொடர் நடைபெற இருக்கிறது.

இதில் ஹபீஸ் லாகூர் அணிக்காக விளையாட உள்ளார். குறித்த தொடரில் அவர் பந்துவீச அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம)

# முர்ரே அதிர்ச்சித் தோல்வி



சர்வதேச அங்கீகாரம் பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்கன் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடாலைப் போன்று இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

காலிறுதிக்கு முன்னைய சுற்றான நான்காவது சுற்றில் உலகின் 3ஆம் நிலை வீரரான இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே, தரவரிசையில் 15ஆவது இடத்தில் இருக்கும் ரஷ்யாவின் கெவின் அண்டர்சனுடன் மோதினார்.

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய கெவின், ஆட்டத்தின் முதல் இரண்டு செற்களை 7-6, 6-3 என்ற புள்ளிகள் கணக்கில் கைப்பற்றினார்.

மூன்றாவது செற்றை, 7-6 என்ற புள்ளிக் கணக்கில் முர்ரே போராடிக் கைப்பற்றினார்.

இருப்பினும் நான்காவது செற்றில் சிறப்பாக விளையாடிய கெவின் அதனை 7-6 என்ற புள்ளிக் கணக்கில் கைப்பற்றி காலிறுதிக்கு முன்னேறினார். நடால் நேற்று முன்தினம் தொடரிலிருந்து அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறியநிலையில் அந்த வரிசையில் தற்பொழுது முர்ரேயும் இணைந்துள்ளார்.

இவர்களின் விலகலால் ஜோகோவிக், பெடரர் இவர்களுக்கான வாய்ப்பு இன்னும் அதிகரித்துள்ளது. (ம)



# ஹடின் ஓய்வு

ஆஸ்திரேலிய இலக்குக் காப்பாளர் ஹடின் சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்று அறிவித்தார். ஆசஸ் டெஸ்ட் தொடரில் பாதியில் நீக்கப்பட்ட அவர் தற்போது இந்த முடிவை எடுத்துள்ளார்.

37 வயதான ஹடின் 66 டெஸ்ட் ஆட்டங்கள், 126 ஒருநாள் ஆட்டங்கள் மற்றும் 34 ரி-20 ஆட்டங்கள் ஆகியவற்றில் விளையாடி இருக்கிறார். சமீபத்தில் ஆஸ்திரேலிய வீரர்களான ரியான் ஹரிஸ், கிளார்க், ரோஜர்ஸ், வற்சன் ஆகியோர் ஓய்வு பெற்றனர். அந்த வரிசையில் தற்போது ஹடினும் இணைந்துள்ளார். ஓய்வு தொடர்பாக ஹடின் தெரிவித்ததாவது - என்னுடைய 4 வயது மகளுக்குப் புற்றுநோய் பாதிப்பு உள்ளதால் அவருக்குத் துணையாக இருப்பதற்காகவே இப்படியொரு முடிவை எடுத்தேன். எல்லோருக்கும் குடும்பம்தான் முக்கியம், நானும் அதுபோலத்தான். எந்தவொரு தந்தைமாரைப் போலவே நானும் உள்ளேன், எனது மகளின் சிகிச்சை சரியான திசையில் சென்று கொண்டிருக்கிறது. என்னால் இன்னும் ஆடமுடியும் என்று மனைவி கூறினார். ஆனால் எனக்கான வாய்ப்பை இழக்கும் நிலையை நானே உருவாக்கினேன். அதற்காக நான் சிறிதும் வருத்தப்படப் போவதில்லை. ஏனெனில் வேறொரு இடத்துக்கு நான் தேவைப்படுகிறேன். அதுதான் எனக்கு முக்கியம் என்றார். (ம)

## நாணயச் சுழற்சியில் தீர்மானிக்கப்பட்ட கிண்ணம் சென்.லூட்சியா அணியைச் சென்றடைந்தது

யாழ்ப்பாணம், செப். 11

மன்னார் உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் ஏ பிரிவு அணிகளுக்கு இடையிலான 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை மன்னார் நகரசபை மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் பள்ளிமுனை சென்.லூட்சியா அணியை எதிர்த்து பனங்கட்டுக்கொட்டு சென்.ஜோசப் அணி மோதிக் கொண்டது. இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்து.

வெற்றிதோல்வியை நிர்ணயிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைகளும் சமநிலையானதால் நாணயச்சுழற்சி முறை மூலம் பள்ளிமுனை சென்.லூட்சியா அணி வெற்றிபெற்று சம்பியன் ஆனது. (ம-23)

# சர்மாவின் ஆக்ரோசம் தவிர்க்கப்பட வேண்டும்

இலங்கைக்கு எதிரான தொடரில் சர்மாவின் ஆக்ரோசம் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. இனிவரும் தொடர்களில் அவர் அளவுக்கு அதிகமான ஆக்ரோசத்தை தவிர்க்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் அஸ்வின். சர்மா தொடர்பாக அஸ்வின் தெரிவித்ததாவது 'சர்மா மிகுந்த ஆக்ரோசம் அடைந்தார். இலங்கை வீரர்களுடன் தேவையில்லாத மோதலில் ஈடுபட்டார். உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாமல் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதற்காக அவருக்கு ஒரு டெஸ்டில் விளையாட தடை விதிக்கப்பட்டது. இதனால் தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்டில் இசாந்த் சர்மா விளையாட இயலாது. இது இந்திய அணிக்கான ஒரு பின்னடைவே. எமது செயல் எம்மையே தாக்கும் என்பதை அவர் உணர்ந்துகொள்ள வேண்டும். அதேநேரத்தில் மைதானத்தில் சர்மா வாக்குவாதத்தில் ஈடுபட்ட பின்னர் பிரசாத் பவிலியன் வரை அவரை விரட்டிச் சென்றது அதைவிட தவறு. மீண்டும் வரும் போது சர்மா கட்டுப்பாட்டுடனான ஆக்ரோசத்தை வெளிப்படுத்துவார். அவர் மேலும் பல ஆட்டங்களை வென்று கொடுப்பார்'. என்றார். (ம)






# சாய்னா முன்னேற்றம்

ஜப்பானில் நடைபெற்றுவரும் பூப்பந்தாட்டத் தொடரில் இந்திய வீராங்கனை சாய்னா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள் ளார்.

5 கோடி ரூபாய் பரிசுத்தொகை கொண்ட இந்தத் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால், 21-14, 22-20 என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் புசனனை வீழ்த்தினார். இரண்டாவது சுற்றில் இவர் ஜப்பான் வீராங்கனை மினாட்சு மிதானியை எதிர்கொள்கிறார். மினாட்சு மிதானிக்கு இந்தத் தொடர் நடைபெறும் அத்தனை ஆடுகளங்களும் பழக்கப்பட்ட ஆடுகளங்கள் என்ற காரணத்தினால் இரண்டாவது சுற்று சாய்னாவுக்கு சவாலாகவே அமையும். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறுதியில் சானியா - கிங்கிஸ்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்கன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியா – கிங்கிஸ் இணை இறுதியாட்டத்துக்கு முன்னேற தகுதிபெற்றுள்ளது.

மகளிர் இரட்டையர் அரையிறுதி ஆட்டத்தில், தரவரிசையில் முதல் நிலையில் இருக்கும் சானியா மிர்சா–மார்ட்டினா கிங்கிஸ் இணை, இத்தாலியின் சாரா எரானி – பிளேவியா பென்னட்டா இணையை சந்தித்தது. 77 நிமிடங்கள் பரபரப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் சானியா இணை 6–4, 6–1 என்ற நேர்செற்களில் வென்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியது. (ம)

# ஒருநாள் தலைவராகவும் கோக்லி?

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கும் விராட் கோக்லியை இந்திய அணியின் தலைவராக நியமிக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஆலோசித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

டோனி டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வுபெற்ற போது டெஸ்ட் ஆட்டங்களுக்குத் தலைவராக விராட் கோக்லி நியமிக்கப்பட்டார். இதனையடுத்து இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்த இந்திய அணி இவரது தலைமையில் 22 ஆண்டுகளுக்கு பிறகு டெஸ்ட் தொடரை ... ப்பற்றி அசத்தியது. இந்நிலையில் தென்னாபிரிக்க அணி அடுத்த மாதம் இ... ில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது. இதில் இந்திய ஒருநாள் அணிக்... கோக்லியை தலைவராக நியமிக்க திட்டமிட்டிருப்பதாக சொல்லப்படுகிறது

அதே சமயம் டோனியை ரி–2... ங்களுக்கு மட்டும் தலைவராக நியமிக்க இந்திய கிரிக்கெட் கட்... ுச்... முடிவு செய்திருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இரு... டோனியின் கருத்தையும் கேட்டு அதற்கு பின்னரே முடிவெடுக்க ... ன்பதில் இந்திய தேர்வுக்குழுவினர் தெளிவாக உள்ளனர். இந்திய அ... ொடர்பாக உறுதியான தகவல்கள் எதிர்வரும் 15ஆம் திகதி வெளியாகும். (ம)



# செரீனாவுக்கே அதிகமான வாய்ப்பு பல்டி அடித்தார் செரபோவா

நியூயோர்க் நகரில் நடைபெற்று வரும் அமெரிக்கன் ரென்னிஸ் தொ... பெண்கள் ஒற்றையர் பிரிவி... பியனாவதற்கு செரீனாவுக்கே ... வாய்ப்புக்கள் இருப்பதாக செரபோவா கருத்துத் தெரிவித்துள்ளார். தொடர் ஆரம்பமாவதற்கு முன்னதாகவே காயம் காரணமாக விலகினார் செரபோவா. தரப்படுத்தலில் இரண்டாம் நிலை வீராங்கனையான இவரின் விலகலால் முதல்நிலை வீராங்கனையான செரீனாவுக்கு அதிக வாய்ப்புக்கள் இருப்பதாக கருதப்பட்டது. ஆனால் தனது விலகல் செரீனாவுக்கு வாய்ப்புக்கள்ள அதிகரிக்கவில்லை என்றும் வோஸ்னியாக்கி, கிவித்தோவா, பென்சிச் போன்ற திறமையான வீராங்கனைகள் கிண்ணம் வெல்லக்கூடிய சாத்தியக்கூறு இருப்பதாகவும் தெரிவித்திருந்தார் செரபோவா. ஆனால் இவர் களில் கிவித்தோவாவை தவிர எவரும் தற்பொழுது இல்லை. இந்நிலையில் தற்பொழுது செரீனாவுக்கே அதிக வாய்ப்புக்கள் இருப்ப தாக செரபோவா அந்தர் பல்டி அடித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக செரபோவா தெரிவித்ததாவது – நடப்பு அமெரிக்கன் தொடரில் கிண்ணம் வெல்லக்கூடிய வாய்ப்புக்கள் செரீனாவுக்கே அதிகம். வோஸ்னியாக்கி, பென்சிச், வீனஸ், சபரோவா இவர்களின் விலகல் செரீனாவுக்கு அதிகமான வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. ஒருவர் தொடர்ந்து ஏக ஆதிக்கம் செலுத்துவதை நான் விரும்பவில்லை. இதனாலேயே மற்றுமொரு வீராங்கனை கிண்ணம் கைப்பற்ற வேண்டும் என்று தெரிவித்தேன். ஆனாலும் செரீனா உறுதியாக கிண்ணம் வெல்வார் என்றில்லை. இறுதிவரை மற்றுமொரு வீராங்கனைக்கும் வாய்ப்புக்கள் உண்டு என்றார். (ம)

Architectural CAD Center
Prsonal - Group - Visiting Glasses
Jaffna - Vavuniya - Colombo
Diploma in Engineering Drawing &
Auto CAD-2014
Civil-Mechanical
Interior Design Ideas
Contact No:0718617972 - 0775116320 - 0212053848

FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH IN NORTH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM
MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி. 985 மாணவர்கள் French கற்றுள்ளனர்....
0779 789 456 / 021 221 7781
No. 40, பலாலி வீதி.
TP: 021 3202973
சாவகச்சேரி.
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

IIS கணனி கற்கை நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு II 19/09/2015
பிரிவு III 28/09/2015
கற்கை நெறிகள்
• Microsoft Office
• Multimedia
• Designing
• DeskTop Publishing
• Hardware Technology
• Java Programming
• Networking
• Computerized Accounting
• Eng. Drawing & AutoCAD
• Visual Programming (C# /.NET)
• Android Apps
• Ethical Hacking
மேலதிக விபரங்களுக்கு 071 777 4 555
IIS என்றும் உங்கள் ஒளிமயமான எதிர்காலத்தின் வழிகாட்டி
INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 209 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
021 222 2831 / 071 777 4 555

கல்விக் கருத்தரங்கு
O/L, A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கான ஆலோசனைக் கருத்தரங்கு.
திகதி : 14-09-2015
நேரம் : காலை 10 மணிக்கு
இடம் : New Science World, Brown Road, Jaffna.
தொ.பே.இல : 021-4927088/0777592666

aat College
aat கற்கை நெறிக்கான புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 12.09.2015, 9.00 மணி
T.P: 021 320 9799 / 077 078 2326

மணமகள் தேவை
யாழ். இந்து உயர் கௌரவ குடும்பம் 71, பூச நட்சத்திரம், 5' 6' Computer Diploma படித்துவிட்டு தனியார் துறையில் தொழில் புரியும் நன்நடத்தை உள்ள தீய பழக்கங்கள் எதுவும் அற்ற நன்மதிப்பைப் பெற்ற மணமகனுக்கு படித்த அழகிய தகுதியான மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
யாழ் மாவட்டம், அரச உத்தியோகம், சைவ போசனம் விரும்பத்தக்கது. எதுவும் கட்டாயம் கிடையாது.
வாழ்க்கைத்துணையை இழந்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு:- 077 2697 523

# இன்றும் இங்கிலாந்து வென்றேயாகவேண்டும்

இங்கிலாந்து – ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட நான்காவது ஒருநாள் தொடரின் நான்காவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் வென்றேயாகவேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்குகிறது இங்கிலாந்து.



ஏற்கனவே நடைபெற்று முடிந்த முதல் மூன்று ஆட்டங்களில் முதல் இரண்டு ஆட்டங்களில் ஆஸியும் மூன்றாவது ஆட்டத்தில் இங்கிலாந்தும் வெற்றிபெற்று தொடர் 2–1 என்று ஆஸியின் பக்கமாக உள்ளது. இதனால் இன்றைய ஆட்டத்திலும் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றால் கிண்ணம் ஆஸியிடம் சென்றுவிடும். இங்கிலாந்து வெற்றிபெற்றால் மட்டுமே தொடர் 2–2 என்று சம நிலையாகி வாழ்வா? சாவா? நிலை மையில் இறுதியாட்டம் நடைபெறும். இதனால் இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெற்றேயாக் வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்குகிறது கிரிக் கெட்டின் தாயகம். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.